கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 14 – 20 மே 1998 முழக்கம்: 174

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126

# இரண்டாம் ஆண்டில் ஜெயசிக்குறுய்



# நாம் போர்க்கள வரலாற்றை உருவாக்கியுள்ளோம்

## விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் பிரகடனம்

பிரதான இராணுவபலத்தை ஓர் போர்முனையில் குவித்து, கனரக தாங்கிகளையும், குண்டு வீச்சு விமானங்களையும் பாவித்து தமிழர் பிரதேசங்களை இலகுவாக ஆக்கிரமித்து விடலாம் என்ற சிங்கள இனவாத போர்த் தந்திரம் எமது வீரமிகு போராளிகளின் தியாகத்தால் - உழைப்பால் இன்று வன்னிப் போர்முனையில் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது என விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கைக்கு எதிராக ஓராண்டு காலமாக விடுதலைப் புலிகள் நடாத்தும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போர்பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

சுமார் ஐம்பதினாயிரம் படைகளை எதிர்த்து நின்று எமது சின்னஞ்சிறு தேசம் ஓராண்டுகாலம் தொடர்ச்சியாக போராடியமை ஒரு போர்க்கள வரலாறு எனக் குறிப்பிட்ட

(☞ 2ம் பக்கம்)

ஜெயசிக்குறுய் ஓராண்டு நிகழ்வு (விசேட தொகுப்பு) பக்—16,17

# இந்தியா அணுகுண்டுகளை வெடிக்கவைத்தது

## உலக நாடுகள் அதிர்ச்சி

(11.05.98 புதுடெல்லி)

இன்று மாலை 3.45 மணியளவில் ராஜஸ்தான் மாநிலத்தில் பொக்ரான் தளத்தில் வைத்து இந்தியா மூன்று நிலக்கீழ் அணுகுண்டுகளை வெடிக்க வைத்தது. புதிய பாரதிய ஜனதாக் கட்சி அரசின் இம் முடிவு மேற்குலக நாடுகளையும் தென்னாசிய நாடுகளையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

அணு குண்டு வெடிப்பை உலகுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்த இந்தியப் பிரதமர் திரு வாஜ்பாய், பரிசோதனை வெடிப்புக்கள் வெற்றிகரமாக நடந்தேறியதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இத் திடீர் முடிவுக்கு எதிராக அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை,

(☞ 2ம் பக்கம்)

## காணாமற் போனோரின் பெற்றோர் ஐ.நா. பிரதிநிதி முன்னால் கதறி அழுதனர்

கடந்த 6ம் திகதி அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஐ.நா விசேட பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணு அவர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடாத்திய சமயம் சிறீலங்கா படையினரால் கைதாகி காணாமற் போன இளைஞர், யுவதிகளின் பெற்றோர், உறவினர்கள் வெளியே கூடிநின்று கதறி அழுத காட்சி திரு. ஒட்

(☞ 2ம் பக்கம்)

# சிறீலங்கா மௌனம்

(11.05.98)

ஒருவருடத்தை பூர்த்தி செய்யும் சிறீலங்கா அரசின் பாரிய இராணுவ நடவடிக்கை தொடர்பாக சிறீலங்கா இராணுவத் தலைமையகமும் அரசும் மௌனம் சாதிக்கின்றன.

சிறீலங்கா இராணுவ வரலாற்றில் அதிக இழப்புக்களை கொண்டுள்ள ஜெயசிக்குறுய் நடவடிக்கை விடுதலைப் புலிகளின் போராற்றலினை தமது இராணுவத்தின் பலத்திற்கு சமனாக கருதவேண்டிய கட்டாயம் காரணமாகவே இவ் மௌனம் சாதிக்கப்படுகிறது என கொழும்பு மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road,
Wembley,
Middx. HA0 4TL.
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# விடுதலைப் புலிகள்–ஐ.நா தூதர் வன்னியில் பேச்சுக்கள்

தமிழ் சிறுவர்களின் வாழ் நிலை பற்றி ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத் தின சார்பில் விசேட பிரதி நிதியாக வருகை தந்திருந்த திரு. ஒலாரே ஒண்டுண்ணு அவர் கள் வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோச கர் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறை பொறுப்பாளர் திரு.தமிழ்ச்செல்வன் ஆகி யோரைச் சந்தித்துப் பேச்சுக் களை நடாத்தியுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி துணுக் காயில் நடைபெற்ற இச் சந் திப்பு காலை ஆறு மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணிவரை நீடித்துள்ளது. விடு தலைப் புலிகளுடனான பேச் சுக்களின் முழு விபரங்களை யும் செய்தியாளரிடம் தெரி விக்க மறுத்த ஒண்டுண்ணு அவர்கள் சமாதானம் தழைப் பதற்காக போர் நிறுத்தப்பட்டு முழுமையான சமாதானத்தை அடைய இருதரப்பும் பேச வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களையடுத்து வவுனியா செயலகத்தில் நடைபெற்ற கூட் டமொன்றிலேயே இக் கருத் தினை ஒட்டுண்ணு அவர்கள் தெரிவித்திருந்தார்.

திரு. ஒட்டுண்ணுவுடனான பேச்சுக்களின்போது விடுத லைப் புலிகள் தரப்பில் ஐ.நா வின் நடவடிக்கைகளுக்கு ஒத்து ழைப்பு வழங்க உடன்பாடு ஒன்று காணப்பட்டதாகவும் வவுனியாச் செய்திகள் தெரி விக்கின்றன.

# சுன்னாகத்தில் மூவர் சுட்டுக் கொலை

சுன்னாகம் மின்சார நிலைய வளாகத்திற்கருகில் நின்ற மக் கள் மீது சிறீலங்கா இராணு வத்தினர் மேற்கொண்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 7-ம் திகதி காலை நடைபெற்ற இச் சம்பவம் சுன்னாகப் பகுதி மக்களை பெரும் பீதிக்குள்ளாக் கியுள்ளது. கொல்லப்பட்டவர்க ளின் சடலங்களை தம்முடன் எடுத்துச் சென்ற புன்னாலைக் கட்டுவன் இராணுவ முகா மைச் சேர்ந்த சிப்பாய்கள் அச் சடலங்களை முகாமில் வைத் திருந்ததுடன், சுன்னாகம் மின் சார நிலையத்தில் இவர்கள் களவாட வந்ததாலேயே தாம் சுட்டுக் கொன்றதாகவும் தெரி வித்துள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாணத்திலி ருந்து கிடைக்கும் செய்திகளின் படி இராணுவத்தினரால் ஏற் கனவே கைதுசெய்யப்பட்டவர் களே அதிகாலைவேளையில் இப் பகுதிக்கு கொண்டுவரப் பட்டு சுட்டுக் கொல்லப்பட் டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

# 'ஜெயசிக்குறுய்' எவ்வாறு நியாயப்படுத்துவது ?

**- அத்தாஸ் -**

எம்மிடம் உள்ள ஆட்பலம், ஆயுத பலம், விமான - கடல் பலங்கள் என்பவற்றின் அடிப் படையில் ஒப்பிடும் போது ஒரு முழு வருடத்தில் இராணுவம் முன்னேறிய தூரமானது பாரட் டுதலுக்குரியதல்ல என சிறீலங்கா இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 'ஜெயசிக்குறுய்' இன் ஒருவருடம் பற்றி தனது கருத் தைத் தெரிவித்துள்ளார். சுமார் 1400ற்கும் மேற்பட்டோர் கொல் லப்பட்டும், 5500-ற்கு மேற்பட் டோர் படுகாயப்படுத்தப் பட் டும் உள்ளனர். பல மில்லியன் பெறுமதியான இராணுவ உப கரணங்கள் இழக்கப்பட்டு அல் லது அழிக்கப்பட்டு உள்ளது. இவற்றுனுள் பீரங்கிகளும், எறி கணைகளும், தாங்கிகளும் அடங் குகின்றன. 550 மில்லியன்களுக்கு மேல் நாளாந்தப் போர்ச் செல வீனமாக இவ் ஒருவருட காலத் தினுள் செலவழிக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நாம் போர்க்கள...

டுள்ள அனைத்துலகச் செயல கம் இன்று எமது மரபுரீதியான போராற்றல் நிரூபிக்கப்பட்டு வருகின்றது எனவும், சிங்கள இராணுவத்தின் தந்திரோபா யங்களை எம்மால் முறியடிக்க முடியும் என்பது வெளிப்படுத் தப்பட்டுள்ளது என்றும் கூறி யுள்ளது.

இந்த சமரில் வீரச்சாவ டைந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியுள்ள அனைத்துலகச் செயலகம், அவர்கள் உருவாக் கித் தந்துள்ள போராற்றலை வெற்றிக்கு அழைத்துச் செல்ல புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அயராது உழைக்க வேண்டும் எனக் கேட்டுள்ளது.


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 08.04.1977 மறைவு: 05.05.1998



## இராஜகாந்தன் ரஜனிகாந்

**எங்கள் அன்புச் சகோதரனே!**

என்ன நடந்ததுனக்கு
ஏனடா இப்படிச் செய்தாய்?

பொல்லா விதியதுவின்
போக்கற்ற கதையறியோம்?

சொல்லாமல் கொள்ளாமல்
நீ சென்ற செயல் அறியோம்?

வற்றிவிட்ட கண்ணீரோடு
உன் பெற்றாரும், உற்றாரும்
துடியாய் துடித்திருக்கும்
பொல்லாத்துயரது நாமறிவோம்

தேற்றவோர் வார்த்தையின்றி
தவியாய் தவித்திருக்கும்....

நாங்கள்
மகாஜனா பழைய மாணவர்கள்
பிரான்ஸ்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.05.98 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு Gambetta/Pere lachaise இல் உள்ள மயானத்தில் நடைபெறும். M°: Gambetta

Pub


(1ம் பக்கத் தொடர்ச்சி)

## காணாமற் போனோரின்...

டுண்ணு அவர்களை சிறிது நெகிழ வைத்துள்ளது.

மார்பிலும், தலையிலும் அடித்தபடி கதறி அழுத இவர் கள் தமது பிள்ளைகளின் கதி என்ன என்பதை தெரியப் படுத்துமாறு தூதரை கோரு மாறு உரத்த குரலெடுத்து அழுது கேட்டமையை தூதர் சிறிதுநேரம் அவதானித்த பின் னர் மக்களின் வேதனைகளை தம்மால் உணரக்கூடியதாக இருப்பதுடன், இவர்களின் உற வுகளுக்கு என்ன நடந்தது என்பதை கொழும்பு அரசியல், இராணுவ தலைமைகளை வினாவப் போவதாகவும் உறுதி யளித்திருந்தார்.

இதே வேளை ஐ.நா. பிரதி நிதியை சந்தித்த அரச சார் பற்ற தொண்டர் நிறுவனங்க ளின் பிரதிநிதிகள், சிறீலங்கா அரச இராணுவத்தின் செயற் பாடுகளால் வன்னியில் தோன் றியுள்ள பல இன்னல்களை விளக்கிக் கூறியதுடன், சிறீ லங்கா இராணுவ நடவடிக்கை கள் காரணமாக தமிழ் பகுதி யில் வசிக்கும் சிறார்களின் மனோ வளர்ச்சியில் ஏற்பட்ட பெரும் பாதிப்பினையும் சுட் டிக்காட்டியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இந்தியா...

ஜேர்மன் அரசு இந்தியாவின் அணுகுண்டு பரிசோதனையை பகிரங்கமாக கண்டித்துள்ளது.

இக் குண்டுவெடிப்பை கடு மையாக சாடியுள்ள பாகிஸ் தான், உலக சமூகம் இந்தி யாவை கண்டிக்கவேண்டும் எனக் கோரியுள்ளது.

இதேவேளை இந்தியாவின் நடவடிக்கை, பிராந்தியப் பதட் டத்தை அதிகரிக்கும் முயற்சி என சிறீலங்கா குற்றஞ்சாட்டி யுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறீலங்கா மௌனம்

ஜெயசிக்குறுய் இன் அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி கொழும்பு இராணுவத் தலைமையகத்திற் கும், வவுனியா கூட்டுப்படை தலைமையகங்களுக்கும் இடையே குழப்பம் நிலவுவதாகவும் இத னால் மாங்குளம் மீதாக எது வித தாக்குதல்களும் கடந்த 48 மணிநேரங்களில் இடம்பெற வில்லை.


புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

**ERRANCES TRAVELS**
**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,400 Frs. |
| Madras | - | 3,600 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# தமிழீழச் செய்தித் தொகுப்பு

## தமிழீழத்தின் உணர்ச்சிப் பிரவாகம் ‘வெற்றியை எமதாக்குவோம்’

வன்னிப் பெருநிலப் பரப்பிற்கான வெற்றி நிச்சயம் சிறீலங்கா இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட நிறைவு தமிழீழத்திலும் புகலிட நாடுகளிலும் ‘வெற்றியை எமதாக்குவோம்’ என்ற கருப் பொருளுடன் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட்டு வருகிறது.

தாயக விடுதலைக்காக களத்தில் வீழ்ந்த மாவீரர்களின் நிறைவுடன் கடந்த 8ம் திகதி இந் நினைவு கூரும் வாரம் ஆரம்பிக்கப் பட்டது. குறிப்பாக 11, 12, 13-ம் திகதிகளில் புலிகளின்



குரல் வானொலிச் சோலையில் பொது அறிவுப் போட்டிகள் களத்திலுள்ள போராளிகளின் செவ்விகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதே நேரம் மாவீரர்களின் ஊர்திகளுக்கான மக்களின் வணக்க நிகழ்வு, நிழற்பட கண்காட்சிகள், தெருக் கூத்து, மக்களால் போராளிகளுக்கான உணவூட்டல் நிகழ்வு, 13-ம் திகதி நள்ளிரவு தமிழீழ குடிமக்களது வீடுகளில் தீபமேற்றும் நிகழ்வு, விளையாட்டுப் போட்டிகள் உட்பட பல விசேட நிகழ்வுகளும் ‘வெற்றியை எமதாக்குவோம்’ நிகழ்விற்காக நடாத்தப்பட்டுள்ளன.

போராளிகளாலும், பொது மக்களாலும் முன்னெடுக்கப் பட்ட இந்த நிகழ்வுகள் மிகவும் உணர்ச்சிப் பிரவாகமாக காணப் பட்டதாக தமிழீழச் செய்திகள் குறிப்பிட்டுள்ளதுடன்,



சிங்கள பௌத்தபேரினவாதம் தமிழ் மக்களுக்காகச் செய்த அநீதிகள், கொடுமைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் முகமாக பல ஒன்று கூடல்கள், நிழற்பட கண்காட்சிளும் பல இடங்களில் நடாத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளன.

‘வெற்றியை எமதாக்குவோம்’ நாளுக்காக தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களது விசேட உரையும் ஒலி, ஒளிப்பேழை நாடாக்களில் வெளியாகியுள்ளது.

‘வெற்றி நிச்சயம்’ இராணுவ நகர்வானது பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களை அகதிகளாக்கியதுடன் நூற்றுக்கணக்கான மக்களை பலியெடுத்து வரும் ஒரு நடவடிக்கையாகும்.

## போர் நிறுத்தத்தை இராணுவம் உதாசீனம் மாங்குளம் – கிளிநொச்சியில் எறிகணை வீச்சு

விடுதலைப் புலிகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட 48 மணி நேர போர் நிறுத்தத்தினை சிறீலங்கா இராணுவம் உதாசினம் செய்ததுடன், மாங்குளம் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் கடும் எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்டுள்ளது.

ஐ.நா. வின் விசேட தூதர் ஒலரா ஒட்டுண்ணோவின் விஜயத்தையொட்டி கடந்த 6, 7-ம் திகதிகளில் 48 மணிநேர போர் நிறுத்தம் ஒன்றினை தாம் மேற்கொள்ளுவதாக புலிகள் அறிவித்ததுடன், அதன்படியே போர் நிறுத்தத்தையும் நடைமுறைப் படுத்தினர். ஆனால் இந்தப் போர்நிறுத்தத்தினை ஏற்றுக் கொள்ளாத படைத்தரப்பு மேற் குறித்த போர் நிறுத்தக் காலத்தில் நூற்றுக்கணக்கான எறிகணைகளை மாங்குளம் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் குடிமக்கள் குடியிருப்புகளை நோக்கி வீசியுள்ளனர். ஆயினும் விடுதலைப்புலிகள் தமது போர் நிறுத்தத்தினைச் செவ்வையாகக் கடைப்பிடித்துள்ளனர்.

## ஊர்காவற்படை அரண்கள் மீது தாக்குதல்

அம்பாறை மாவட்டம் தம்பாட்டிப் பகுதியில் உள்ள சிறீலங்கா ஊர்காவற் படையினரின் காவலரண்கள் இரண்டின் மீது கடந்த 5-ம் திகதி நள்ளிரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தி அவற்றை அழித்துள்ளனர்.

இத் தாக்குதலின்போது ஊர்காவற் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழிப்புகள் சரியாக ஊர்ஜிதப் படுத்தாக போதிலும் அவர்களிடமிருந்து T-56 ரக துப்பாக்கி உட்பட சில இராணுவ தளவாடங்களும் கைப் பற்றப்பட்டுள்ளன.

அம்பாறைப் பகுதித் தமிழ் மக்கள் மேல் கொடிய காட்டுமிராண்டித் தனங்களை கட்டவிழ்த்தும் இவ் ஊர்காவற் படையினரே பல தமிழ் இளைஞர்களை படுகொலை செய்து வருபவர்களுமாவார்கள். இதேநேரம் மட்டக்களப்பு ஒட்டமாவடி பால இராணுவ காவலரண்கள் மீதும் புலிகள் அதேதினம் அதிகாலை வேளையில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

## பேருந்து கவிழ்ந்து 12 பேர் காயம்

அக்கராயன் அம்பல பெருமாள் பகுதியில் பேருந்து வண்டி ஒன்று கவிழ்ந்ததில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த 7-ம் திகதி மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற இவ் விபத்தின்போது பேருந்து வண்டி குப்புறக் கவிழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். பாதையின் சீரற்ற தன்மையே விபத்திற்கான காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

## உசனில் கிளேமோர் தாக்குதல்

உசன் இராணுவ முகாமில் இருந்து வீதிச் சோதனைக்கெனப் புறப்பட்ட சிறீலங்கா இராணுவப் படையணி ஒன்று விடுதலைப் புலிகளின் கிளேமோர் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்கானது. இத் தாக்குதலின் போது ஒரு சிப்பாய் கொல்லப் பட்டதுடன், மேலும் மூவர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

காலை 7 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

- ★ திருக்கோவில் விநாயகபுர மகாவித்தியாலயத்தில் கணினிப் பயிற்சிக்கான புதிய மாணவர் தெரிவு தற்போது நடைபெறுகிறது. பாடசாலை கல்வியை முடித்த வசதி குறைந்த மாணவ மாணவியரின் நலன் கருதியே இப் பயிற்சி நெறி நடாத்தப் படுகிறது.
- ★ கிழக்கு பல்கலைக் கழகத்தில் 6-வது பட்டமளிப்புவிழாவின் போது 163. பட்டதாரிகள் பட்டம் பெற்றுள்ளனர். இவர்களுள் கலைப்பீடத்தில் 51 பட்டதாரிகள்,வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் 59 பட்டதாரிகள் விஞ்ஞான பீடத்தில் 50 பட்டதாரிகள் விவசாய பீடத்தில் 3 பட்டதாரிகள் ஆகியோர் அடங்குகின்றனர்.
- ★ ஊர்காவற்துறை கரம்பன் பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களில் ஒருவர் தனது வீட்டு குப்பை கூழங்களை கூட்டிக் கொளுத்திய போது அவ்விடத்திற்குக் கீழே புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் இரண்டு பாரிய சத்தத்துடன் வெடித்துள்ளன. ஆனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.
- ★ அலரிக்காய் உட்கொண்டு தற்கொலை செய்துகொள்வோரின் தொகை மீண்டும் யாழ். குடாவில் அதிகரிப்பு. கடந்த 29-ம் திகதி சங்கானையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயார் ஒருவர் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.
- ★ கனடா செல்வதற்கான நுழைவு அனுமதி (விசா) கிடைத்த வதிரி முதியவர் ஒருவர் பலாலி விமான நிலையத்திற்கு செல்வதற்காக நெல்லியடிக்கு வந்தபோது பாரவண்டி (லொறி) மோதியதால் மரணமானார்.
- ★ இரும்பரசன் பேராசிரியர் ‘சாண்டோ’ சங்கரதாசின் 29-வது நினைவு தினம் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நினைவு கூரப்பட்டது.
- ★ மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வரட்சியினால் பயிர்ச்செய்கை கால்நடை வளர்ப்பு ஆகியன பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாக கமநல அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- ★ இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான உன்னிச்சையில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ★ கடந்த 18 ஆண்டுகளில் 460 வைத்தியர்களை யாழ். பல்கலைக் கழகம் உருவாக்கி உள்ளபோதிலும் மிகச் சொற்ப தொகையினரே தமிழர் தாயகத்தில் பணிபுரிவதாகவும், மிகுதிப்பேர் வெளிநாடுகளிலும், சிறீலங்காவிலும் பணிபுரிவதாக தெரிவிக்கப்படுகிறது.
- ★ ‘தூண்டி’ இதழின் ஓராண்டு நிறைவுவிழா கவிஞர் இ. முருகையன் முன்னிலையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றுள்ளது.
- ★ பாதையின் சீர்கேடு காரணமாக அராலியூடாக மாதகல் செல்லும் பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

## ஈழநாட்டு இதழுக்கு முதலாவது அகவை நிறைவு

வட தமிழீழ மக்களின் மனதில் தனக்கென ஓரிடத்தை பெற்றுக்கொண்ட ஈழநாடு செய்திப் பத்திரிகையின் மாதாந்த சஞ்சிகை இதழானது தனது முதலாவது அகவையினை கடந்த 9-ம் திகதி கொண்டாடியுள்ளது.

1997-ம் ஆண்டு மே மாதம் தனது முதலாவது சஞ்சிகையினை வெளியிட்ட ஈழநாடு அதன் பின்னர் தனக்கு ஏற்பட்ட பல நெருக்கடி நிலைகளுக்கும் முகம் கொடுத்தவாறே இந்த மாதாந்த இதழினை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த அகவை நிறைவினை முன்னிட்டு கடந்த 9-ம் திகதி முல்லை புதுக்குடியிருப்பு பகுதியில் பொதுக்கூட்டமொன்றும் நடாத்தப்பட்டுள்ளது. அக் கூட்டத்தில் இதழின் பணி குறித்தும் பலரும் பாராட்டிப் பேசினார்கள்.

## இரத்த வங்கியின்மையால் வைத்தியசாலையில் அவலம்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இரத்த வங்கி இன்மையால் சத்திர சிகிச்சை நோயாளர்கள் பெரும் உயிர் ஆபத்தினை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

தற்போதுள்ள நடைமுறையின்படி இரத்ததானம் வழங்குவோரின் பெயர், இரத்த வகை போன்ற விபரங்கள் பதிவேடு ஒன்றில் குறிக்கப்பட்டு இரத்தம் தேவைப்படும்போது அவர்களுக்கு அழைப்பு அனுப்பப் பட்டு வரவழைக்கப்பட்டே இரத்தம் எடுக்கப்படுகிறது.

இம் முறை மீகவும் சிரமமாகவும் நடைமுறைக்குச் சாத்தியமற்றும் இருப்பதால் இரத்த வங்கி ஒன்று வைத்தியசாலையில் அமைக்கப்பட வேண்டும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இரத்த வங்கி ஒன்று அமைப்பதற்கான நடைமுறைகளுக்கு சிறீலங்கா அரசு தடைபோட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## அன்னை பூபதி அறிவுப்போட்டி விருதுகள்

அன்னைபூபதியின் நினைவாக நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான விருதுகள் கடந்த 10-ம் திகதி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயக் கூடத்தில் நடைபெற்ற விழாவின் போது வழங்கப்பட்டுள்ளது.

கண்டாவளை, புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், கரைத்துறைப்பற்று ஆகிய பகுதி பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இவ்விழாவில் சமூகமளித்திருந்தனர்.

# தேசத்தின் புயல்கள்

'உயிர்ப்பூ' போன்றதான குறும் படங்களில் தன் சினிமா ஆளுமையை, படைப்பாற்றலை வெளிப்படுத்தியவர் பொ.தாசன். தற்போது 'தேசத்தின் புயல்கள்' என்னும் முழுநீள திரைப்படம் ஒன்றினை வெளியிட்டுள்ளார். அண்மையில் வன்னியில் இப்படத்தின் ஒளிநாடாப்பேழை வெளியீட்டை முன்னிட்டு நிதர்சனம் ஒளிபரப்புச் சேவை இவரைப் பேட்டி கண்டது. அப்பேட்டியில் 'தேசத்தின் புயல்கள் படத்தின் உச்சக்கட்டமான சில காட்சிகளை எப்படிப் படமாக்கினீர்கள்?' எனக் கேட்டபோது 'அவை சினிமா இரகசியங்கள்' என சிரிப்புடன் பதிலளித்தார் பொ.தாசன்.

1994-ம் ஆண்டில் பலாலியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவ படைத் தளத்தின் மீதான கரும்புலித் தாக்குதலை பதிவு செய்திருக்கின்றது இப்படம். இது ஒரு விவரணப் படம், அதாவது வரலாற்று ஆவணம் எனவும் கொள்ளலாம். போரியல் திரைப்படங்கள் உருவாக்க தொழில்நுட்ப சாதனங்கள் நிறையத் தேவைப்படும். போர் நெருக்கடியை எதிர்கொள்ளும் ஒரு சமூகத்தில் இவையெல்லாம் சாத்தியமாகக் கூடியவையல்ல. ஆனால் தமிழில் உள்ள முதுமொழி ஒன்று 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்கிறது. பொ.தாசனுக்கு புல்லையும் பேசச் செய்யும் மந்திர ஆற்றல் வாய்ப்பிருக்கின்றது. ஈழப் போராட்டம் மந்திர தந்திரம், மாயா ஜாலம், அருட் சக்திகள், கடவுள் வரங்கள் என்பவற்றால் புனையப்பட்ட புராணக் கதைகள் அல்ல. அவை உயிர்க்கொடை உறுதி இலட்சிய நோக்கு என்பவற்றால் படைக்கப்படும் வரலாறு. இதன் ஒரு துளியைத்தான் சினிமா மொழிக்கு மாற்றம் செய்துள்ளார் பொ. தாசன்.

ஈழத்தின் திரைப்படத் துறைக்கான அடிக்கல் நாட்டப்பட்டாயிற்று என்றால் அது மிகைப்பட்ட கூற்றல்ல. போராட்டக் களம் புது ஆற்றல்களை நவீனத்துவங்களை பிறப்பிக்கின்றது. புதுக் கலைகளை தோற்றுவிக்கின்றது என்பதற்கு இத் திரைப்படமும் ஒரு சாட்சியம்.

- கி.பி.அரவிந்தன்

# களஞ்சியம் வெடித்த சத்தத்தினால் பதுங்கு குழிக்குள் ஓடிய மேஜர் ஜெனரல்

கடந்த 3-ம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவ கொமாண்டோ பிரிவின் அதிநவீன ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறிய சத்தத்தைக் கேட்டு சிறீலங்கா இராணுவ நடவடிக்கை தளபதி சிறிலால் ஜெயசூரிய பதுங்கு குழிக்குள் பதுங்கிய சம்பவம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மேஜர் ஜெனரல் சிறிலால் ஜெயசூரியா வவுனியா கூட்டுப்படை தலைமயகத்தில் உயர் இராணுவ அதிகாரிகளுடனான மாநாட்டினை முடித்துக் கொண்ட பின்னர் உணவு அருந்துவதற்காக ஆயத்தப்படுத்திய நேரத்தில பாரிய வெடிச் சத்தம் ஒன்று கேட்கவே கூட்டுப்படை தலைமையகத்தின் மீதுதான் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தத் தொடங்கி விட்டார்கள் என்ற பீதியில், சிறிலால் ஜெயசூரியா பதுங்கு குழியினை நோக்கி ஓடி அதனுள்ளே புகுந்தும்விட்டார்.

சிறிது நேரத்தின் பின்னர் இராணுவக் களஞ்சியத்தில் நடைபெற்ற வெடிவிபத்து தெரியவந்ததன் பின்னரே இராணுவ பொலிஸ் பிரிவு அதிகாரிகள் பதுங்கு குழியை நோக்கி வந்து ஜெயசூரியாவிடம் விடயத்தைச் சொன்ன பின்னரே அவர் பதுங்கு குழியினைவிட்டு வெளியே வந்துள்ளார்.

# கிருஷாந்தி கொலை வழக்கின் எதிரிகளுக்கு மரண தண்டனை விதிக்கக்கூட சட்டத்தில் இடமுண்டு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி சிறீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவரின் தாயார், சகோதரர், அயலவர் ஆகிய நால்வரும் சிறீலங்கா இராணுவத்தினரால் கோரமாக கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட வழக்கின் முடிவுகள் வெளிவராத போதிலும் இதற்கான அதிஉயர் தண்டனையாக மரண தண்டனை கூட விதிக்கப்படலாம் என சில சட்ட வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

இக் கொலைவழக்கின் எதிரிகளான ஒன்பது பேர் மீதும் குழுவாக திட்டமிட்டது, பெண்ணைக் கடத்தியது, வல்லுறவுக்கு உட்படுத்தியது, படுகொலை செய்தது, சாட்சியங்களை மறைத்தது போன்ற பல்வேறு குற்றங்களுடன் 18 குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டுள்ளன. இவற்றில் கூட்டாக கொலை செய்தமைக்கு சிறீலங்கா சட்டத்தின் பிரகாரம் மரண தண்டனை விதிக்கக் கூட இடமளிப்பதாகக் கூறப்படுகின்றது.

பல மாதங்களா நடைபெற்று வரும் இவ் வழக்கில், கடந்த மாதம் விசாரணைக்கென அழைத்துவரப்பட்ட இரு இராணுவ குற்றவாளிகள் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பியோடி மீண்டும் பொலிசாரிடம் சரணடைந்திருந்தனர். இரண்டு பேர் அரச சாட்சியங்களாக மாறியதாக கூறி விடுதலை செய்யப்பட்டனர். இன்னொருவர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஒருவர் குற்றவாளி இல்லையென நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இவ் வழக்கு விசாரணை பற்றி கருத்துத் தெரிவித்த சட்ட வல்லுனர் ஒருவர் இது அரசின் கண்துடைப்பு விசாரணைகளே அன்றி உண்மையான விசாரணைகள் அல்ல, இதற்கான உண்மையான தண்டனையை வழங்கினால் படைத் தரப்பினர் மத்தியில் ஒருவித பய உணர்வு ஏற்படும் என்பதால் அரசு இதற்கான முடிவை இழுத்தடித்து இறுதியில் ஒரு போலியான முடிவையே வழங்கும் என தெரிவித்துள்ளார்.

# யார் தேசத் துரோகி கதிர்காமரா? நானா?

**- ரணில் -**

'படையினருக்கு ஆட் சேர்ப்பதற்கு பாடசாலைகளுக்குச் சென்று 15 வயதிற்கு உட்பட்ட மாணவர்களை இராணுவத்தில் சேருமாறு படையினர் பிரச்சாரம் செய்கின்றனர். இது பற்றி நான் எடுத்துச் சொன்னால் என்னை துரோகி என்கின்றனர்.

சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பது சட்டத்துக்குப் புறம்பானது என நான் கேள்வி எழுப்புவது தேசத் துரோகம் என்றால், விடுதலைப் புலிகள் சிறுவர்களை தமது படையில் சேர்த்துக்கொள்கிறார்கள் என லக்ஸ்மன் கதிர்காமர் நாடு நாடாகச் சென்று பிரச்சாரம் செய்கிறாரே அவரும் தேசத் துரோகி தானே?'

இவ்வாறு சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

ஐ.தே.க. உறுப்பினர் அவசர கால நிலைமை நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை, சிறீலங்கா உதவிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் கூற்று ஒன்றுக்குப் பதிலளிக்கும் முகமாக ரணில் மேற்கண்டவாறு கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# தப்பியோடிய படையினருக்கு மீண்டும் பொது மன்னிப்பு

சிறீலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சுமார் 15,000 பேரை மீண்டும் படையில் சேருவதற்கு ஐந்து நாள் பொது மன்னிப்பை சிறீலங்கா அரசு வழங்கியுள்ளது. தப்பியோடியவர்கள் இவ் ஐந்து நாட்களுக்குள் படையில் சேர்ந்து கொண்டால் அவர்கள் முன்னம் இருந்த தரங்களிலேயே பதவி வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

சிறீலங்கா இராணுவ படையணியில் ஏற்பட்டு வரும் ஆள் தட்டுப்பாட்டினை நீக்க அரசு பல்வேறு முயற்சிகளில் இறங்கிய போதும் எதிர்பார்த்ததிலும் மிக மிக குறைந்தளவு படையினரையே சேர்த்துக் கொள்ள முடிந்தது. ஆனால் சேர்த்துக் கொண்ட படையினரை விட பெருமளவு படையினர் களத்தில் நின்றே தப்பியோடியுள்ளனர். இவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்ப்பதற்கு பல்வேறு சலுகைகளை வழங்குவதாக அரசு அறிவித்திருந்தது. இறுதியாக 'எலி வேட்டை' எனும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து தப்பியோடியவர்களை கைது செய்து படையணியில் சேர்க்கவும் முனைந்தனர். ஆனால், அதுவும் பயனளிக்க முடியாத பட்சத்தில் மீண்டும் தற்போது ஐந்துநாள் பொது மன்னிப்பு என்ற அவகாசம் ஒன்றினை வழங்கியுள்ளனர்.

வன்னி நிலப்பரப்பின் பாதை திறப்பிற்கென கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ள படைகளில் பல பிரிவுகள் விடுதலைப் புலிகளின் பல்வேறு தாக்குதல்களினால் அழிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் உள்ளன. இவற்றை மீள அமைத்து படை நகர்வை மீண்டும் முன்னெடுக்கவே இப் பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவும் பலனளிக்காத பட்சத்தில் பாடசாலைகளை விட்டு வெளியேறிய மாணவர்களையும் படைத் தரப்பிலிருந்து ஓய்வு பெற்ற படையினரையும் மீண்டும் படையில் சேர்த்து இவ் இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பது என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# இராணுவக் கல்லூரிக்கு தமிழர்கள் கற்க வராதது கவலையாம்

இரத்மலானையில் அமைந்துள்ள சேர். ஜோன் கொத்தலாவலை இராணுவ கல்விக் கல்லூரியில் வடக்கு -கிழக்கு தமிழர்கள் எவரும் கல்வி கற்க வராதமை தனக்கு பெரும் கவலையாக இருப்பதாக சிறீலங்கா உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தமிழ் இளைஞர், யுவதிகள் ஏன் இங்கு கல்வி கற்க வருகிறார்கள் இல்லை என்பதை ஆராய்வதற்காக கூட்டப்பட்ட கூட்டமொன்றிலேயே அவ் இராணுவ அதிகாரி கவலை தெரிவித்துள்ளார்.

தமிழ் இளைஞர், யுவதிகள் ஏன் கற்கவரவில்லை, அவர்கள் அவ்வாறு கற்க வந்தால் அவர்கள் மீது எவ்வித பாகுபாடும் காட்டமாட்டது எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# இராணுவ அதிகாரிக்கு 'சல்யூட்' அடித்தவர் வைத்தியசாலையில்

யாழ். குடாவினை ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா படையினரின் அலுவலகம் ஒன்றில் கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலுக்கு வந்த இராணுவ அதிகாரி அலுவலகத்தில் நுழைந்தபோது, அங்கு நின்ற கிராம சேவையாளர்களில் ஒருவர் 'சல்யூட்' அடித்து மரியாதை செலுத்தியுள்ளார். இவரது மரியாதையை ஏற்றுக் கொண்ட இராணுவ அதிகாரி சிறிது நேரத்தில் எரிச்சல் அடையத் தொடங்கிவிட்டாராம். காரணம் அக் கிராம சேவையாளர் தனது மரியாதையை பல தடவைகள் தொடர்ந்து செய்தது தானாம் காரணம்.

இதுபற்றி விசாரித்த அதிகாரி, மது போதையில் இருந்ததினாலேயே தொடர்ந்து 'சல்யூட்' அடிப்பதாக அறிந்து அவரை உடனடியாக யாழ். போதனை வைத்தியசாலைக்கு அனுப்பி மது போதையில் இருக்கிறாரா என பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்.


## 'வெற்றியை எமதாக்குவோம்'

### ஜெயசிக்குறுயின் ஓராண்டு நினைவு நிகழ்வு

பாதை திறப்பு என்ற போர்வையில் வன்னிப் பெருநிலப்பரப்பை கூறுபோட சிங்கள அரசால் மேற்கொள்ளப்படும் இராணுவ நகர்வை விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக தடுத்து நிற்கும் முதலாவது ஆண்டு நிறைவை பெருமிதத்தோடு நினைவு கூரும் அதேவேளை, இவ்வெற்றிக்கு விதையாகிப்போன போராளிகட்கும் வீரவணக்கம் செலுத்துவோம்.

**- மரியாதை வணக்க நிகழ்வு**

- ஜெயசிக்குறுய் இராணுவ நகர்வின் மீது விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல்களில் மிகப்பெரிய தாக்குதலாக கருதப்படும் கரிப்பட்டுமுறிப்பு தாக்குதல் உள்ளடங்கலான வெவ்வேறு தாக்குதல்களின் தொகுப்பான

**ஒளிப்பட விபரணம்**

- ஜெயசிக்குறுயும் தமிழீழவிடுதலைப் போராட்டமும்

**கலந்துரையாடல்**

**இடம்:**

**Grorud Samfunnshuset**

(அன்னை பூபதி கலைக் கூடத்திற்கு அருகாமையில்)

**காலம்:**

**16.05.98 சனி மாலை 6.30 மணி**

ரசிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.
நோர்வே

# பாலஸ்தீனியர்கள் - இலங்கைத் தமிழர்கள் உட்பட்ட அகதிகளாக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரல் கொடுக்கும் ஒன்றுகூடல்

பாலஸ்தீன மக்கள் அவர்களது சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட 50-வது ஆண்டை நினைவுகூர்வதற்கும், இலங்கை (தமிழீழம்) அல்ஜீரியா, பெரு, மெக்சிக்கோ, குர்திஸ்தான் ஆப்கானிஸ்தான் உட்பட உலகிலுள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட அகதிகளாக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதற்காகவும் எதிர்வரும் 15.05.98 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பாரிசில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்ட ஒன்றுகூடலில் பங்கு கொள்ளுமாறு விடுதலையை நேசிக்கும் மக்களுக்கு சமூக விடுதலைக்காக சப்பதிஸ்தாக்களின் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் உலகெங்குமுள்ள ஆளும் வர்த்தகத்தினர் உழைக்கும் மக்கள் மேல் கட்டவிழ்ந்துவிட்ட ஆக்கிரமிப்பு யுத்தங்களினால் கோடிக்கணக்கான மக்கள் பாலஸ்தீனியர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். பாலஸ்தீனர்கள் என்றால் சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டவர்கள், அந்நியமாக்கப்பட்டவர்கள், அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள், அகதிகளாகவும் பிச்சை எடுப்பவர்களாகவும் ஆக்கப்பட்டவர்கள்.

மூலதனத்தின் சர்வதேசியமயமாதலும், யுத்தமும், எங்களுக்காக ஒதுக்கி வைத்திருப்பது மேற்கூறியவைதான் எங்களுக்கு இவைகள் தேவையில்லை, எங்களுடைய தேவைகளை வென்றெடுக்க நாங்கள் ஒன்று சேர வேண்டும்.

15 மே 1998 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு Place des Fetes, Paris-19 என்ற இடத்தில் பாலஸ்தீன மக்கள் அவர்களுடைய மண்ணிலிருந்து அந்நியமாக்கப்பட்ட 50-வது ஆண்டு நினைவுக்கு நாங்கள் ஒன்று சேர்ந்து நடப்போம். நீங்களும் எங்களோடு குரல்கொடுக்க வாருங்கள்.

உலகிலுள்ள அனைத்து பாலஸ்தீனியர்களுக்கும் (அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும்) விடுதலையும் - நீதியும், ஜனநாயகமும் கிடைக்கட்டும். 50 ஆண்டுகள் போதும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு AZIS, 5 Rue de Douai, 75009 Paris. என்ற முகவரியில் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது.

# தீவுப் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேற்றம்

'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்டுவரும் பெரும் ஆட்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய தீவுப் பகுதிகளில் இருந்தும் படையினர் வன்னி நோக்கி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

தற்போது ஊர்காவற்துறை, வேலனை பகுதிகளில் இருந்து படையினர் அனுப்பப்பட்டதால் அவ்விடத்தின் சில பகுதிகள் கடற்படையின் கட்டுப்பாட்டினுள் விடப்பட்டுள்ளன.

இதேவேளை இராணுவத்தினரின் இவ் வெளியேற்றத்தால் கடந்த பல வருடங்களாக இயங்கமுடியாது இராணுவ முகாமாக இருந்த வேலணை துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் மீண்டும் பாடசாலை நிர்வாகத்திடம் வந்து சேர்ந்துள்ளது.

# மட்டு. திருமலையில் கடும் வெப்பம்

மட்டு. திருமலை மாவட்டங்களில் கடும் வெப்பம் நிலவி வருவதாகவும் இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

பரவி வரும் வைரஸ் காய்ச்சல் இவ் வெப்ப காலத்தில் வேகமாக பரவி வருவதாகவும் மட்டு. மாவட்டத்தின் மேற்குப் பிரதேசங்களில் கிணறுகளும், வாவிகளும் வற்றி வருவதால் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடுமையான இவ் வெப்ப நிலைமையிலும் சிறீலங்கா இராணுவத்தினர் சோதனைச் சாவடிகளில் வழமை போல் சோதனைகளை மேற்கொள்வதால் நீண்ட நேரம் வெய்யிலில் நிற்கவேண்டும் என்பதால் வீதிகளில் மக்களின் நடமாட்டமும் குறைந்துவருகின்றன.

# சிறீலங்கா அரசின் அறிக்கை தமிழர்களை உள்ளடக்கவில்லை

## - ஐ.நா வில் தமிழர் மனிதர் உரிமைகள் மையம்

தற்பொழுது ஜெனிவா ஐ.நா சபையில் நடந்துகொண்டிருக்கும் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான குழுவின் தொடர் கூட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களில் (NGOs) ஒன்றாக பங்குகொள்ளும் 'தமிழர் மனிதர் உரிமைகள் மையம்' (TCHR) அக்குழுவுக்கு சிறீலங்கா அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை, பசி, பட்டினி போன்றவற்றை அலட்சியம் செய்துள்ளதாக குறை கூறியுள்ளது.

தமிழரின் தாயக பூமியாகிய வடக்கு - கிழக்கு சிறீலங்காவில் வாழும் தமிழ் மக்களுடைய பொருளாதார, சமூக, கலாச்சார உண்மைநிலைகளை, சிறீலங்கா அரசினால் ஐ.நா குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை (E/1990/05/Add-2) எவ்விதத்திலும் உள்ளடக்கவில்லை என்றும், அங்கு வாழும் மக்கள் சுதந்திரமாக நடமாடுவது இராணுவத்தினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வைத்தியசாலைகளில் நோய்க்கு மருந்து இல்லையென்றும், அங்கு வாழும் மக்களை விவசாயம், மீன்பிடித்தொழிலை செய்ய விடாது அரசு பலவிதப்பட்ட தடைகளை போட்டுள்ளதாகவும் கூறியுள்ளது. தமிழ் மக்களுடைய கலாச்சாரம், சிறீலங்கா அரசினால் நாசமாக்கப்பட்டு வருவது ஓர் 'கலாச்சார படுகொலை' என்று கூறியதுடன், தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையைத் தொடர்ந்து சிறீலங்கா அரசு மறுத்துவருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இக்குழுவின் நிபுணர்களுடைய கேள்விகளுக்கு 'தமிழர் மனித உரிமை மையத்தின் சார்பில் பதிலளித்த இதன் பொதுச் செயலாளர் திரு.ச.வி. கிருபாகரன் கூறுகையில், கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வட - கிழக்கில் எவ்வித விவசாயமும் நடைபெறவில்லையென்றும், தமிழ் மக்களுடைய பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகளை முழுதாக சிறீலங்கா அரசு அலட்சியம் செய்ததன் பிரதிபலிப்பே இன்றைய ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

(ஐ.நா.செய்தி அறிக்கை)

# யாழ்ப்பாணத்தில் பிறந்தால் அனுமதியில்லை

இரத்தினபுரியில் ஆலயம் ஒன்றில் சிற்பியாக தொழில் புரியும் ஒருவர் தனது ஆறு வயது குழந்தையை பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தார். ஆனால் இவரது விண்ணப்பத்தை பரிசீலனை செய்த பாடசாலை தலைமை ஆசிரியர் இக் குழந்தையை தமது பாடசாலையில் சேர்த்துக்கொள்ள முடியாது என கூறியுள்ளார். காரணம் கேட்டபோது குழந்தை இரத்தினபுரியில் வளர்ந்து வந்தாலும் அது பிறந்த இடம் யாழ்ப்பாணம் என்பதனாலேயே சேர்த்துக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளார்.

தலைமை ஆசிரியரின் இப் பதிலில் அதிர்ச்சியடைந்த அக் குழந்தையின் தந்தை, இது தொடர்பாக மனித உரிமை பாதுகாப்பு இயக்கத் தலைவருக்கு முறைப்பாடு ஒன்று அனுப்பியுள்ளார்.

# பகிடிவதை புரிந்தவர்கள் நையப்புடைக்கப்பட்டனர்

யாழ். பல்கலைக்கழக அனுமதி பெற்று ஆங்கிலம் கற்பதற்கென சென்ற மாணவிகளை பகிடிவதைக்கு உட்படுத்திய மாணவர்கள் நையப்புடைக்கப்பட்டனர்.

யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகில் நிகழ்ந்த இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவந்ததாவது, புதிதாக வகுப்பிற்கு வந்த மாணவிகள் மீது சில மாணவர்கள் பகிடிவதை சேஷ்டைகளை மேற்கொண்டபோது அங்கிருந்த பழைய மாணவர்கள் அதனை தடுத்து அறிவுரை கூறியுள்ளனர். ஆனால் அதனை ஏற்காத மறுபகுதியினர் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இதன் பின்னரே பழைய மாணவர்களால் இவர்கள் நையப்புடைக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

மாணவர்களை பலிகொள்ளும், மன விரக்திக்கு உள்ளாக்கும் இப் பகிடிவதைகள் நிறுத்தப்பட வேண்டுமென விடுதலைப்புலிகள் ஏற்கனவே அறிவித்திருந்தனர். தற்பொழுது சிறீலங்கா அளவிலும் இவை நிறுத்தப்பட வேண்டுமென்ற குரல்கள் பல்வேறு மட்டங்களிலும் இருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்புத் துறைமுகத்தில் தீ

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்ற 'ராஜீவ் காந்தி' எனும் இந்தியக் கப்பல் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

கடந்த 3ம் திகதி கொழும்பு துறைமுகத்தின் எலிசபெத் இறங்குதுறை பகுதியில் நங்கூரமிட்டு நின்ற இக் கப்பல் திடீரென இரவு பதினொரு மணியளவில் தீப்பற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக தீ அணைக்கப்பட்டதினால் பாரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இத் தீ விபத்திற்கான காரணம் எதுவும் இதுவரை கண்டுபிடிக்காத போதிலும், கப்பலின் கொள்கலன்களினால் இருந்த இரசாயன பொருட்களின் கசிவினால் ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# ASCES புதிய வகுப்புகள்

9-வது ஆண்டில் காலடி வைத்திருக்கும்
அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை

நடைமுறை பிரெஞ்சு: பிரெஞ்சு கற்க சிறந்த வைரநூல்

சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்:
41, Rue Didot, 75014 Paris, M°: Pernety Tel.: 01 42 57 23 56

Brevet பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன

Bio, Chimie, Physique, Maths, Anglais, Informatique etc...

வகுப்புகள் ஞாயிறு காலை 10.00 மணிமுதல்.

பிரெஞ்சு: 18.04.98 சனி மாலை 4.00 மணி
27.04.98 திங்கள் மாலை 4.00 மணி
10.05.98 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி
12.05.98 செவ்வாய் மாலை 5.30 மணி

கம்பியூட்டர்: 17.05.98 ஞாயிறு பி.பகல் 1.00 மணி.
11.05.98 திங்கள் மாலை 5.30 மணி.

ஆங்கிலம்: 10.05.98 சனி பி.பகல் 3.30 மணி
Cambridge, Toefl பரீட்சைக்குத் தயார் செய்யப்படும்.

சிறுவர்களுக்கான தமிழ், கணித, ஆங்கில வகுப்புகள்
பிரதி சனி பிற்பகல் 1.30 முதல்

நடன இசை வகுப்புகள்: பிரதி சனி பி.பகல் 1.30 முதல்
கராத்தே: 11.05.98 திங்கள் மாலை 4.00 மணி
தையல்: மே 98 சனி பி.பகல் 3.00 மணி.

திங்கள், செவ்வாய். புதன், சனி வகுப்புகள் நடைபெறும் இடம்:
பாரதி நுண்கலைக் கல்லூரி – 2, Rue Esclangon, 75018 Paris.
M°: Porte de Clignancourt - Tel: 0142572356

02.05.98 சனி பிற்பகல் 3 மணி - நடனம், தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம், கணிதம்
16.05.98 சனி பிற்பகல் 3.30 மணி - சங்கீதம், வயலின், மிருதங்கம், ஓர்கன்


Pub



# வீன் சற்றலைற்

1490 Frs.

மட்டுமே



தொடர்புகளுக்கு:
01 42 05 56 15
06 60 98 84 32
T.V. குமார்

# தென் தமிழீழச் செய்திகள்

## வெப்பம் காரணமாக பாடசாலைகள் இயங்க முடியாத நிலை

தென் தமிழீழப் பகுதியில் நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக பாடசாலைகளை மூடவேண்டி வருகின்றன.

பலர் வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ள அதேவேளை வெப்பத்தை தாங்கமுடியாமலே பல மாணவர்கள் பாடசாலைக்கு வருவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இவ் வெப்ப காலம் குறைவடையும் வரை பாடசாலைகளை மதியத்துடன் மூடுமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தற்போது ஒரு மணியுடன் பாடசாலைகள் மூடப்படுவதாக தெரியவருகிறது.

இதேவேளை இம் மாதங்களில் நடாத்தப்பட இருந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் பாடசாலைகள் அனைத்திலும் பின்போடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## இறால்குழியில் நால்வர் கைது

மூதூர் இறால்குழி பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2ம் திகதி பன் வெட்டுவான் காட்டுப்பகுதியில் பிரம்பு வெட்டச்சென்ற போதே, உப்பாறு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரால் கைதுசெய்து கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் என அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கார்த்திகேசு பேரின்பராசா (35), கனகலிங்கம் ராஜு (20), சிவகுரு விஜயகுமார் (19), மகாலிங்கம் கமலதாசன் (22) ஆகிய மேற்படி இளைஞர்களே கைது செய்து கொண்டு செல்லப்பட்டு, இதுவரை எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவில்லை என பெற்றோர்கள் கவலைகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களுடன் பிரம்பு வெட்டச் சென்ற இரு வயோதிபர்கள் கைதுசெய்யப்படாமல் திரும்பி வந்ததினாலேயே இவ் இளைஞர்கள் சிறீலங்கா படையினராலேயே கைதுசெய்து கொண்டுசெல்லப்பட்டது தெரியவந்துள்ளது.

## சீடா நிறுவனம் உதவி

அம்பாறை மாவட்ட சமுக நல்வாழ்வு அமைப்பின் அனுசரணையுடன், அம்பாறை மாவட்ட தமிழ்ப் பெண்களின் சுயதொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்ய 'சீடா நிறுவனம்' 13 இலட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 விதவைப் பெண்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொள்ளும் வகையில் அவர்களின் தொழில் முயற்சிக்கு ஏற்ப இரண்டாயிரம் ரூபாயிலிருந்து பத்தாயிரம் வரை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவர்களின் தொழில் முயற்சிகளை கவனிப்பதற்கென தனியான ஒரு அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செஞ்சிலுவை சங்க தினம்

சர்வதேச செஞ்சிலுவை சங்க தினமான கடந்த 8ம் திகதி மட்டக்களப்பு பகுதிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

மட்டக்களப்பு நகரிலிருந்து செங்கலடி, களவாஞ்சிக்குடி பகுதிகளை நோக்கி செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கை பரப்பும் துவிச்சக்கர வண்டி ஊர்வலம் ஒன்று செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களினால் நிகழ்த்தப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கம் உருவாகக் காரணமாகவிருந்த சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் ஹென்றி டுனாண்ட் அவர்களின் பிறந்த தினமான மே மாதம் எட்டாம் திகதியே சர்வதேச செஞ்சிலுவை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

1859ம் ஆண்டில் வட இத்தாலியில் நிகழ்ந்த ஒரு போரில் பல்லாயிரிக்கணக்கானோர் கொல்லப்பட்டமையும், காயமடைந்து மருத்துவ உதவியின்றி மடிந்து போனதையும் நேரில் பார்த்த டுனாண்ட், பாதிக்கப்பட்டவர்களை இனம், மதம், அரசியல், நாடு என்ற வேறுபாடின்றி பராமரிக்க ஒரு அமைப்பு தேவையென சிந்தித்ததன் விளைவே இச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உருவாக்கம். இவ் வருடம் 170வது தினத்தை கொண்டாடும் இச் சங்கம் 175 நாடுகளில் தனது பணியை மேற்கொண்டு வருகின்றது.

## வட்டவெவ காவலரண் மீது தாக்குதல்

வாழைச்சேனை மெதுருகிரிய பிரிவிலுள்ள வட்டவெவ சிறீலங்கா பொலிஸ் காவல் அரண் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் ஒரு ஊர்காவல் படையினன் கொல்லப்பட்ட இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கடந்த வாரம் நடந்ததாக கூறப்படும் இத் தாக்குதலின் பின் சுமார் ஒரு மணி நேரமாக பொலிஸ் காவல் அரணிலிருந்து தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சம்பூரில் பீரங்கித் தாக்குதல்

கடந்த செவ்வாய் மாலை ஆறு மணியளவில் மூதூர் கடற்கரை கிராமங்களான சம்பூர், ஒட்டிய சூற்குடா பகுதிகளை நோக்கி கடற்படையினர் கடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் அருகில் ஐந்து குண்டுகள் விழுந்து வெடித்ததில் பல கால்நடைகள் இறந்துள்ளன. பொதுமக்களுக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை.



# களைகட்டிய ஜே.வி.பி.யின் மே தின ஊர்வலம்

சிறீலங்காவில் தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் என்ற பேதமின்றி அனைவரும் கடந்த வாரம் மே தின களேபரத்திற்குள் மூழ்கியிருந்தனர். பொதுஜன ஐக்கிய முன்னணி, இடதுசாரிக்கட்சிகள், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியன கொழும்பில் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தின. ஐ.தே.க., கண்டியில் மே தினத்தைக் கொண்டாடியது.



கொழும்பில் நடைபெற்ற மே தின விழாக்களில் ஜே.வி.பியின் கூட்டத்தையே குறிப்பிட்டுக் கூறக் கூடியதாக உள்ளதென பார்வையாளர்கள் கருதுகின்றனர். மறுபுறம் ஜே.வி.பி.யினர் சிங்கள மக்கள் மத்தியில் எந்தளவுக்குச் செல்வாக்குப் பெற்று வளர்ந்து வருகின்றனர் என்பதை துலாம்பரமாகக் காட்டும் ஒரு அம்சமாகவே இக்கூட்டம் அமைந்திருந்தது என்று கூறுவதே பொருந்தும்.

ஜே.வி.பியின் இத்தகைய வளர்ச்சிப் போக்கானது, அக்கட்சி சிறீலங்கா அரசியலில் இரண்டாவது சக்தியாக உருமாற்றம் பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதனை அவதானித்த அரசாங்க தரப்பும்



ஜே.வி.பி. மீது தொடராக பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதுடன் அரசின் ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகியனவும் ஜே.வி.பி. எதிர்ப்பு பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் அரசாங்கத்திற்கு நாளுக்கு நாள் தேய்ந்து வரும் செல்வாக்கை கணக்கிலெடுத்து அரசாங்க கூட்டுக்கு வெளியே தனி வழிப் போக தொடங்கிவிட்டன. நடந்து முடிந்த மே தின விழாவைக்கூட இடதுசாரிக்கட்சிகள் பொ.ஐ.ஐ. முன்னணியின் மே தினத்துடன் அல்லாது தனித்துக் கொண்டாடினர். இது ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.தே.க. தலதா மாளிகை குண்டு வெடிப்பை மூலதனமாக்கி, கண்டியில் மே தினத்தை நடத்தி எதிர்கால தேர்தலுக்கான களத்தை அமைத்துக் கொண்டுள்ளது.

தமிழ்க்கட்சிகளும் மாகாண சபை தேர்தலை மையமாக வைத்து வடக்கு, கிழக்கில் மே தின கூட்டங்களை நடத்தியுள்ளன.

மே தின ஒற்றுமைக் கோஷங்களுக்கு ஊடே 'யுத்தமே வேண்டும்! பேச்சுவார்த்தை வேண்டாம்!' என பிக்குகள் குழுவொன்று முழங்கியுள்ளது.

**மே தின ஒற்றுமைக் கோஷங்களுக்கு ஊடே 'யுத்தமே வேண்டும்! பேச்சுவார்த்தை வேண்டாம்!' என பிக்குகள் குழுவொன்று முழங்கியுள்ளது.**

## இந்திய தூதுவரை சந்தித்த கதிர்காமர்

கடந்த இரு வாரங்களுக்கு முன் சிறீலங்காவிற்கு விஜயம் செய்த பாரதிய ஜனதா அரசின் வெளிவிவகார கொள்கை ஆலோசகர்களில் ஒருவரும், சிறீலங்காவிற்கான முன்னாள் இந்தியத் தூதுவருமான என்.என்.ஜா. சிறீலங்கா தொடர்பான இந்தியாவின் கொள்கையில் மாற்றம் ஏற்படலாம் எனத் தெரிவித்த கருத்தே, பிக்குகள் மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரிடையே சர்ச்சை எழக் காரணமாகியது. கதிர்காமர் இந்தியத் தூதுவர் சிங்சங்கர் மேனனை சந்தித்து ஜாவின் கருத்து குறித்து பேசியுள்ளார். மொத்தத்தில் பிக்குகள் மாத்திரமல்ல சிறீலங்கா அரசும் 'போரின் மூலம் சமாதானம்' என்ற இலக்கு நோக்கிய தமது பயணத்தில் உறுதியாக உள்ளது என்பது தெளிவாக தெரிகின்றது.

## யாழ். குடாவில் காலூன்ற முயலும் சர்வோதயம்

இனப் பிரச்சினைக்கான போக்கு இவ்வாறு இருக்க, யாழ். மண்ணை சீரழிவுக்கு உள்ளாக்கும் சகல விடயங்களும் அரசினால் நிறைவேற்றப்படுகின்றன. யாழ். குடா மக்களை புலிகளிடமிருந்து பிரித்தெடுப்பதையும், அவர்களிடையே நிலவுகின்ற விடுதலை உணர்வை திசை திருப்புவதையும் நோக்காகக் கொண்டே சீரழிவுக்கான பாதையை படைத்தரப்புக்கு ஊடாக அரசாங்கம் திறந்து விட்டுள்ளது.

யாழ்ப்பாண நகர கட்டளை அதிகாரி பிரிகேடியர் சுகந்த மெண்டிஸ், துரையப்பா அரங்கில் இசை நிகழ்ச்சியொன்றை அரங்கேற்றியுள்ளார். இந்நிகழ்ச்சிக்கென இரவுநேர ஊரடங்குச் சட்டமும் தளர்த்தப்பட்டதுடன். மக்களுடன்திரளாக கலந்து கொண்டுள்ளனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் 113 துவிச்சக்கர வண்டிகள், மற்றும் 3 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. பெண்கள், சிறுமிகளின் கழுத்துகளில் இருந்த தங்க நகைகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் விடுவித்துள்ள யாழ். மண்ணில் மீண்டும் தலையெடுத்துள்ள இத்தகைய போக்கானது களவு, கசிப்பு, விபச்சாரம் என தலைதூக்கி மினி சினிமாக்களாகவும் வளர்த்துள்ளது. குடாநாட்டில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியை தாராளமாக்கிய படைத்தரப்பு மினி சினிமாக் கொட்டகைகளையும் திறந்து விட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் 750க்கு மேற்பட்ட மினி சினிமாக் கொட்டகைகள் உள்ளன. யாழ்.நகரில் மாத்திரம் 250 மினி சினிமாக்கள் இயங்குகின்றன. மினி சினிமாக்களில் தமிழ், ஆங்கில சினிமாப்படங்கள் மாத்திரமல்ல, முழு நீல வர்ணப்படங்களும் தாராளமாகக் காண்பிக்கப்படுகின்றன. மறைந்த ஜனாதிபதி



ஆர்.பிரேமதாச காலத்தில் இத்தகைய போக்கு தெற்கில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி. இன் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த அவ்வேளையில் இளைஞர்களை திசைதிருப்பும் நோக்கில் சூதாட்ட கிளப்புகளுடன் முழுநீல படங்களுக்குச் சமமான பல படங்கள் தென்பகுதித் தியேட்டர்களில் காண்பிக்கப்



பட்டன. இதனையே இன்றைய அரசும் 'தான் விடுவித்த' யாழ். பகுதியில் நடைமுறைப்படுத்துகின்றது.

ஆனால் இந்த கலாச்சார சீரழிவுகள் பற்றி தமிழ் கட்சிகள் வாய்மூடி மௌனிகளாக இருப்பதுதான் விந்தையாகும்.

இவ்வாறு இருக்க சர்வோதயம் குடாநாட்டில் மீண்டும் கால் ஊன்றுவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை அரசதரப்பின் ஆசிர்வாதத்துடன் தொடங்கவுள்ளது. இதனை நோக்காகக் கொண்டு சர்வோதய தலைவர் கலாநிதி ஆரியரட்ண, யாழ். விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இவ் விஜயத்தின் போது அவர், 'தான் ஒரு அரசின் பிரதிநிதி என்ற தோரணையில்' நடந்து கொண்டார், யாழ். மக்கள் மற்றும் அங்குள்ள நிறுவனங்கள் பாரதூரமாகக் கருதும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தவில்லை. மாறாக வன்முறைச் சம்பவங்கள் நிகழும்போது காணாமல் போதல் போன்ற விடயங்கள் இடம்பெறுவது சகஜமே என்பதுபோல கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் போன்றே சர்வோதயத்திற்கும் யாழ். மக்கள் மீது அக்கறை இல்லை. யாழ். நிலைமையைக் காட்டி வெளிநாட்டு உதவிகளைப் பெற்று சமாதானத்திற்கான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதில் அரசு முனைப்பாக இருப்பதுபோல், சர்வோதயமும் யாழ். நிலைமையைக் காட்டிவெளிநாட்டு உதவிகளைப் பெற்று தெற்கத்தேய குடியேற்றங்களை விரிவுபடுத்த நினைக்கின்றது.

மொத்தத்தில் கூறுவதானால் சிறீலங்காவில் சமாதானத்துக்கான போர் தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் என்ற நிலையே காணப்படுகின்றது. அத்துடன் மக்களின் மனங்களை மழுங்கடிகளும் கலாச்சார சீரழிவுக்கான திட்டங்களும் யுத்த சீரழிவுகளுடன் யாழ். மண்ணில் அரங்கேற்றப்படுகின்றன.

**கொழும்பிலிருந்து**
**க.அற்புதராஜ்**


நித்தி வாகன சேவை



வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், ஐரோப்பிய நாடுகளுக்குமான சகல போக்குவரத்துக்கான வாகன வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்

உங்கள் தொடர்புகட்கு- நித்தி Tel: 01 48 05 02 14 / 01 43 03 07 08, (Répondeur) 01 49 23 97 32
அவசரத்தொடர்புகளுக்கு: 06 07 34 80 51

Pub


## சிறப்பு நீதிமன்றத்தில் சமூகம் தரவேண்டும் ஜெயலலிதாவுக்கு நீதிபதி உத்தரவு!

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு வருகின்றன. கலர் டெலிவிஷன் வாங்கியது தொடர்பான ஊழலில் குற்றஞ் சாட்டப்பட்ட செல்வி ஜெயலலிதா உட்பட்ட பதினொரு பேரையும் சிறப்பு நீதிமன்றத்தில் சமூகம் தருமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். இதே வேளையில் இவ்வழக்கை நீதிபதி வி.ராதாகிருஷ்ணன் விசாரிக்கக் கூடாது எனக் கோரி ஜெயலலிதா மனு தாக்கல் செய்திருந்தார். இம்மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி தனது தீர்ப்பில் கூறியதாவது:

டெலிவிஷன் ஊழல் வழக்கு கடந்த ஆண்டு ஜூலையில் இருந்தே ஒத்திவைக்கப்பட்டு வருகின்றது. மீண்டும் இதனை ஒத்திவைக்கும்படி ஜெயலலிதாவின் வழக்கறிஞர் கேட்டார்.



ஆனால் நான் அதை நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கமாட்டேன் என்று கூறினேன். உடனே இந்த வழக்கை நான் விசாரிக்கக் கூடாது எனக் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளனர். அம்மனுவில் இந்த வழக்கை விசாரிப்பதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பது சரியல்ல. அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றதும் குறும்புத்தனமானதும் ஆகும். ஒரு விழாவில் நீதிபதி கலந்து கொண்டால் அவ்விழாவிற்கு வந்தவர்களுடன் அவர் நெருக்கமாகி விடுவார் எனக் கூறுவதும் அவர் வழக்கை விசாரித்தால் பாரபட்சமாக தீர்ப்பளிப்பார் என்பதும் நகைப்புக்கிடமானது. ஜெயலலிதாவின் வழக்கறிஞர் இது போன்ற கருத்துக்களை ஏற்றுக்கொண்டால் எந்த நீதிபதியும் செயல்பட முடியாது. இது நீதித்துறையை மிரட்டும் செயலே தவிர வேறெதுவுமில்லை என்றார் நீதிபதி.




## விமானத் தயாரிப்பு சந்தையில் இந்தியா இந்திய தொழில் நுட்பத்துடன் தயாராகும் பயணிகள் விமானம்!

முழுவதும் இந்திய தொழில் நுட்பத்துடனேயே உருவாக்கப் படவுள்ள பயணிகள் விமானம் பெங்களூரில் தயாரிக்கப்படவுள்ளது என மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் முரளி மனோகர் யோசி டெல்லியில் தெரிவித்தார்.

இதன் முன்னோடியாக ஹன்சா—3 என்னும் முழுமையான பயிற்சி விமானம் பெங்களூரிலுள்ள தேசிய விமான ஆய்வு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி விமானம் மே 11—ம்திகதி தனது பறக்கும் முதல் பயிற்சியை மேற்கொள்ள உள்ளது. இரண்டு இருக்கைகள்கொண்ட இப் பயிற்சி விமானம் அதிக எடையில்லாத பொருட்கள் மூலம் தயாரிக்கப்பட்டது. அதிக தொழில் நுட்பத் திறனும் குறைந்த விலையும் இதன் சிறப்பம்சங்கள். இவ் விமானம் பயிற்சிக்காகமட்டுமல்லாமல் பொழுதுபோக்கு கண்காணிப்பு சுற்றுப்புற சூழல் ஆய்வு என்பவற்றிற்கும் பயன்படுத்தக்கூடியது. இவ்விமானத்தில் மேலதிகமாக மின்னல் தடுப்பு சாதனங்கள் இரவுப் பயணத்திற்கு தேவையான தொழில் நுட்பங்கள் என்பன பொருத்தப்பட உள்ளன. வெளிநாடுகளில் விற்கப்படும் இவ்வகை விமானங்களின் விலையை விட ஹன்சா—3 பயிற்சி விமானமானது ரூபா 36 இலட்சம் குறைவானதாகும். ஆதலால் அவுஸ்திரேலிய தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து விசாரணைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## இந்திய அரசியலில் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்!

இந்தியாவில் கூட்டணி அரசமைத்திருக்கும் பா.ஜ கூட்டணியில் இணைந்த கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் 9.5.98 சனிக்கிழமை பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டம் இந்திய அரசியலில் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கூட்டம் முரண்பாடுகள் எதுவுமின்றி முடிவடைந்தது. இதுபற்றி ஒருங்கிணைப்பு குழுவின் அமைப்பாளர் ஜஸ்வந்த் சிங் பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில், கூட்டணிக் கட்சிகளுக்கு இடையேயான முரண்பாடுகள் குறித்து கூட்டத்தில் எதுவும் விவாதிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் தமிழ்நாடு, மேற்குவங்கம், பிகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் சட்டம்- ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. என்று பாரதிய ஜனதா கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குழு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. எனினும் அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவை பயன்படுத்தி மாநில அரசைக் கலைக்க வேண்டும் என கூட்டத்தில் யாரும் கோரவில்லை என்றார்.

இவ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சர்ச்சைக்குரிய விடயங்கள் எதுவும் விவாதிக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுப்பப்படவில்லை. அமைச்சர்கள் ஹெக்டே, ஜெத்மலானி ஆகியோரை பதவியிலிருந்து நீக்கவேண்டுமெனவும் ஜெயலலிதா கோரவில்லை. அதேவேளையில் சுப்பிரமணிய சுவாமியை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் ஏதும் இல்லையென்றும் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் ஜஸ்வந்த் சிங் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த 16 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் ஜெயலலிதா, ஹெக்டே, ஜெத்மலானி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அடுத்த கூட்டம் ஜூலை 27-ம் திகதியென முடிவு செய்யப்பட்டுள்ளது.


தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்


கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் சத்துணவு நிதிக்காக

ஞானம் - சக்தி - குமார்ஸ் - வூட்லன்ஸ் ஆதரவில்

ஈழமுரசு நடாத்தும்

இசைமுரசு 98

இசை நிகழ்ச்சி



காலம்: 24.05.1998 ஞாயிறு மாலை 5.00 மணி

AMORC

199bis, Rue St. Martin, 75003 Paris - (M°: Rambuteau / Etienne Marcel)

ஈழநிலா இசையில் சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

30 இற்கும் மேற்பட்ட புதிய பாடகர்களின் அறிமுகம்

நுழைவுச்சீட்டுக்கள் கிடைக்கும் இடங்கள்:

GANANAM
TELECOM CENTERS
195, Rue du Fg. Saint Denis
75010 PARIS.
Tel: 01 46 07 09 36
Fax: 01 46 07 00 14
M° : La Chapelle / Gare du Nord

SAKTHI GROUP
193, Rue du Fg. Saint Denis
75010 PARIS.
Tel: 01 42 09 72 14
Fax: 01 42 09 78 24
M° : La Chapelle / Gare du Nord

Kumars Shop
S.A.R.L.
80, Bld. Barbes,
75018 PARIS.
Tel: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00
M° : Marcadet Poissonniers

WOODLANDS
RESTAURANT
207, Rue du Fg. Saint Denis
75010 PARIS.
Tel: 01 40 37 08 20
M° : La Chapelle / Gare du Nord


# 'பாபர்' மசூதி இடிக்கப்பட்ட நாள் நான் மிகவும் துயரப்பட்ட நாள்'

## இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி

1992-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் திகதி (பாபர் மசூதி இடிக்கப்பட்டநாள்) நான் சந்தித்த மோசமான நாள்களில் ஒன்று என உள்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்தார்.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நீங்கள் பதவி விலகவேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கோரிவருகின்றனவே என பத்திரிகையாளர் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது இந்த விடயத்தில் எனக்கு எந்த குழப்பமும் இல்லை. எனது மனம் தெளிவாக உள்ளது. ஏனெனில் அந்த நாள் நான் மிகவும் துயரப்பட்ட நாள். அதற்காக என் மீது வழக்குப் போட்டுள்ளனர். அன்று என்ன நடந்தது என்பது என்னுடன் இருந்த பத்திரிகையாளருக்குத் தெரியும். நான் எதையும் மறைக்கவில்லை. ஆனால் எந்த அடிப்படையில் என் மீது வழக்கு போட்டுள்ளனர் என்பது தெரியவில்லை. கிரிமினல் வழக்கு வேறு, அரசியல் நோக்கத்தோடு தொடரப்படும் வழக்கு வேறு. மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் ஒருவரின் தொலைக்காட்சிப் பேட்டியை சமீபத்தில் பார்க்க நேர்ந்தது. என் மீது கடும் கிரிமினல் குற்றச்சாட்டுகள் உள்ளதாக அப்போது அவர் கூறினார். ஆனால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அவரது கட்சியைச் சார்ந்த



தலைவர்களுக்கு இதே அளவுகோல் பொருந்தாதா என்று கேட்டபோது அவரால் பதிலளிக்க இயலவில்லை.

தொழிற் சங்க நடவடிக்கையின் போது ஏற்படும் விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பாக எத்தனை பேர் .மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது? எத்தனை பேர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளது? அவையெல்லாம் கிரிமினல் குற்றங்கள் இல்லையா? என்றார் அத்வானி.

# கருணாநிதிக்கு பவள விழா

## ரூபா ஒரு கோடி செலவிட தி.மு.க. திட்டம்!

தமிழ்நாடு முதல்வரும் தி.மு.க. தலைவருமான கருணாநிதியின் 75-வது பிறந்த தினத்தை கொண்டாடுவதற்கு தி.மு.க. விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. சுய விளம்பரப்பிரியர் என மாற்று அரசியல் கட்சியினரால் விமர்சிக்கப்படும் கருணாநிதியின் இப் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் கவர்ச்சிகரமான திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்பட உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பவளவிழாக் கொண்டாட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தை தி.மு.க. தென் சென்னை மாவட்ட அமைப்பு கூட்டியது. அக் கூட்டத்தின் பின் தி.மு.க. தென்சென்னை மாவட்ட செயலாளர் சைதை கா.கிட்டு பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில்:

ரூபா 50 இலட்சத்தில் இருந்து ரூபா ஒரு கோடிவரையில் மக்களுக்கு பயனுள்ள வகையில் செலவிட்டு முதல்வரின் பிறந்த நாளைக் கொண்டாட திட்டமிட்டுள்ளோம். முதல்வரின் 75-வது பிறந்த நாளை நினைவூட்டும் வகையில் திட்டங்கள் எல்லாம் 75-ஆகவும் 75-ன் மடங்காகவும் இருக்கும்.

75 பஸ் நிறுத்தங்களில் பயணிகளுக்கான நிழற்குடை அமைக்கப்படும் 75 உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் 75 பேருக்கு இலவச சைக்கிள் ரிக்சாக்கள் 75 பேருக்கு இலவச தையல் இயந்திரங்கள் இப்படி பல்வேறு திட்டங்களை அவர் தெரிவித்தார்.

# இன்டர்நெட்டில் இந்திய தபால் முத்திரைகள்!

இந்திய அஞ்சல்துறை வெளியிட்டுள்ள சிறப்பு தபால் தலைகள் இன்டர்நெட்டில் இடம் பெறுகின்றன. சர்வதேச அளவில் சிறப்புத் தபால் தலைகள் இன்டர்நெட்டில் இடம்பெறுகின்றன. சர்வதேச அளவில் இந்தியாவின் சிறப்பு தபால் தலைகள் இன்டர்நெட்டில் இடம் பெறுவது இதுதான் முதல் முறை. இந்திய அரசின் இத் திட்டத்திற்கு 'பிலாடெலி கேட்டலாக்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டப்பணிகள் சென்னை தலைமை அஞ்சல் நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில் சுதந்திரத்திற்குப் பிறகு அதாவது 1947 முதல் இந்திய அஞ்சல் துறையால் வெளியிடப்பட்ட அனைத்து வகை சிறப்புத் தபால்தலைகளும் இதில் இடம் பெறுகின்றன. இப் பணியின் முதல் கட்டம் சென்னையில் முடிந்துவிட்டது. இதற்கான சோதனை முயற்சியை டெல்லியிலுள்ள அஞ்சல் தலைமையக அதிகாரிகள் பார்வையிட உள்ளனர். அதன்பின் இந்தியா முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.


# அறிவித்தல்

பிரான்ஸ் ராதாகிருஸ்ணா ஆலயத்தினரால் நடாத்தப்படும் 1998ம் ஆண்டுக்கான மகாபாரதம், இராமாயணம், பகவத் கீதை வினா விடை எழுத்துப் போட்டிகள். ஆடி மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக் கிழமை (26.07.98) அன்று ஆலய மண்டபத்தில் காலை 10மணி தொடக்கம் 12 1/2மணி வரை நடை பெறும்.

இப் போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறும். 1. ஆரம்பப் பிரிவு 2. மத்திய பிரிவு 3. அதி மேற்பிரிவு இம் மூன்று பிரிவுகளும் ஒரே நாளில் (26.07.98 ஞாயிற்றுக்கிழமை 10 மணி - 12 1/2) நடைபெறும். இப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றது. போட்டியில் பங்கு பெறுவோர் ஆனி 30 வரை ஞாயிறு தோறும் சென்று தங்கள் - பெயர் - விலாசம் - வயது - தொலைபேசி எண் ஆகியனவற்றைப் பதிவு செய்து கொள்ளவும். மறந்துவிடாது மாதிரி வினாவிடைப் புத்தகத்தை கேட்டுவாங்கிப் படித்து தங்கள் அறிவை மேலும் விருத்தி செய்து போட்டியில் வெற்றி பெறுங்கள்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குரிய பரிசில்கள் ஆவணி மாதம் 15ம் திகதி சனிக்கிழமை நடைபெற இருக்கும் கிருஸ்ண ஜெயந்தி அன்று இரவு 10 மணிக்கு வழங்கப்படும். ஆகவே போட்டியில் பங்கு பெறுபவர்கள் உடன் கீழ்க்கண்ட விலாசம், தொலைபேசியுடன் தொடர்பு கொள்க.

**TEMPLE RADHAKRISHNA**
**31, rue du Dr.Jean Vaquler**
**93160 Noisy le Grand , (Ling: RER-A)**
**Tel: 01 43 04 32 63**
**தமிழ்த் தொலைபேசி: 0143042766 / 0143829637**


# தனி ஈழம்தான் தமிழர்களுக்கு உயிர் கொடுக்கும் வைகோ உறுதி!

கோயம்புத்தூரில் மதிமுக ஐந்தாம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ பேசியதாவது, தமிழ்த் தேசிய இனம் ஈழத்தில் துடிக்கின்றது. இந்திரா காந்தியின் தவறான வெளிநாட்டுக் கொள்கைதான் இதற்கு காரணம். ஈழத்தமிழர் வாழ்வுக்கு என்ன தீர்வு? தனி ஈழம் வேண்டும். அதுதான் அவர்களுக்கு உயிர் கொடுக்கும். ம.தி.மு.க. கொள்கையில் எப்போதும் சமரசம் இல்லை. எனக்கூறினார் வைகோ.

# வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ மத்திய சுற்றுச் சூழல் மற்றும் காடுகள் அமைச்சகம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. 1995-ம் ஆண்டு நம் நாட்டிலிருந்து காடுகளின் மொத்தப் பரப்பளவு 638879 சதுர கிலோ மீற்றர். ஆனால் அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே சுமார் 5500 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதாக அமைச்சகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இந்த செய்தி அதிர்ச்சி தரக்கூடியதாக இருக்கின்றது.

காடுகள்தான் தேசத்தின் நுரையீரல்கள். காற்று மண்டலத்தில் ஆக்ஸிறஜனி அளவை அதிகரிக்க காடுகளின் சுவாசம் அவசியம். அரிய மூலிகைகள் உட்பட பல இரகசிய அதிசயங்களை தன்னகத்தே கொண்டவை காடுகள். இந்த அவசர யுகம் ஓசோன் படலத்தில் ஓட்டை இட்டுவிட்டது. வாகனங்கள் தொழிற்சாலைகள் போன்றவை வெளியிடும் நச்சுப் புகையால் நகரங்கள் நரகங்களாகிக் கொண்டிருக்கின்றன. இந்த கொடுமையைத் தவிர்க்க மரங்களாற்றும் பணி மகத்தானது. இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாகவே வெம்மை அதிகரித்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் வனங்கள் தொடர்ந்து அழிக்கப்படுவது அதிபயங்கரமான தற்கொலை முயற்சி. இது ஒருபுறமிருக்க அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் கடும் குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட வாய்ப்புண்டு என்கிறது ஐ.நா நிதி அமைப்பு (யுனிசெஃப்).

*- தமிழன் எக்ஸ்பிரஸ்-மே 6.12-1998 ஆசிரிய தலையங்கத்தில்*

❀ ❀ ❀

☺ அ.தி.மு.கவில் ஜெயித்த எம்.பி.க்கள் பரபரப்பாக டெல்லி சென்னையென்று பறந்து கொண்டிருக்கும்போது ராமராஜன் எம்.பி. மட்டும் தனது திருச்செந்தூர் தொகுதியில் கிராமம் கிராமமாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நன்றி நவின்று வருகின்றார்!

ஆறுமுகநேரி அருகே ஒரு கிராமத்தில் ராமராஜனை வழிமறித்த பெரியவர் ஒருவர் 'அம்மா உங்களுக்கு மட்டும் மந்திரி பதவி கொடுக்கலையே ஏன்...?' என்று கேட்டிருக்கிறார். 'தன் குழந்தைக்கு எப்போ என்ன செய்யணும் என்று ஒரு தாய்க்கு நல்லா தெரியும்!' என்று பதிலளித்திருக்கிறார் ராமராஜன்.

*- ஜூனியர் விகடன் 06.05.1998 இதழில்*

❀ ❀ ❀

☺ நோய்க்கு மருந்து கொடுப்பதைவிட்டு சில பெரிய டாக்டர்கள் கூட மந்திரிக்குச் சொல்லிவிடும் அவலம் வளர்ந்துவிட்டது. பேய் என்பது பேசப்படுவதே ஒழிய அறவே இல்லாத ஒன்று. மயங்கிய மனதுடையவர்களை மயக்கும் மாயையே அது. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். பேய் என்பது ஒரு மனநோய். அது பீடித்தவர்களுக்கு அவர்கள் மனதில் விகார எண்ணங்கள் தோன்றி அதுவே வெளியே தெரிவது போல் ஒரு மாயை எண்ணமாக செயல்படுகின்றது... ரஜனியை பில்லி சூனியத்தால் கட்டியவர்கள் சதாம் உசேனை கட்டிவிட்டால் போதுமே. அமெரிக்க அரசுக்கு பிரச்சினை தீர்ந்துவிடுமே. இவ்வளவு போர்சாதனங்கள் பணச் செலவுகள் மனித உழைப்புகள் வீணாகாது காத்துக்கொள்ளலாமே. மிக மலிவாக சென்னையிலுள்ள பில்லிசூனிய ஏவலர்களைக் கொண்டே சமாளித்து விடலாமே. சதாம் உசேனுக்கு சென்னை செய்திகள் எட்டவில்லையோ? ஏன் கூண்டுக்குள் ஒழிந்து வாழவேண்டும். பில் கிளிங்டனுக்கு பில்லி சூனியம் வைக்க வேண்டியதுதானே?

இப்படி அறியாமையை வளர்க்கக்கூடாது. பொய்யான பயங்களை மனித மனங்களில் வளர்க்கக்கூடாது.

*- தேவி 13.05.1998 இதழில் பாலபிரஜாபதி அடிகள்*

❀ ❀ ❀

☺ அன்று அரைப்பட்டினி! இன்று முக்கால் பட்டினி!!

1950-ம் ஆண்டில் இந்தியர்கள் ஆண்டுக்கு சராசரியாக ஆளுக்கு 17 கிலோ உணவு சாப்பிட்டார்கள். இன்று 13 கிலோதான் சாப்பிடுகிறார்கள்.

*- ராணி வாராந்தரி 10.05.1998 இதழில்*

❀ ❀ ❀

☺ தர்மத்தை காப்பாற்றும் போரில் சில நெளிவு சுளிவுகள் விட்டுக்கொடுத்தல் அவசியமே என்று பா.ஜ.க. தலைவர் இல. கணேசன் கூறியிருப்பதை படிச்சியா? படிச்சேண்டி! தர்மத்திற்கு புறம்பாக வாலியை மறைந்து நின்று கொன்ற ராமபிரானை வணங்கும் கட்சிக்காரராயிற்றே! அப்படித்தான் பேசுவார்.

*- நக்கீரன் 05.05.1998 இதழில்*

# ரோமானியர் காலத்து தங்க காசுகள் தமிழ்நாட்டில் கண்டுபிடிப்பு!

தமிழ்நாட்டில் இராஜபாளையம் அருகே உள்ள நத்தப்பட்டி கிராமத்தில் ரோமானியர் காலத்து தங்க காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் குழாய் பதிப்பதற்காக நிலத்தை தோண்டியபோது இக் காசுகள் கிடைத்தன. தகவல் கிடைத்ததும் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் அப்பகுதிக்குச் சென்று அக் காசுகளை ஆய்வு செய்தனர்.

இவை தலா 3 கிராம் எடையுடன் 24 கரட் தங்கத்தினாலானவை. இந்த நாணயங்களில் ரோமானிய மன்னர்களின் உருவமும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை கி.மு முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி 50-ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாமென கருதப்படுகின்றது.

# Rhytham of Life

**சூரிச் மாநகரில் இந்திய கலை, கலாச்சார நடனம்**
**உலகளாவிய புகழ்பெற்ற தெலுங்கு சினிமா**
**நாட்டியதாரகைகளுடன் திருக்கோணேஸ்வர**
**நடனாலயமும் இணைந்து வழங்கும் பரதநாட்டியம்,**
**குச்சுப்பிடி, மற்றும் இந்திய பாரம்பரிய நடனங்களுடன்**
**உன்னதமான நாட்டிய கலைமாலைப் பொழுது!**



## Rhytham of Life

**இடம்:**
*Schützenhaus Albisgülti, Zurich.*

**காலம்:** வியாழன் 21.05.98
**நேரம்:** 15.00 - 20.00 மணி

உங்கள் ஆசனங்களைப்
பதிவு செய்வதற்கு

**01–4816003,**
**01–2259595,**

**தொலைநகல்:**
**01–2259596**

*Hotline: 0794022795*

Pub.

# உலகச் செய்திகள்

## அயர்லாந்து சமாதான ஒப்பந்த வாக்கெடுப்பு: ரொனி பிளேயரும், ஜோன் மேஜரும் ஒரே மேடையில் பிரச்சாரம்

(பெல்பாஸ்ட் மே - 7)

அயர்லாந்து சமாதான ஒப்பந்தம் தொடர்பாக இம்மாதம் 22-ம் திகதி அயர்லாந்திலும் பிரித்தானிய நிர்வாகத்திலுள்ள வட அயர்லாந்திலும் நடைபெற இருக்கும் சர்வசன வாக்கெடுப்பில் ஒப்பந்தத்துக்கு ஆதரவாக மக்களை வாக்களிக்குமாறு தற்போதைய பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரும் முன்னாள் பிரதமர் ஜோன் மேஜரும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பந்தப்படி பிரித்தானிய சிறைகளில் உள்ள அயர்லாந்து கெரில்லாக்களை விடுதலை செய்வது உட்பட இந்த சமாதான உடன்படிக்கையில் உள்ள பல்வேறு



அரசியலில் எதிரெதிர் துருவங்களாக உள்ள இந்த இருவரும் சுமார் 3200 பேரை காவு கொண்ட 30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தங்களுக்கிடையிலான கொள்கை வேறுபாடுகளை மறந்து, சமாதான ஒப்பந்தத்தை ஆதரித்து ஒருங்கிணைந்து பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

நேற்று இது தொடர்பாக நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் வட அயர்லாந்துக்கு பிரிட்டன் அளித்துவரும் நிதி உதவி ஒப் விடயங்கள் பற்றி பத்திரிகையாளர்களும் மக்களும் கேட்ட கேள்விகளுக்கு தொழிற் கட்சியைச் சேர்ந்த பிரதமர் ரொனி பிளேயரும், கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த ஜோன் மேஜரும் ஒரே மேடையில் அருகருகே அமர்ந்து பொறுமையாகப் பதிலளித்தனர். இந்த சர்வசன வாக்கெடுப்பு தோல்வியில் முடியுமானால் அயர்லாந்து பிரச்சினையில் மிகப் பெரிய பின்னடைவு ஏற்படும் என்று இருவரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## பாப்பரசரின் தலைமைப் பாதுகாவலரும் அவரது மனைவியும் சுட்டுக்கொலை, சுட்டவரும் தற்கொலை

(ரோம் மே -5)

பரிசுத்தப் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் தலைமைப் பாதுகாவலர் அலுவாஸ் ஈஸ்டர்மானையும் அவரது மனைவி கிளாடிசையும், பாப்பரசரின் பாதுகாவல் பிரிவைச் சேர்ந்த செற்றிக் ரோர்னே என்பவர் சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் 04.05.98 திங்கள் இரவு 9.00 மணிக்கு பாப்பரசரின் வதிவிடத்திலிருந்து சில கிலோ மீற்றர் தூரத்தில் நடைபெற்றது.

பாப்பரசரின் மெய்காவல் பிரிவின் தலைமைத் தளபதியாக ஈஸ்டர்மான் பதவி உயர்வு பெற்ற 10 மணி நேரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. தனது 26 வயதில் வத்திக்கானில் பாப்பரசரின் பாதுகாப்பு படைப் பிரிவில் சேர்ந்து கொண்ட அலுவாஸ் ஈஸ்ரர்மான் தனது 43 வயதில் அந்தப் படைப்பிரிவின் தளபதியாக பாப்பரசர் இரண்டாவது அரு



ளப்பர் சின்னப்பரால் அன்று காலையே நியமிக்கப்பட்டார்.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஈஸ்ரர்மான் 1981-ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதி முகமட் அலி ஆகா என்ற துப்பாக்கிதாரி பாப்பரசரை சுட்டுக்கொல்ல முயன்ற போது பாப்பரசரை மறைத்து ஒரு கேடயம் போல் நின்று செயற்பட்டதன் மூலம் பலரதும் பாராட்டைப் பெற்றவர். அவரது மனைவி வெனிசுவெலா நாட்டைச் சேர்ந்தவர்.

ஈஸ்ரர்மன் தலைமைப் பாதுகாவலராக பதவி உயர்த்தப்பட்டதை விரும்பாததனாலேயே செற்றிக் ரோர்னே அவரையும் அவரது மனைவியையும் சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக நம்பப்படுகின்றது. சுவிஸ் நாட்டவரான இவருக்கு கணப்பொழுதில் ஏற்பட்ட சித்தப்பிரமையே இந்தக்கொலைகளுக்கும் தற்கொலைக்கும் காரணம் என்று வத்திக்கானின் பிரதான பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## பாலஸ்தீனியர்களுக்கு சுயாட்சி: அமெரிக்க ஆலோசனைகளை இஸ்ரேல் நிராகரிப்பு

(ஜெருசலேம் மே-8)

மத்தியகிழக்கு சமாதான முயற்சிகள் தொடர்பாக கடந்த 14 மாத காலமாக ஏற்பட்டிருக்கும் தேக்க நிலையை அகற்றி மீண்டும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகளை இஸ்ரேல் மீண்டும் நிராகரித்துவிட்டது.



சமாதானப் பிரச்சினையில் முட்டுக்கட்டையாக இருக்கும் இஸ்ரேலிய, பாலஸ்தீன எல்லைகள், ஜெருசலேமின் எதிர்காலம், பாலஸ்தீனப் பிரதேசங்களில் இடம்பெறும் யூத்தக் குடியேற்றங்கள் பாலஸ்தீன அகதிகள் முதலான முக்கிய பிரச்சினைகளுக்கான இறுதிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு பாலஸ்தீன அதிகார சபைக்கு 13 சதவீதமான நிலத்தை இஸ்ரேல் கையளிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியிருந்தது.

அமெரிக்காவின் இந்தக் கோரிக்கை இஸ்ரேலிய அரசின் பாதுகாப்புக் காரணங்களுக்கு பொருத்தமில்லாமல் இருப்பதால் அதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று இஸ்ரேலிய பிரதமர் நெட்டன்யாகுவின் சார்பில் அவரது ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த முடிவு எதிர்வரும் திங்கட்கிழமை வெள்ளை மாளிகையில் இடம்பெற இருக்கும் தலைவர்கள் மட்டத்திலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இத்தாலியில் சேற்றோட்ட - நிலச்சறுக்கலில் நூற்றுக்கணக்கானோர் புதையுண்டு பலி

கடந்த வாரத்தில் 3 நாட்களாக இடம்பெற்ற சேற்றோட்ட நிலைச் சறுக்கலில் 118 பேர் அடித்துச் செல்லப்பட்டு பலியாகியுள்ளனர். இந்த சேற்றோட்ட நிலச்சறுக்கல் இத்தாலியில் நேப்ள் பிரதேசத்து சார்னோ நகரத்திலும் அதைச் சுற்றிய ஊர் பகுதிகளிலும் நடந்திருக்கிறது. இந்த இயற்கை அனர்த்தத்தினால் 300-400 பேர் இறந்திருக்கலாம் என அந்த நகரத்து மக்கள் கூறுகிறார்கள். இவ்வாறாக அடித்துச் செல்லப்பட்ட ஒரு இளைஞர் தனது வீட்டுக்கு அடியில் சேற்றில் மூன்று நாட்களாகப் புதைந்து இருந்தார். அவரை அவரின் (நிச்சயிக்கப்பட்ட) மனைவி மீட்புப் படையினருக்குத் தெரிவித்து காப்பாற்றியிருக்கிறார்.

3 நாட்களாக தனது சிறுநீரைக் குடித்து உயிரைக் காப்பாற்றிக்கொண்டதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த இளைஞர் தெரிவித்துள்ளார்.

இந்த பிரளயம் காரணமாக 30,000 மக்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள், சுமார் 3000 மக்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள், பாதுகாப்பு மீட்புப் பணியில் 3000 படையினர் ஈடுபட்டுள்ளனர். வெய்யில் சூடு 3 மீற்றர் தடிப்பான சேற்றுப்படை (மட்டுமே) காயவைக்கும் என கருதப்படுகிறது. இந்த இழப்புகளுக்கு 50 கோடி லீராவை இத்தாலி ஒதுக்கியிருக்கிறது.

## ஆப்கான் பேச்சுவார்த்தை முறிவு தலிபான்களும் எதிரணியும் கடும்மோதல்

(இஸ்லாமாபாத் மே- 5)

ஆப்கானிஸ்தானில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததையடுத்து ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் தலிபான்களுக்கும், அகமட் ஷா மசூத் தலைமையிலான எதிரணியினருக்கும் இடையில் கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இருதரப்பாரும் பலத்த ஆட்டிலெறி ஏவுகணை யுத்தத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கும் தலிபான் அமைப்பு, தாம் எதிர்தரப்பினரிடமிருந்து 10 இராணுவ நிலைகளை கைப்பற்றிவிட்டதாக உரிமை கோரியுள்ளது.

எதிரணியினர் இதுபற்றி எதுவும் தெரிவிக்காத போதிலும் தலிபான்கள் தமது பகுதிகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடாத்தினார்கள் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

வெளிநாடுகளுக்கான அச்சுவேலைகள் குறைந்த விலை

வண்ண நிறங்களிலான அச்சுவேலைகள் சிறந்த தரம்

அனைத்து வேலைகளும் குறித்த தவணை

திங்கள் முதல் - சனி வரை 10.00 – 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris - Tel & Fax: 01 42 09 60 64

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம்

20 Rue Labat, 75018 Paris - M°: Marcadet Poissonniers

எனும் முகவரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் உங்கள் அனைத்து கணினித் தேவைகளுக்கும்....

VPI Multimedia

Conseil et Service

Tel: 0160790607 / 0660404351


'சோதனையானதொரு காலகட்டத்தில் எமது தேசத்தின் விடுதலைச் சுடர் அணைந்து போகாது பாதுகாப்பது உங்களின் கைகளில்தான் தங்கியிருக்கிறது'
தேசியத் தலைவரின் வேண்டுதலுக்கிணங்க
சுவிஸ்வாழ் தமிழீழ மக்களின்
போராட்டப் பெருநிதி
'மேலதிகமான பங்களிப்பை கூடுதலான நிதி உதவியினை வேண்டி நிற்கிறோம்'
வருடா வருடம் நிதி வழங்கினோம்
இவ் வருடம் தலைவரின் வேண்டுதலுக்கிணங்க
பெருநிதி கொடுப்போம்
நாள் ஒன்றுக்கு 10 பிராங்குக்குக் குறையாத தொகையாக இவ் வருடம் பெருநிதிக்குக் கொடுப்போம்
'எமது வேருக்கு நீர் பாய்ச்சுவோம் விடுதலையை விரைவாக்குவோம்'
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
சுவிஸ் பணியகம்
TAMIL EELAM



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# வெற்றியை நமதாக்குவோம்

சிறீலங்கா அரசின் வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கைக்கு ஒரு வயது பூர்த்தியாகிவிட்டது. இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது அதற்கு இரண்டு முகங்கள் இருந்தன.

ஒன்று ஒப்பனையில்லாத உண்மை முகம். மற்றது ஒப்பனையால் உரு மாற்றம் செய்யப்பட்ட போலி முகம்.

ஒப்பனையில்லாத உண்மை முகம் என்பது - தமிழர் தாயகத்தை அழித்து தமிழீழ தேசியத்தை நிர்மூலமாக்க துடிக்கின்ற பௌத்த சிங்கள பேரினவாதமுகம் உருமாற்றம் செய்யப்பட்ட போலி முகம் என்பது தரைவழிப்பாதை இன்மையால் துன்பப்படும் யாழ்ப்பாண மக்களுடைய துன்பங்களுக்காக பரிதாபப்படுவதுபோல், அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உண்மையிலேயே விரும்புவதுபோல் பாசாங்கு செய்கின்ற சமாதானமுகம்.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையிலான 64 கிலோமீற்றர் நீளமுள்ள ஏ-9 நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதன் மூலம், சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் அதாவது விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விடுவார்கள், ஈழக் கோரிக்கை இல்லாதொழிந்துவிடும் சிறீலங்கா சமாதானப் பூங்காவாக மாறிவிடும், யாழ்ப்பாண மக்கள் உத்தரதேவியிலும் யாழ்தேவியிலும் பயமின்றி ஏறி மகிழ்வார்கள். சுருக்கமாகச் சொல்வதானால் யுத்தத்தின் மூலம் சமாதானம் வந்துவிடும் என்று சிறீலங்காவின் ஆளும் பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சொல்லிக்கொண்டது.

அரசாங்கத்தின் முழுக்குறிக்கோழுமே விடுதலைப் புலிகளை இராணுவரீதியாக தோற்கடிக்க வேண்டும் என்பதிலேயே இருந்தது. அதாவது விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதன் மூலம் தமிழீழக் கோரிக்கையையும், தமிழர் தாயகத்தையும் அழித்துவிடலாம் என்பது அரசின் நம்பிக்கையாக இருந்தது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டால் அவர்களைத் தங்கள் காலடியில் விழுந்து கிடக்கும் ஒட்டுண்ணித் தமிழ் குழுக்களின் நிலைக்கு ஆக்கிவிட்டால் - தமிழர் தாயகத்தை படிப்படியாக ஆக்கிரமித்து சிங்கள மயப்படுத்துவதன் மூலம் தமிழர்களுடைய உரிமைப் போரை நசுக்கிவிடலாம் என்பது அரசின் மூலோபாயமாக இருந்தது.

இதன் அடிப்படையில் சிறீலங்கா அரசாங்கம் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கும்போது தன்னுடைய படை பலத்தில் சரி அரைவாசிக்கு மேற்பட்ட பகுதியை அந்த நடவடிக்கையில் ஈடுபடுத்துவதன் மூலம் 30 முதல் 45 நாள் கால இடைவெளிக்குள் தங்கள் இலக்கை அடைந்து விடலாம் என்று நம்பியது. அதே நேரத்தில் இந்த யுத்தத்தை கௌரவத்திற்கான ஒரு யுத்தமாக விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள வைப்பதன் மூலம் அவர்களை நேரடிச் சமருக்கு அழைத்து மூர்க்கத்தனமாக தன்னுடைய இராணுவ படை பல வல்லாண்மையை பிரயோகிப்பதன் மூலம் அவர்களுக்கு கடுமையான மீள முடியாத ஆட்பல, ஆயுதப்படைப்பல இழப்பை ஏற்படுத்திவிடலாம் என்றும் யாழ்ப்பாணத்துக்கு அடுத்தபடியாக வன்னிப் பெருநிலப் பரப்பின் முக்கிய பகுதிகளை கைப்பற்றி விடுவதன் மூலம் அவர்கள் தோற்கடிக்கப்பட்ட சிறு பயங்கரவாதக் குழுவினர் என்ற தோற்றப்பாட்டையும் உருவாக்கி விடலாம் என்றும் சிறீலங்கா அரசு நினைத்தது.

ஆனால் எப்போதும் ஒரு தேசத்தின் விடுதலை வரலாற்றை ஆக்கிரமிப்பாளர்கள் தீர்மானிப்பதில்லை. அது போராடுகின்ற மக்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. தமிழீழ தேசத்தைப் பொறுத்தவரை போராடுகின்ற மக்கள் என்பது விடுதலைப் புலிகளே!

எனவே அவர்கள் தமிழீழ தேசத்தின் வரலாற்றை தீர்மானிப்பதற்காக இந்த யுத்தத்தை தமிழ் மக்களுடைய சுய கௌரவத்தையும் தமிழீழ தேசத்தினுடைய இருத்தலையும் காப்பாற்றுவதற்கான யுத்தமாக எதிர்கொண்டு ஒரு மாபெரும் பாச்சலை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றார்கள். இன்னும் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த யுத்தத்தில் அவர்கள் பலவீனப்படுத்தப்பட்டு விடுவார்கள் என்று சிறீலங்கா அரசாங்கம் எதிர்பார்த்ததற்கு மாறாக நானாய வரலாற்றில் முன்னுதாரணமாக; காட்டப்படக்கூடிய மாபெரும் வெற்றிகளை அவர்கள் காட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களுடைய இந்த வெற்றிகள் தமிழீழ தேசத்தினுடைய வெற்றிகள். வெற்றிகள் என்பதிலும் நாளை எமது தேசத்திற்குக் கிடைக்கப்போகின்ற இறுதி வெற்றிக்கான அடித்தளம் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆயினும் இந்த வெற்றிகளை நாம் தக்கவைக்க வேண்டுமானால்; நமக்கு வேண்டுமானால் இந்த வெற்றிகளுக்கெல்லாம் அடித்தளம் அமைத்துக் கொடுத்து ஆதார சுருதியாக இருந்து போர்க்களத்தில் திற்கும் நமது தேசத்தின் புதல்வர்களையும் புதல்விகளையும் வழி நடத்தும் நமது தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் கரங்களை பலப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை புலம்பெயர்ந்த தமிழர்கள், அனைவருக்கும் உண்டு.

# இவ்வார தலைப்புகள்

## தினமின (சிங்களம்)

(06.05.98)

### சிறுவர்களையும் நாட்டையும் காப்பாற்ற..

யுத்தம் தொடரும்வரை அதன் தீமையான விளைவுகளும் தொடரும். எனவே யுத்தமும் அதனை உண்டாக்கிய இனப்பிரச்சினையையும் நிறுத்தப்பட வேண்டும். அவற்றை நிறுத்துவதற்கு அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை அமுல்படுத்தப்பட வேண்டும். இதனைச் செய்தால்தான் சிறுவர்களை மாத்திரமல்ல, முழு நாட்டையும் காப்பாற்றமுடியும்.

## வீரகேசரி

(06.05.98)

### ஒட்டுண்ணோவுக்குத் தரப்பட்ட பணி

ஒலரா ஒட்டுண்ணோவின் வருகை ஓரளவு பரபரப்பையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகள் இயக்கம் சிறுவர்களை போரில் ஈடுபடுத்துகிறது என வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் ஐ.நா. செயலாளருக்கு செய்து கொண்ட முறைப்பாட்டின் காரணமாகவே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது. அது உண்மையை நேரில் கண்டறியும் நோக்கம் உடையதாகவும் உள்ளது. சர்வதேசச் சமூகத்தின் கண்களில் புலிகள் இயக்கத்தினரைக் குற்றவாளிகளாக்கி அவர்களைப் பலவீனப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது என்றுகூடச் சொல்லலாம்.

ஒட்டுண்ணு போர்நடக்கும் வன்னிப் பிரதேசத்துக்கும் போயிருந்தார். அவர் அங்கு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களைச் சந்திக்க உள்ளார் என அறிந்த நிருபர் 'தாங்கள் வன்னியில் நடக்கும் போரை நிறுத்த ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா?' எனக் கேட்ட கேள்விக்குக் கிடைத்த பதில்.

...ஆயுத மோதல்களில் சிறுவர்கள் பயன்படுத்துவது பற்றி ஆராய்வதே எனக்குத் தரப்பட்டுள்ள பணியாகும். இதன் தொடர்பிலேயே நான் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரையும் சந்திக்க உள்ளேன் எனப் புன்னகையுடன் ஒட்டுண்ணு கூறினார்.

## வீரகேசரி

(07.05.98)

### சமுதாயத்தை அழிக்கும் ரத்வத்தை

ஒட்டுண்ணு இராணுவ அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தவறவில்லை. அப்போது அங்கு வேறுயாரும் அனுமதிக்கப்படவில்லை. மே ஆறாம் திகதி அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் ஒட்டுண்ணு இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்குச் சென்றார். அடுத்தநாள்வரை அவர் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் கழித்தார். புலிகள் இயக்கத்தினருடனும் பேச்சுவார்த்தைகளும் நடத்தியுள்ளார்.

இது இவ்வாறிருக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஒட்டுண்ணுவை வரவழைத்ததற்காக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் பாராட்டியுள்ளார். அவருக்கே உரிய பாணியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையையும் தாக்கிப் பேசவும் அவர் மறக்கவில்லை.

....... 15 ஆயிரம் பள்ளி மாணவர்களை கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்த்து இளம் சமுதாயத்தை அழித்தொழிக்கும் முயற்சியைக் கைவிட்டு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை தமது பதவியை உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை காலையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## தினமணி

(12.05.98)

### அணு குண்டின் எதிரொலிகள்

அணுகுண்டுகளை வெடித்து இந்தியா சோதனை நடத்தியதற்கு பாரதீய ஜனதாவும் அதன் சில கூட்டணிக் கட்சிகளும் வரவேற்புத் தெரிவித்துள்ளன. அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள், தொழில் நுட்பம் என்ற அளவில் இதை வரவேற்கலாமேதவிர பா.ஜ.க. அரசின் சாதனையாக கருதமுடியாது என்று கூறியுள்ளன. தேசியப் பாதுகாப்பில் பா.ஜ.க. அரசுக்கு உள்ள உறுதியை இச் சோதனை வெளிக்காட்டுகிறது.

முன்பிருந்த ஆட்சிகள் சர்வதேச நிர்ப்பந்தத்துக்கு பணிந்து இதை செய்யத் தவறிவிட்டன. என்று பா.ஜ.க தலைவர் குஷாபாவ் தக்கரே கூறியுள்ளார். முக்கிய பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப பா.ஜ.க. அரசு செய்த முயற்சி. இப்போதைக்கு இம் முயற்சி தேவையற்றது என்று அகில இந்திய பார்வார்டு பிளாக் தேசியச் செயலாளர் ஜி.தேவராஜன் கூறியுள்ளார்.

1974ம் ஆண்டு இந்திராகாந்தி துவக்கிவைத்த முயற்சியின் உச்சநிலைதான் தற்போதைய அணுகுண்டு வெடிப்புச் சோதனை. இதை வெற்றிகரமாக்கிய விஞ்ஞானிகளையும், பொறியியலாளர்களையும் பாராட்டுகிறோம். என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் மாதவராவ் சிந்தியா கூறியுள்ளார். இந்தியா கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகவே அணு ஆயுத வல்லரசாகத் திகழ்கிறது என்பது யதார்த்த நிலை.

இன்றைய சோதனை இதை உறுதிப்படுத்தி உள்ளது இந்த சோதனையின் மூலம் எழும் நிர்ப்பந்தங்களை எதிர்கொள்ள இந்தியா தயாராக வேண்டும் என்று ஐக்கிய முன்னணி செய்தி தொடர்பாளர் ஜெயபால் ரெட்டி கருத்துத் தெரிவித்துள்ளார். அணுகுண்டு தொழில்நுட்பத்தில் நாம் யாருக்கும் சளைத்தவரில்லை என்பது பறைசாற்றப்பட்டிருக்கிறது என்று முன்னாள் பிரதமர் குஜ்ரால் கூறியுள்ளார்.

சமாஜ்வாதி கட்சி பொதுச் செயலாளர் அமர்சிங் தெரிவிக்கையில், அணு குண்டுகளை வெடிக்கவைத்ததனை பா.ஜ.க பெருமையாக கொண்டாட முடியாது. இச் சோதனைத் திட்டத்தின் மூலம் நாட்டின் பாதுகாப்புப் பிரச்சினையையும், பா.ஜ.க அரசியலாக்கி வருகிறது என்று குறிப்பிட்டார்.

### அணுகுண்டு சோதனை நடத்த இந்தியாவுக்கு உரிமை உண்டு

அணு குண்டுச் சோதனை நடத்த இந்தியாவுக்கு உரிமை உண்டு என வியன்னாவை சேர்ந்த சர்வதேச அணு சக்தி கழகம் கூறியுள்ளது.

அணு ஆயுத ஒழிப்பு தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடாத காரணத்தால் அணு குண்டு சோதனை நடத்த அதற்கு உரிமை உள்ளது. எந்த விதியையும் மீறியதாக அதைக் குற்றஞ்சாட்ட முடியாது என இந்த அணுசக்தி கழகம் தெரிவித்துள்ளது.

# புலிகளின் போர் நிறுத்தத்திற்கு ஐ.நா. பாராட்டு

ஐ.நா விசேட பிரதிநிதி திரு ஒலரா ஒட்டுண்ணு அவர்களின் வடபகுதி விஜயத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த போர்நிறுத்தத்திற்கு ஐ.நா பாராட்டும், வரவேற்பும் தெரிவித்துள்ளது.

ஐ.நா தகவல் மையத்தினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் ஐ.நா பிரதிநிதியின் விஜயத்தையொட்டி இருநாட்கள் கடைப்பிடிக்கப் பட்ட இந்த போர் நிறுத்தத்தை ஐ.நா வரவேற்கிறது. இப் போர் நிறுத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுமெனவும் ஐ.நா நம்பிக்கை கொண்டுள்ளது என்பதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால் புலிகளினால் செவ்வையாக போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்ட போதும் சிறீலங்கா இராணுவத்தரப்பு அதனை மீறியுள்ளமை பற்றி ஐ.நா இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை

புலிகளின் போர் நிறுத்த வேளையில் ஐ.நாவின் விசேட



பிரதிநிதி யாழ்ப்பாணம், வவுனியா, மடு ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்திருந்தார்.

# நீதியின் பேரில் ஒரு போர்

ஒலிவாங்கியாரது நகர்வலம் பிரான்சில் மட்டும்தான் இடம்பெறுமோ? ஏன் அப்பாற் செல்லாதோ என்ற எண்ணங்கள் பலருக்கும் ஏற்பட்டிருந்தமை ஒலிவாங்கியார் காதுகளுக்கு எட்டியதால் (பாம்புக் காதாக்கும்) இம்முறை பிரான்சில் இருந்து 'எகிறிப் பாய்ந்து நோர்வேக்குத் தாவி (அட ... தொலைபேசி ஊடாக ஐயா) தன்னை அறிமுகப்படுத்தி தமிழ் மரண தண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழு அமைப்பாளர்களில் ஒருவரான திரு. சுகந்தனின் வாயைக் கிளறினார்.

**ஒலிவாங்கியார்: நீங்கள் சார்ந்த தமிழ் மரண தண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழுவின் பின்னணி நோக்கம் பற்றி சொல்ல முடியுமா?**

**சுகந்தன்:** நல்லது, ராஜீவ் காந்தி கொலைவழக்கில் எனது மைத்துனர் ஒருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ் வழக்கின் தீர்ப்பினை அறிந்து அவரையும் அவர் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் துரைச்சாமி அவர்களையும் சந்திப்பதற்காக இந்தியா சென்றேன். அவ்வாறு சென்றபோது இந்த வழக்கறிஞர்கள் எல்லோருக்கும் இது நூறில் ஒரு வழக்கு என்ற எண்ணமே என் மனதில் இருந்தது. அங்கே போய்ப் பார்த்தபோது என்னுடைய இந்த எண்ணம் எவ்வளவு தவறானது என்பதை நான் உணர்ந்தேன். தமிழின உணர்வின் காரணமாக அவர்கள் தங்களுக்குக் கிடைத்த ஏனைய வழக்குகள் எல்லாவற்றையும் விட்டு இவ் வழக்கினை பிரதான இலக்காகக்கொண்டு செயற்பட்டு வந்ததையும், வருகின்றமையையும் என்னால் காணக்கூடியதாக இருந்தது. பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்றம் குற்றம் சுமத்தப்பட்ட 26 பேருக்கும் (ஈழத்தமிழர்கள்

**எமது செயற்பாடுகளை நாம் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களை நோக்கியும், தமிழ் மொழி பேசாத ஏனைய வெளிநாட்டவர்களை நோக்கியும் மனித உரிமைகளின் பெயரால் மேற்கொண்டுவருகின்றோம்.**

13 இந்தியத் தமிழர்கள்) நியாயமற்றமுறையில் தூக்குத் தண்டனை வழங்கியதை அடுத்து இந்தியாவில் உள்ள தமிழின உணர்வாளர்கள் திரு நெடுமாறன் ஐயாவின் தலைமையில் ஒன்று கூடி அடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தார்கள். இந்த ஒன்று கூடலில் பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்வதெனவும் வழக்கிற்குத் தேவையான நிதியினை தமிழ் மக்களிடமிருந்து திரட்டுவதெனவும் தீர்மானித்து செயற்படத் தொடங்கினார்கள். இவைகளை நான் நேரில் கண்டபோது எனக்குள் ஒரு குற்றுணர்வு ஏற்பட்டது. நானும் அவர்களுடன் இணைந்து என்னால் முடிந்ததை செய்யவிரும்பினேன்.

இந்தியாவிலிருந்து திரும்பிய நான் எனது நண்பர்களுக்கு பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடத்தப்பட்ட விதம் தீர்ப்பிலுள்ள நியாயமற்ற தன்மை அரசியல் நோக்கம் இந்தியாவில் செயற்பட்டுவரும் குழு தொடர்பான விபரங்களைக் கூறி நாமும் எம்மாலானதைச் செய்யவேண்டும் என கேட்டுக்கொண்டேன். இதன் விளைவு தான் இந்த தமிழ் மரண தண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழு.

இந்த ஆண்டினை மனித உரிமைகளுக்கான ஆண்டாக ஐ.நா. சபை அறிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த 26 பேர் மீதும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை உலக மக்களுக்கு தெரியப்படுத்தி அதனூடாக ராஜீவ் காந்தி கொலையில் நேரடியாக சம்பந்தப்படாத அந்த 26 பேருக்கும் ஒரு நியாயம் கிடைக்க குரல் கொடுப்பதுடன், உச்ச நீதிமன்ற மேன்முறையீட்டுக்காக ஏற்படும் செலவினை புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து திரட்டுவதை நோக்கமாகவும் கொண்டு செயற்படத் தொடங்கினோம்.

**ஒலிவாங்கியார்: இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேர் பற்றியும் சிறிது சொல்லுங்கள்.**

**சுகந்தன்:** இந்த 26 பேரில் 13 பேர் ஈழத்தமிழர்கள், 13 பேர் இந்தியத் தமிழர்கள். இவர்களில் ஐவர் பெண்கள். அதிலும் ஆதிரை என்பவர் கைதுசெய்யப்படும்போது அவருக்கு வயது 17, சட்டப்படி அவர் பராயமடையாதவர்.

இவைகள் போக, இந்த 26 பேரும் தடாச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதால் அவர்களே தாங்கள் குற்றவாளிகள் அல்ல என நிரூபிக்கவேண்டும். ஆனால் நீதிமன்றம் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்காமல், பொலிஸ் தரப்பிற்கு வழங்கியுள்ளது.

மேலும், இந்த 26 பேரும் ராஜீவ் காந்தி கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டதாக இவர்கள் மீது எந்தக் குற்றச் சாட்டுக்களும் இல்லை. மாறாக, ஒரு அனுமானத்தின் அடிப்படையிலேயே இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு இவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இன்னும், இது தொடர்பான மேலதிக விபரங்களுக்காக **'ஏது செய்தோம் நாம்?'** எனும் தலைப்பில் **ராஜீவ் காந்தி கொலை வழக்கு: அதிகாரம், அரசியல், மரணதண்டனை** பற்றி ஒரு சிறு நூலினை வெளியிட்டுள்ளோம். அதனைப் படிப்பது பயனுள்ளதாகவிருக்கும்.

## நகர்வலம்

**ஒலிவாங்கியார்: உங்கள் செயற்பாடுகளின் வடிவம் பற்றி?**

**சுகந்தன்:** எமது செயற்பாடுகளை நாம் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களை நோக்கியும், தமிழ் மொழி பேசாத ஏனைய வெளிநாட்டவர்களை நோக்கியும் மனித உரிமைகளின் பெயரால் மேற்கொண்டுவருகின்றோம். முதலில், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல ஒரு சிறு நூலினை வெளியிட்டுள்ளோம், தொடர்ந்து, ஆங்கிலம்—தமிழில் ஒரு Web Side ஐயும் ஆரம்பிக்கவுள்ளோம். இன்னும் சில தினங்களில் இதனை யாவரும் பார்வையிடலாம். இதன் E.Mail முகவரி: Save@26lives.org Web: http://www.26live.org

அத்துடன் விரைவில் ஆங்கிலத்தில் ஒரு சிறு பிரசுரத்தினை கொண்டு வரவிருக்கிறோம். மேலும், எங்கள் செயற்பாடுகளுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு குழுவினை அமைத்து எங்கள் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் முயற்சிகள் செய்து வருகின்றோம். விரைவில் அந்தந்த நாடுகளுக்கான ஒருங்கிணைப்பாளர்கள் பற்றிய விபரத்தினை பத்திரிகைகள், வானொலிகள் மூலம் மக்களுக்கு அறியத்தருவோம்.

தற்போது நோர்வே, இலண்டன் ஆகிய நாடுகளில் இக் குழு அமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருகின்றோம். நோர்வேயில் இக் குழுவின் சார்பாக நாம் சர்வதேச மன்னிப்புச் சபை, ஏனைய மனிதவுரிமை அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோரை சந்தித்து வருகின்றோம். அவர்கள் மத்தியில் எமது கோரிக்கைக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது.

**ஒலிவாங்கியார்: தேவையான நிதியை எவ்வாறு திரட்டவுள்ளீர்கள்?**

**சுகந்தன்:** இந்த மேன்முறையீட்டிற்காக சுமார் 50 லட்சம் இந்திய ரூபாய்கள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியை தமிழ்

**நோர்வே, இலண்டன் ஆகிய நாடுகளில் இக் குழு அமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருகின்றோம். நோர்வேயில் இக் குழுவின் சார்பாக நாம் சர்வதேச மன்னிப்புச்சபை, ஏனைய மனிதவுரிமை அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோரை சந்தித்து வருகின்றோம்.**

பேசும் மக்களிடம் இருந்து திரட்டுவதாகவே தீர்மானித்துள்ளோம்.

இந்தியாவில் திரு.நெடுமாறன் ஐயாவின் தலைமையில் 'தமிழர் நிதி' என்ற பெயரில் ஒரு குழு இயங்கி நிதி திரட்டிவருகிறது. இக் குழுவில் இந்திய பாதுகாப்பு அமைச்சு ஜோர்ஜ் பெர்னாண்டஸ், முன்னாள் அமைச்சர் ஆனூர் ஜெகதீசன், பெ.மணியரசன், தியாகு, சுப வீரபாண்டியன் போன்றோர்களும் இருந்து செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்துள்ள ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தமிழ் மரண தண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழு இந்த நிதியை திரட்டி வருகிறது. தற்போது இக் குழு நோர்வே நாட்டில் ஒரு வங்கிக் கணக்கினை ஆரம்பித்திருக்கிறது. அந்த வங்கிக் கணக்கு இலக்கம்: **5202 05 44805**

**Thamilar Nidhi**
**Den Norske Bank, Norway**

நிதிப்பங்களிப்பு செய்ய விரும்புவோர் மேற்குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் தங்கள் பங்களிப்பினை செலுத்தலாம். இதேபோன்று ஏனைய நாடுகளிலும் விரைவில் நாம் ஒரு வங்கிக் கணக்கினை ஆரம்பித்துவிட்டு பத்திரிகைகள், வானொலி மூலம் நாம் அதனை அறிவிப்போம்.

இதனைவிட, கீழ்க்கண்டவாறு தந்தி அல்லது கடிதங்களை இந்திய குடியரசுத் தலைவருக்கும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கும் அனுப்பும்படி தமிழ் மக்களை வேண்டுகின்றோம்.

**அனுப்பவேண்டிய முகவரிகள்:**

| | |
|---|---|
| Hon. K. R. Narayanan | Justice M.M Punchi |
| President of India | Chief Justice of India |
| Rashtrapati Bavan | Supreme Court |
| New Delhi -110 004, India. | New Delgi -110 001 |
| Telegrams: President, | India |
| New Delhi, India | Telegrams Chief Justice |
| Fax: + 9111301 7290 | New Delhi, India |
| **மரியாதை விளிப்பு:** | **மரியாதை விளிப்பு:** |
| ***Dear President*** | ***Dear Chief Justice*** |

தந்திகள், கடிதங்கள் பிரதிகளை கீழ்க்கண்ட முகவரிக்கும் அனுப்பலாம்.

Minister of Home Affairs,
Ministry of Home Affairs
North Block
New Delhi -110 001, India.
Fax: + 91 11 301 5750

**கடிதத்தில் இடம்பெறவேண்டிய விபரங்கள்:**

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

Dear...........................

We Stoutly oppose and Condemn the Death Sentence imposed by the Designated court-I Poonamalee, Chennai on 26 Innocent Persons, including one minor and 5 ladies Which is violative of article 6 (5) of IccpR and Article 37 (a) of convention on the rights of the child. Such thing is unheard of in the history of criminal proceedings anywhere in the world.

Please intervene and save their lives

Senders name and Address:

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

**ஒலிவாங்கியார்: தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள குழு பற்றி?**

**சுகந்தன்:** திரு. நெடுமாறன் ஐயா அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கிராமம் கிராமமாக வழக்கிற்குத் தேவையான நிதியினை சேகரித்துவருகிறது. அத்துடன் வழக்கறிஞர்களுடன் இணைந்து கிராமம் கிராமமாக சிறுசிறு கூட்டங்களையும் நடாத்தி வருகின்றார்கள். இவர்களுடன் இணைந்து தமிழின உணர்வாளர்கள் பலர் செயற்பட்டு வருகிறார்கள். நான் தமிழகத்தில் நின்றபோது இவர்களின் தமிழின உணர்வைக் கண்டு மெய்சிலிர்த்தேன்

**ஒலிவாங்கியார்: உங்களின் செயற்பாடுகளுக்கு மக்களின் பங்களிப்பு எப்படி இருக்கிறது?**

**சுகந்தன்:** நாம் எதிர்பார்த்ததை விட மக்களின் பங்களிப்பு நிறையவே இருக்கிறது. கடந்த 28.04.98 அன்று பிரான்சிலிருந்து இயங்கும் தமிழ் வானொலி இது தொடர்பாக ஒரு நிகழ்ச்சியை ஒலிபரப்பியது. அந்த நிகழ்ச்சியின் போதும், அதற்குப் பின்பும் மக்கள் பலர் நேரடியாக எம்மோடு தொடர்பு கொண்டனர். மக்களின் இந்த ஆதரவினால் நாம் மேன்மேலும் உற்சாகம் பெறுகின்றோம்.

இந்த செயற்பாடுகளுக்கு தங்கள் பங்களிப்பினைச் செய்யவிரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**Thamilar Nidhi**
**Post Boks 2941, 5030 Landaas,**
**Norway**
**தொலைபேசி: + 47+90669859**

இவ்வாறு சுகந்தன் கூறிமுடிக்க, இந்தவாரப் பொறுப்பு முடிந்த நிறைவோடு ஒலிவாங்கியார் ஒரு பெருமூச்சுவிட்டார்.

# ஜெயசிக்குறுய் ஓராண்டு



எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி நேர்ச் செல்லும் - அழுதாலும் தொழுதாலும் அதில் ஓரெழுத்தேனும் மாறாது என்பது மதவாதிகளின் வேத வாக்காக இருக்கலாம். ஆனால் - வரலாற்றைப் பொறுத்தவரை அது என்றைக்குமே மாற்றமே இல்லாத ஒரே மாதிரியான வடிவத்தில் - ஒரே வழித்தடத்தில் பயணம் செய்கின்ற ஒன்றாக இருந்ததில்லை.

நமது புலனறிவுக்கு எட்டிய மனித குல வரலாறு என்பது மாற்றங்களாலும், திருப்பங்களாலும், மாபெரும் பாய்ச்சல்களாலுமே கட்டமைக்கப்பட்டிருக்கின்றது, வழிநடத்தப்பட்டிருக்கின்றது. மாற்றமுடியாதது - அசைக்கமுடியாதது - திருத்தமுடியாதது என்று காலாகாலமாக அகங்காரத்துடன் பேசப்பட்டுவந்த இயக்க மறுப்பியல் சிந்தனைகள், போக்குகள் எல்லாம் வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் பாய்ச்சல்களால் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. தகர்த்து எறியப்பட்டிருக்கின்றன. திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வகையில் தமிழீழ தேசத்தின் வரலாற்றிலும் ஒரு மாபெரும் பாய்ச்சல் நிகழ்ந்திருக்கிறது.

1. தமிழர்களுக்கு 'தாயகம்' என்ற ஒன்று கிடையாது.
2. தமிழர்கள் சுயநிர்ணய உரிமை கோருவதற்கு தகுதியுடையவர்கள் அல்ல.
3. தமிழர்கள் கள்ளத்தோணிகள், வந்தேறு குடிகள், பயங்கரவாதிகள்.

என்றெல்லாம் பல நூற்றாண்டு காலமாக மாற்றமே இல்லாமல் பேசப்பட்டு வந்த போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த சிங்கள பௌத்த பௌராணிக மரபுக் கருத்துக்களை ஜெயசிக்குறுய் போர்க்களத்தில் விடுதலைப் புலிகள் அடைந்த - அடைந்துவரும் வெற்றிகள் இன்று தகர்த்துவிட்டன. எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டன.

ஜெயசிக்குறுய் போர்க்களம் தமிழீழ தேசத்தின் அரசியல் மூலோபாயத்திலும், இராணுவ மூலோபாயத்திலும் ஒரு மாபெரும் பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கின்றது.

அரசியல் ரீதியாக தேசம், தேசியம், தேசிய இனம் பற்றிய கோட்பாடுகளும், வரையறைகளும் இன்று கட்டுடைக்கப்பட்டுவிட்டன. பொதுவான மொழி, பொதுவான பாரம்பரிய பிரதேசம், பொதுவான கலாச்சாரம், பொதுவான பொருளாதாரக் கட்டமைப்பு என்பன ஒரு தேசிய இனத்தை வரையறை செய்வதற்கு அத்தியாவசியமான முன் நிபந்தனை என்கின்ற ஸ்டாலினிச கோட்பாடு இன்று மாற்றமடைந்துவிட்டது.

ஒரு பொதுவான அம்சத்தின் அடிப்படையில் ஒரு அரசின் திட்டமிட்ட அடக்கு முறையை எதிர்கொள்ளும் மக்கள் அந்த அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் மூலம் ஒரு தேசிய இனமாக உருவாக்கம் பெறமுடியும் என்கின்ற புதிய அரசியல் சிந்தனைகள் தோற்றம் பெற்றுவிட்டன. பொஸ்னியாவில் சேர்பிய மொழியைப் பேசுகின்ற மக்கள் ஒரு மதத்தவர்கள் என்ற அடிப்படையில் பொஸ்னிய சேர்பியர்களால் குறிப்பாக சேர்பிய மேலாதிக்க அரசால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டபோது, சர்வதேச சமூகம் அவர்களை ஒரு தேசிய இனமாகவும், அவர்களது பாரம்பரிய பிரதேசத்தை ஒரு தேசமாகவும் அங்கீகரித்தது.

பொதுவாகத் தேசங்கள் தேசியத்தை உருவாக்குவதில்லை. தேசிய விடுதலைப் போராட்டங்கள்தான் தேசத்தை உருவாக்குகின்றன என்கின்ற தேசியம் பற்றிய புதிய பார்வைகள் இன்று தோற்றம் பெற்றிருக்கின்றன.

தமிழீழத் தேசியமானது பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைக்கு எதிராக தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட எதிர்த் தாக்குதல்கள் மூலம் தனது இருத்தலை ஏற்கனவே உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டபோதிலும், இந்த ஜெய்சிக்குறுய் போர்முனை அதற்கு புதிய பரிணாமத்தைக் கொடுத்திருக்கின்றது. தந்திரோபாய ரீதியான பின் வாங்கல் என்ற நிலையிலிருந்து தன்னுடைய இறுதி வெற்றியை தீர்மானிப்பது தொடர்பான மூலோபாயத்திற்கான தொடர்ச்சியான எதிர்த்தாக்குதலை அதாவது மரபுவழி இராணுவத்தையும் அதன் மரபுவழிச் சமரையும் அதே வடிவத்தில் எதிர்கொள்வது என்ற ஒரு பாய்ச்சல் அங்கே நிகழ்ந்திருக்கின்றது. இந்தப் பாய்ச்சல் அரசியல் ரீதியாக தமிழீழ தேசத்தின் இருத்தலையும் சகல அடக்குமுறைக்கும் எதிராகத் தன்னைத் தற்காத்துக்கொள்ளும் ஆற்றலை அது கொண்டிருக்கின்றது என்கின்ற உண்மையையும் சர்வதேச சமூகம் கோட்பாட்டியல் ரீதியாகவோ, சிறீலங்கா அரசின் பௌத்த சிங்கள பேரினவாத பௌராணிய மரபுக் கருத்தியல்களின் அடிப்படையிலோ மறுதலிக்க முடியாத அளவுக்கு உறுதிப்படுத்தியிருக்கின்றது.

அடுத்து இராணுவ ரீதியாக பயங்கரவாதிகள், தோற்கடிக்கப்பட்ட சிறு குழுவினர், மக்களின் ஆதரவை இழந்தவர்கள் என்கின்ற அரசின் கூற்றுக்களுக்கும், போராளிகள், கெரில்லா யுத்த தந்திரத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு இயக்கம் என்ற சர்வதேச சமூகத்தின் பார்வைக்கும் அப்பால் இந்த ஜெய்சிக்குறுய் போர்முனை விடுதலைப் புலிகளை தமிழீழ தேசத்தின் இராணுவமாக, தமிழீழ தேசிய இராணுவமாக பரிணமிக்கச் செய்திருக்கின்றது.


ஒரு அரசின் 60% இராணுவ பலத்தையும், சகல வளங்களையும் பயன்படுத்தி அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் போன்ற இராணுவ வல்லாண்மையும் நிபுணத்துவமும் மிக்க நாடுகளின் உதவியுடனும் ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட, பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு யுத்தத்தை எதிர்கொண்டு ஒரு வருடமாகத் தாக்குப்பிடித்து, பதிலடி கொடுத்து, எதிரியை அவன் நினைத்தபடி அவனது இலக்கை அடையவிடாமல் தடுத்த செயற்பாடானது விடுதலைப் புலிகள் ஒரு தேசத்தின் இராணுவம், தேசத்தைக் காப்பாற்றப் போராடுகின்ற தேசிய இராணுவம் என்கின்ற சர்வதேச அங்கீகாரத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றது.

> யுத்தத்தை எதிர்கொண்டு ஒரு வருடமாக பதிலடி கொடுத்து தடுத்த செயற்பாடானது விடுதலைப் புலிகள் தேசத்தைக் காப்பாற்றப் போராடுகின்ற தேசிய இராணுவம் என்கின்ற சர்வதேச அங்கீகாரத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றது

அதேவேளையில், இந்த ஜெயசிக்குறுய் போர்க்களத்தில் விடுதலைப் புலிகள் அடைந்த வெற்றிகள், தமிழீழத்தில் சிறீலங்கா அரசின் தொடர்ச்சியாக இருத்தலைக் கேள்விக்குறியாக்கியிருக்கிறது.

அதாவது வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையிலான 64 கிலோ மீற்றர் நீளமுள்ள ஏ-9 நெடுஞ்சாலையை கைப்பற்றுவதற்கு தன்னுடைய இராணுவ வலுவின் அறுபது வீதத்தை பயன்படுத்தியும், ஒரு வருடமாக குறித்த அந்த இலக்கை அடைய முடியவில்லை என்கிற நிலை சிறீலங்கா அரசைப் பொறுத்தவரை இராணுவ ரீதியாக ஏற்பட்ட மிகப் பெரிய தோல்வியாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றிய வேளையிலும் வவுனியா மன்னார் நெடுஞ்சாலையை கைப்பற்றிய வேளையிலும் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள், அவர்களின் பலம் அழிக்கப்பட்டுவிட்டது, அவர்களால் இனிவரும் காலங்களில் சிறு சிறு தாக்குதல்களை மட்டும் தான் செய்ய முடியும் என்று படையினர் மத்தியில் மனோவியல் ரீதியாக சிறீலங்கா அரசும், இராணுவத் தலைமைப்பீடமும் ஏற்படுத்தியிருந்த 'வெற்றிப் பிரமை' முல்லைத்தள தாக்குதலின்போது ஆட்டங்கண்ட போதிலும் இந்த ஜெய்சிக்குறுய் போர்முனையில் புலிகளின் படையணிகள் காட்டிய ஆக்ரோசமான எதிர்ப்பு, அவர்களுடைய தாக்குதல் உத்திகள் - வியூகங்கள், தங்களுடைய இலக்கை அடைவதற்காக அவர்கள் காட்டுகின்ற அர்ப்பணிப்பு

# ஜெயசிக்குறுய்: தமிழீழ தேசியத்தின் முன்னோக்கிய பாய்ச்சல்



இவையெல்லாம் படையினரை மனோரீதியாக பலமிழக்கச் செய்துவிட்டன.

விடுமுறையில் செல்லுகின்ற படையினர் ஜெயசிக்குறுய் போர்முனைக்கு திரும்பி வராத அளவுக்கு இராணுவத்தை விட்டு தப்பி ஓடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மனோவியல் ரீதியாக பலமிழந்த படையினரை வைத்துக்கொண்டு ஜெயசிக்குறுய் போர் முனையில் மட்டுமன்றி தமிழீழத்தின் எந்தப் பிரதேசத்திலும் சிறீலங்கா அரசால் மிக நீண்டகாலத்துக்கு தாக்குப்பிடித்து நிற்கமுடியாது என்பதே யதார்த்த உண்மை.

எனவே - இந்த ஜெயசிக்குறுய் போர் முனை தமிழீழ தேசத்தை விடுதலை செய்வதற்கு இறுதி யுத்தத்துக்கான மூலோபாயத்தை நோக்கிய பாய்ச்சலாக அமைந்திருக்கிறது. அதாவது அவன் எதிர்பாராத இடத்தில் - எதிர்பார்த்திராத வேளைகளில் தாக்கும் தந்திரோபாய நடவடிக்கைகளிலிருந்து எதிரியை நேரடியாக எதிர்கொண்டு அழிக்கும், அவனுடன் நேருக்கு நேர் மோதி அவன் எதிர்பார்த்திருக்கும் தருணத்திலேயே அவனது பாசறைக்குள் புகுந்து தாக்கி அழிக்கும் பலம்மிக்க ஒரு தேசத்தின் இராணுவமாக விடுதலைப் புலிகளை மாற்றியிருக்கின்றது.

எந்த வகையில் பார்த்தாலும் ஜெய்சிக்குறுயின் ஓராண்டு அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தமிழீழ தேசியத்தின் முன்னோக்கிய பாய்ச்சலுக்கு வித்திட்டுள்ளது.

— சீ[illegible]

# ஜெயசிக்குறாய்

## ஜெயசிக்குறுய் யதார்த்தங்களும் கற்பனைகளும்

பரபரப்பான பெயர்ச் சூட்டல்கள் செய்தி ஊடகங்களுக்கு நல்லதீனி. யதார்த்தம் புரியாத இராணுவத் தளபதிகளுக்கு அது ஒரு மகிழ்ச்சியான பொழுதுபோக்கு. அதேவேளை பொதுமக்கள் மத்தியில் ஒரு உளவியல் சலசப்பை உருவாக்கவும் சிலவேளை அது உதவலாம். ஆனால் ஒரு விடுதலை இயக்கம் இத்தகைய பரபரப்பிற்கும், சலசலப்பிற்கும் செவிசாய்க்கமாட்டாது. ஒப்பரேசன் லிபரேசன், செக்மேற் என்ற எதிரியின் மிரட்டல் பெயர் சூட்டல் வரிசையில் வெற்றி உறுதியும் வந்துள்ளது.

சிங்கள அரசின் பெயர்சூட்டலையும் ரத்வத்தையின் இராணுவ ஆசைகளையும் பார்க்கும்போது 1988-ம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில் தலைவர் பிரபாகரனை இலக்கு வைத்து இந்தியப் படைகள் நடாத்திய செக்மேற் இராணுவ நடவடிக்கை நினைவுக்கு வருகின்றது. சதுரங்க விளையாட்டில் இறுதிக்கட்டமான ராசாவை அழித்தலின்போது சொல்லப்படும் செக்மேற் என்ற வெற்றிப் பிரகடனத்தையே இந்தியப் படைகளும் பெயர் சூட்டலுக்காகத் தேர்ந்தெடுத்திருந்தனர். அதபோல் இப்போது புலிகளின் கதை முடிகின்றது என நினைத்துக்கொண்டு வெற்றியுறுதி என நடவடிக்கைக்கு சிங்கள அரசு பெயர் சூட்டியது. ஆனால் செக்மேற்றின் விதி எப்படி முடிந்தது. செக்மேற் சொன்னவர்களே 'செக்மேற்றுக்கு ஆளாக்கப்பட்ட தலைகீழ் நிகழ்ச்சிதான் நடந்திருந்தது. அதேபோன்றதொரு பேராசைப் பெயர் சூட்டலுடனும் அதீத எதிர்பார்ப்புக்களுடனும் சிங்கள அரசும் புறப்பட்டுள்ளது.

பெரும்படைப்பல ஒருங்கிணைப்பு ஜெயசிக்றூயின் பலம். அபரிமிதமான ஆசைகொண்ட அதன் இராணுவ இலக்கு ஜெயசிக்குறூயின் பலவீனம். சிங்களப் படையினரைப் பொறுத்தளவில் வெற்றி உறுதி ஒரு இராணுவ மருதனோட்டம். ஓமந்தையில் இருந்து - கிளிநொச்சிவரை ஏறக்குறைய 65 கிலோ மீற்றர் தூரத்தை அவை ஒடி முடிக்க வேண்டும். அதே நேரம் ஓடிய தூரத்தை பிடித்தும் வைத்திருக்கவேண்டும்.

> *பண்டைய கிரேக்கத்தின் முதல் மருதனோட்ட வீரரான அந்த தூதன் தனது இலக்கை அடைந்து - சேதியைச் சொல்லிவிட்டு வீழ்ந்து இறந்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் ஜெயசிக்குறாய் மரதனோட்டம் தனது இலக்கைத் தொட்டுவிட்டு மரணிக்கப்போகின்றதா அல்லது இடை நடுவில் காணாமல் போகின்றதா யாமறியோம் பராபரமே.*

விரிந்து பரந்த வயல்வெளிகளூடாகச் செல்லும் தண்ணீர் வாய்க்காலைப்போல வன்னிப் பெருநிலப் பரப்பினூடாக ஜெயசிக்குறூயின் இலட்சியம் ஓடிப்பாய விரும்புகிறது. வயல்களுக்கு வாய்க்கால் உயிர்நாடி. அதனால் வாய்க்காலுக்கு வயல்தான் காப்புக்கவசம். ஆனால் வடிவ ரீதியில் வாய்க்காலைப் போல அமைய விரும்பும் ஜெயசிக்குறூய் இலட்சியத்திற்கு வயல்களைப்போல இருபுறமும் விரிந்து பரந்துள்ள பெரும் காடுகள்தான் எமனாக வந்துநிற்கப்போகின்றன.

வெற்றி உறுதி படையினர் இதுவரை சந்தித்த ஆள் ஆயுத இழப்பு என்பது படை நடவடிக்கையின் முடிவு தொடர்பாக ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கையை கேள்விக்குரிய தாக்கிவிட்டது. படைவீரர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. படைத் தளபதிகள் தங்களது திட்டங்களை மறுபரிசிலனை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிங்கள இராணுவ ஆய்வாளர்களும் அரசை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை பலமாகத் தீர்க்கத்தொடங்கியுள்ளனர்.

இன்றைய நிலையில் ஆப்பிழுத்த குரங்கின் கதையாக ரத்வத்தை இருக்கின்றார். நடவடிக்கையைத் தொடரவேண்டிய கட்டாயத்திற்குள் அவர் இருக்கின்றார். எனினும் இன்னும் சில தாண்டிக்குளங்களை ஜெயசிக்குறூய் படையினர் சந்திக்கும் போது யாழ்தேவியைப்போல ஜெயசிக்குறூயும் காணாமல் போகலாம்.

பண்டைய கிரேக்கத்தின் முதல் மருதனோட்ட வீரரான அந்த தூதன் தனது இலக்கை அடைந்து - சேதியைச் சொல்லிவிட்டு வீழ்ந்து இறந்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் ஜெயசிக்குறூய் மரதனோட்டம் தனது இலக்கைத் தொட்டுவிட்டு மரணிக்கப்போகின்றதா அல்லது இடை நடுவில் காணாமல் போகின்றதா யாமறியோம் பராபரமே.

# தமிழீழ விடுதலைப்

## ஆப்பிழுத்த குரங்காய் ஜெயசிக்குறுய் படைகள்

யாழ்ப்பாணத்தை - கிளிநொச்சியை ஆக்கிரமித்த பின்னர் வெற்றி மமதையில் சிங்களப் படைத் தலைமை திளைத்தது. புலிகளின் கதை முடிகின்றது எனக் கூட்டிக்கழித்துக் கணித்தது. களைத்த புலிகளை இறுதிவரை துருத்திச்சென்று கொல்வது என்ற வேட்டைத் தந்திரத்தைக்கொண்டு புலிகள் இயக்கத்தை அழித்துவிடலாம் என்று அது ஊடறுத்து ஜெயசிக்குறூய் யை ஆரம்பித்தது.

வவுனியா - கிளிநொச்சி நெடுஞ்சாலையை கைப்பற்றி குடாநாட்டிற்கு ஒரு பிரயாணப் பாதையை திறப்பதே ஜெயசிக்குறூயின் இராணுவ இலக்கு என ரத்வத்தை ஏற்கனவே பகிரங்கப் படத்தியிருந்தார். படையின் ரின் நகர்வு முயற்சிக்குக் குறுக்கே புலிகளின் பலம் தடைக்கல்லாக நின்றபோது புதிய வழிகளைக் கடைப்பிடித்து நடவடிக்கையைத் தொடரப்போவதாக சிங்கள இராணுவத் தளபதி ரோகான் தலுவத்தை சூழுரைத்திருந்தார்.

புலிகளின் கோட்டையாகிய குடாநாட்டைக் கைப்பற்றி வெற்றிகொண்ட தமது படையினருக்கு, ஆனையிறவில் இருந்து கிளிநொச்சிவரையான 12 கிலோ மீற்றர் நெடுஞ்சாலையைக் கைப்பற்றி நிலைகொண்ட தமது படையினருக்கு ஜெயசிக்குறூயின் இராணுவ இலக்கை எய்துவத்றகு எதுவும் தடையாக இருக்கமாட்டாது என்றே சிங்களத் தளபதிகள் இறுமாந்திருந்தனர்.



றிவிரசவிலும் சத்ஜெயவிலும் புலிகள் இயக்கம் தனது படைப் பலத்தை பாதுகாப்பதில் முன்னுரிமை கொடுத்தது. இதனால் நிலத்தை ஆக்கிரமிப்பதில் சிங்களப் படைக்கு வாய்ப்பேற்பட்டது. ஜெயசிக்குறூயின்போது சிங்களப் படையின் படைப் பலத்தைச் சிதைப்பதிலேயே புலிகள் முழுமூச்சாய் இருக்கின்றனர். இதனால் முன்னேறி நிலத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சிங்களப் படை சிரமப்படுகிறது.

**ஜெயசிக்குறூய் சமரைப் பொறுத்த வரையில் தாக்குதல் போர் முறையிலும் (Offensive) - தடுத்து நிறுத்த முயலும் தற்காப்பு போர் முறையிலும் (Defensive) புலிகள் திறமை காட்டிவருகின்றனர். ஜெயசிக்குறூய் ஆரம்பமாவதற்கு முன்னரே தலைவர் பிரபாகரன் எடுத்த முன்னேற்பாடுகளே புலி வீரர்களின் இந்த போர்ப்புலமைக்கு பிரதான காரணம்.**

போராளிகளின் சண்டைத் திறனை மேலும் வளர்த்துவிடும் செயல்முறைகளை வகுத்துச் செயற்படுத்தியும் - மரபுப் போர் ஆயுதங்களை எடுத்து அவற்றைத் திறமையாகக் கையாளப் பயிற்றுவித்தும் ஆலோசனைகள் கூறியும் தமிழர் சேனையின் போர்வலுவை உயர்த்தியிருந்தார். இந்தப் போர்வலு, ஜெயசிக்குறூயின் இராணுவ இலட்சியத்திற்கு பலத்த சவாலாக இருக்கின்றது.

சிங்களப் படைகளுடன் ஒப்பிடும்போது குறைந்த ஆள் எண்ணிக்கையையும் சொற்ப படைக்கலங்களையும் வைத்துக்கொண்டு அவற்றிலிருந்து அதிக உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளும் போர்க்கலையில் தலைவர் பிரபாகரன் ஒரு மேதையாகவே உலகில் இன்று கணிக்கப்படுகிறார்.

> ''எதிரியின் பலவீனத்தை அறி – ஓங்கி அதிலேயே அடி'' என்பது தலைவரின் செயல் மந்திரம். கொக்கின் குணத்தைப் போலவே ஓடு மீன்களை ஓடவிட்டு தனது அலகு வீச்சுக்குள் தரித்து நிற்கும் [உறு] மீன்கள் வரும்வரை கொக்கு காத்திருக்கும்.
>
> **"ஓடு மீன் ஓடி உறு மீன் வரும் வரையும் வாடியிருக்குமாம் கொக்கு"**
> **- இது தமிழ் பொன்மொழி.**
>
> **"எடிபல மீன் ஓடி ஜெயசிக்குறூய் மீன் வரும்வரை காத்திருந்ததாம் புலிப்படை"**
> **- இது புலிகளின் இராணுவப் பொன்மொழி.**

ஜெயசிக்குறூயை ஆரம்பித்துவிட்டு வெற்றி எக்காளப் பிரச்சாரம் செய்த அரசிற்கு சண்டைகளில் ஏற்பட்ட திருப்பு முனைகளும் மந்த நகர்வுகளும் பெரிய தலையிடியைக் கொடுத்தன. வீதி அமைப்பு முயற்சியில் காற்பங்கைக்கூட எட்டாத நிலையில் ஜெயசிக்குறூயின் ஆள் ஆயுத பலங்களில் கணிசமான பகுதியை அது இழந்துவிட்டது. ஜெயசிக்குறூய்க்காக சண்டை அனுபவம் வாய்ந்த சிப்பாய்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அத்தகைய முதன்மைப் படைவீரர்களின் இழப்பு என்பது சிங்களப் படையை உள்ளிருந்து அரிக்கும் புற்றுநோய்போல சிங்களத்தின் படை வல்லமையை அரித்தெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அபாயங்களுக்குள் புகுந்துவிளையாடுபவர்கள்தான் போரில் அற்புத சாதனைகளைப் படைப்பர். ஆப்கானிஸ்தானின் கல்மலைகளையும், அரேபியாவின் மணல்வனங்களையும் நடந்து கடக்க அலெக்ஸ்சாண்டர் தயங்கி திரும்பியிருந்தால் மாவீரன் என்ற கதாநாயக பாத்திரத்தை வரலாற்றுக் கடவுள் அவருக்கு வழங்கியிருக்கமாட்டார். வான் வழியாக பல்லாயிரம் மைல் பயணம் செய்து என்ரபே விமான நிலையத்தில் இறங்கி பணயம் வைக்கப்பட்டிருந்த தனது குடிமக்களை மீட்க இஸ்ரேல் தளபதிகள் வரைந்த திட்டம் ஒரு வகையில் அழகான சினிமா கற்பனை. ஆனால் அவை வாய்க்கெட்டிய பொருளாக இஸ்ரேலிய வீரர்கள் நிகழ்த்திக்காட்டினர். மாறாக இடி அமீனின் வீரர்கள் இஸ்ரேலுக்குள் புகுந்திருந்தால் அவர்களின் எலும்பு கூட உகண்டாவுக்குத் திரும்பியிருக்காது. போர் அற்புதங்களை யார் நிகழ்த்தத் துணிகின்றார்கள். யாருக்கு எதிராக அதைச் சாதிக்க முயல்கின்றார்கள் என்பது மிக மிக முக்கியம்.

# ஓராண்டு நிகழ்வுகள்

## புலிகளின் பார்வையில்

### தமிழர் வரலாறும் ஜெயசிக்குறுயும்

வன்னிநாட்டின் இறுதி மன்னனான குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆட்சி புரிந்த இடம் அநேகமாக மேற்பற்று, முள்ளியவளை, வன்னிமைகளாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. 1803–ம் ஆண்டு கப்டன் ஹென்றி வேக் கற்சிலை மடுவில் பண்டாரவன்னியனை தோற்கடித்தான். ஏறத்தாள 190 ஆண்டுகளின் பின் இப்போது கற்சிலை மடுவில் எதிரியின் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன. வீழ்ந்துபட்ட தமிழன் வரலாற்றினை எழுந்துபடச் செய்ய தலைவரினதும் போராளிகளினதும் பாதங்கள் இங்கே பதிகின்றன.



எப்படிப்பட்ட அபூர்வ வரலாற்றுப் பொருத்தமிது. எனவேதான் உறுதியாகச் சொல்கின்றோம். காலக்கணக்கு இது, தமிழரின் போரின் அரசியல் இது. பண்டாரவன்னியன் வீழ்ந்துபட்டான் என்ற நடுகல்லுக்கு அருகே சிங்களப் படை இங்கே வீழ்ந்துபட்டது என்கிற நடுகல் நாட்டப்படும். ஏனெனில் புயலென, காட்டாற்று வெள்ளமென சீறிப்பாயும் சிறப்புக் கரந்தடி படையான புலிகள் திடீரெனத் தோற்றம் மாற்றி கனரக ஆயுதங்களை கனகச்சிதமாகப் பயன்படுத்தும் மரபுவழிப் படையணியாக மாறிவிடும் இரட்டைப் பரிமாணம் கொண்டவர்களல்லவா நவீன அரசியல் உலகையே அதிசயத்திற்குள் ஆழ்த்தியிருக்கும் சின்னஞ்சிறு சிலந்தியின் வலைப் பின்னல் போல வன்னியிலே அவர்கள் பின்னுவது காப்பு வலைப் பின்னலல்லவா? அப்பிழுத்த குரங்கின் கதை மிகப் பழைய நீதிக்கதை. இப்போது மீண்டும் இம் மண்ணில் இக் கதை புதுப்பிக்கப்படுகிறது.

### மருத்துவ ரீதியாக ஜெயசிக்குறுய்

யாழ். மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை போன்ற சத்திரசிகிச்சை வசதிகளை உடைய சிகிச்சை நிலையங்களை படையினர் கைப்பற்றியதனால் புலிகளின் மரபுப் போர் வலு சிதைவடைந்தவிட்டது என்றே பகைவன் எண்ணினான். தேவையான அளவு மருந்துகளுடன் கூடிய மருத்துவ மனை வசதிகள் இல்லாதுவிடின் எந்தஒரு படையாலும் மரபுப் போரை நடாத்த முடியாது என்ற சாதாரண இராணுவ பாடத்தை அடிப்படையாகக்கொண்டே மேற் குறித்த முடிவுக்கு படைத் தளபதிகள் வந்தனர். ஒருநாள் அல்லது இரண்டு நாட்களில் முடிவுபெறும் ஒரு பெருந் தாக்குதலில் காயமடையும் தனது வீரர்களுக்கு சிகிச்சை அழிக்கும் மருத்துவ வசதிகளை புலிகள் கொண்டிருக்கின்றனர் என்று அரசு நம்பினாலும் நீண்டு இழுபடும் ஒரு பாரிய மரபுச் சமரின் மருத்துவச் சேவையை ஈடுசெய்யும் வசதி புலிகளிடம் நிச்சயம் இல்லை என்றே நம்பியது. ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்கான திட்டத்தை வரைந்தபோதும் அதற்கு வெற்றி உறுதி என்று நம்பிக்கையுடன் பெயர் சூட்டிய போதும் இந்த மருத்துவ அம்சத்தை அடிப்படையாக வைத்தே படைத் தலைமை சிந்தித்தது. ஆனால் பல மாதங்கள் கடந்தும் புலிகள் மரபுப் போரை உறுதியுடன் திறமையாக நடத்துகின்றனர். அது மட்டுமல்ல படையினர் புதிது புதிதாக களங்களைத் திறக்கும் போதெல்லாம் புலிகளும் அதை எதிர்கொண்டு களங்களை விரிவுபடுத்தி அனைத்து முனைகளிலும் உக்கிரச் சண்டைகளை நிகழ்த்துகின்றனர்.

> **யாழ். மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை போன்ற சத்திரசிகிச்சை வசதிகளை உடைய சிகிச்சை நிலையங்களை படையினர் கைப்பற்றியதனால் புலிகளின் மரபுப்போர் வலு சிதைவடைந்த விட்டது என்றே பகைவன் எண்ணினான்.**

புலிகளின் சண்டைத் திறன் பற்றி எதிரிகூட குறைத்து மதிப்பிட விரும்பமாட்டான். ஆனால் ஒரு மரபுவழிச் சமருக்கு அவசியமான பின்புலத்தேவைகளை, புலிகள் சமாளிக்கும் விதம் ஒரு மந்திரவித்தைபோல அனைத்து இராணுவ விமர்சகர்களையும் ஆச்சரியப்படுத்தி வருகின்றது.

போராட்டத்தின் போக்குத் தொடர்பாக — அதற்கு ஏற்படும் போராட்டத் தேவைகள் தொடர்பாக தலைவர் பிரபாகரன் வைத்திருக்கும் தூரப் பார்வையும், முன்னேற்பாடுகளும்தான் அந்த மந்திரவித்தையை நிகழ்த்துகின்றன.

### புளியங்குளம்: ஒரு வரலாறு

யாழ். வவுனியா பிரதான சாலையின் ஒரு சாதாரண சந்தியாக இருந்துவந்த புளியங்குளம் இன்று ஒரு போர் பட்டனமாக உலகச் செய்தி நிறுவனங்களால் உருவகிக்கப்படுகின்றது.

புலிப்படையின் போர் ஆற்றலை மீண்டும் ஒருமுறை உலகத்திற்கு வெளிப்படுத்திக்காட்டும் பொருதுகளமாக புளியங்குளம் சண்டைகள் அமைந்துவிட்டன.

நான்கு வகை பலத்தில் நம்பிக்கை வைத்து பகைவன் ஜெயசிக்குறுய் சமரை தொடங்கியிருந்தான்.

1. அவனது ஆட்பலம்
2. அதன் ஆட்டிலெறி - மோட்டார்பலம்
3. டாங்கிப் படையின் துணை
4. வான்படையின் ஆதரவு

இந்த நால்வகைப் பலமும் பகைவன் எதிர்பார்த்தது போல் அவனுக்கு உதவவில்லை. புலி வீரர்கள் அவற்றை சாதுரியமாக எதிர்கொண்டு அவற்றின் வீரியத்தை பலவீனப்படுத்தி விட்டனர். ஜெயசிக்குறுய் தற்போது சந்தித்துள்ள நெருக்கடிக்கும் இதுவே பிரதான காரணம்.

> **தொடங்கிவிட்டோம் என்ற காரணத்திற்காக பெரும் பொருட் செலவையும் – பாரிய உயிர் அழிவையும் ஏற்படுத்தும் முட்டாள் தனமான சண்டைகளில் அரசு ஈடுபடுவதாக அரசியல் இராணுவ அவதானிகள் கண்டன விமர்சனம் செய்கின்றனர்.**

மேலும் எமது வீரர்கள் மேற்கொள்ளும் தற்பாதுகாப்பு முன்னேற்பாடுகளாலும் வித்தியாசமான சண்டை முறைகளாலும் எதிரி ஏவும் ஆட்டிலெறி - மோட்டார் மழை எதிர்பார்த்தபோல் பகைவனுக்கு பயன் அழிக்கவில்லை. சண்டைமுறைகளுக்கு அப்பால் தாம் நினைத்தபடி குண்டுவீச விமானிகளுக்கு இலகுவாக இருக்கும் என்பது வேறு விடயம். ஆனால் சண்டைக் களத்தினுள் இலக்கு வைத்துக் குண்டு வீச சிங்கள விமானிகள் மிகவும் சிரமப் படுகின்றனர். எதிர்த்தாக்குதல்களால் சில வேளைகளில் வானூர்திகள் சேதமாக்கப் படுகின்றன. அண்மையில் தாக்குதல் உலங்குவானூர்தி ஒன்று குண்டடிபட்டு சேதமான நிலையில் அவசரம் அவசரமாக தரையிறக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. புளியங்குளத்தை சுலபமாகக் கைப்பற்றி விடலாம் என்ற நம்பிக்கை பகைவனுக்கு முன்பிருந்தது. ஆனால் எதிர்த் தாக்குதல்களின் உக்கிரம் காரணமாக இப்போது பகைவன் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தபடியுள்ளான்.

தொடங்கிவிட்டோம் என்ற காரணத்திற்காக பெரும் பொருட்செலவையும் - பாரிய உயிர் அழிவையும் ஏற்படுத்தும் முட்டாள் தனமான சண்டைகளில் அரசு ஈடுபடுவதாக அரசியல் இராணுவ அவதானிகள் கண்டன விமர்சனம் செய்கின்றனர். பெரும் இழப்புக்களை விலையாகக் கொடுத்து பாதையைக் கைப்பற்றி வைத்திருந்தாலும் கூட தூர இருந்தபடி புலிகள் மேற்கொள்ளப்போகும் துல்லியமான எறிகணைத் தாக்குதல்களால் விநியோகமும் தடைப்படும் உயிரிழப்புக்களும் ஏற்படும் என அவர்கள் அரசை எச்சரித்துள்ளனர்.

ஆனால் சமரைத் தொடர்வதிலேயே சந்திரிகா - ரத்வத்தை அரசு பிடிவாதமாக உள்ளது. தளபதிகளை மாற்றி மாற்றியும், அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக அவர்களுக்குப் பதவி உயர்வுகளை வழங்கியும் படைத் தளபதிகளை அரசு ஊக்குவிக்கின்றது. அது போல சாதாரண படையினருக்கும் பல்வேறு சலுகைகளை அறிவித்தும் சண்டையைத் தொடரவே அரசாங்கம் விரும்புகின்றது. ஆனால் அரசின் ஊக்குவிப்பு முயற்சிகளுக்குக் கள நிலைமைகள் ஒத்துழைக்க மறுக்கின்றன.

### கைத்தடியின் காலம்

றிவிறச; சத்ஜய; எடிபல
ஊர்புகுந்து குடிவிரட்டும் 'கைத்தடி'யின் பராக்கிரமங்கள்
ஊன்வருந்த ஊன்வருந்த உயிரேந்தித் தெறித்தோடிய
கண்ணீரின் காலங்கள்.
ஆன்மாவைச் சுட்டெரித்து ஆறாப்புண் செதுக்கிய
சாத்தானின் வேதங்கள்.

பல காலங்களை வருடிய ஒருபெரு விருட்சத்தின்
வேர்கள்
காதலாகி கசிந்துருகி மண்ணோடிழைந்த
தொப்புள் கொடியுறவைத் தொலைத்தன.

ஒரு தாயின் அரவணைப்பை
அவள் மடியின் மெல்லிய கதகதப்பை
பரிவுததும்பச் சுரந்தூட்டிய
முலையூறும் திருப்பாலின் சுவைமண்ணை
இழந்துருகும் நிலை சூழ்ந்தது.

கைத்தடியின் வெற்றுக் கலகலப்புகள்
வெற்றிகள் போல் தோற்றம் பண்ணின.
'சப்புமல் குமரையா' கைத்தடியாய் அவதரித்ததாக
மறைகழன்ற தலைகளெல்லாம் கதை பறைந்தன.

சுவர்களுக்குள் உலருசெய்து சுருங்கியிருந்த வாழ்க்கை
வீதிக்கு விரிந்து வெளிகளெல்லாம் பரந்து
காடுகளை நிறைத்தது.
அவலங்களைத் தின்று கசப்பைச் சுவைத்தது.
கசப்பருந்திக் கசப்புருந்தி மொத்துழிந்த மானுடம்
விடுதலைப்பால் அருந்துகின்ற விருப்போடெழுந்தது.

ஆறாப்புண்ணடைந்த ஆன்மாவின் குரலெழுந்து
விடுதலைப்பாடலை வெறியெழப் பாடிற்று.

திக்குத் திக்காய் எரிந்த விடுதலைத் தீயெல்லாம்
கொத்தாய் இழைந்து குழும்பெறிந்து மிளாசிற்று.

கைத்தடியின் மரிமைக் காலத்திலேயே
அது உருக்கத் தொடங்கியது.
பளபளப்பையும் மீறி அது படபடப்பது தெரிந்தது.
சூரியன் குளிர்ந்து விட்டதென்றும்
சூரியனைப் பிடிப்பது சிறுபிள்ளை விளையாட்டென்றும்
கைத்தடி உளறியது.

ஊழ்த்துக் குடிகலைத்து அலுத்துளுத்த கைத்தடிக்கு
வீதி பிடிக்கும் விருப்பூட்டி விதியுலைத்தது.

'ஜயசிக்குறுய்'
வீம்பு முற்றிய சாத்தானின் வீதி பிடிக்கும் வேதம்.
மீளவழி எதுவுமற்ற வீதிவழி நீள்கிறது...
கைத்தடியின் காலம்!

— எஸ். உமாஜிப்ரான்
நன்றி: 'விடுதலைப் புலிகள்'

# அத்தாசின் பதிவுகள்

**ஒரு வருடத்தை தாண்டியுள்ள ஜெயசிக்குறுய் படை நடவடிக்கை தோற்றுவித்துள்ள கருத்துக்களின் பதிவேடாக இராணுவ ஆய்வாளர் அத்தாஸ் எழுதிய ஆய்வுகள் அடங்கிய தொகுப்பின் சென்ற இதழ் தொடர்ச்சி இங்கே தரப்படுகிறது**

24.08.97

## அம்புலன்ஸ் ...?

...கடந்த செவ்வாய் - புதன் தினங்களில் நிரை நிரையாக அம்புலன்ஸ்கள் 'ஓசை' எழுப்பியவாறு ரத்மலானையிலிருந்து காலி வீதி வழியான போக்குவரத்தை தொந்தரவு செய்தவண்ணம் கோட்டை சிறீஜெயவர்த்தனபுர வைத்தியசாலை நோக்கிச் சென்றன. பழகிப்போன (அம்புலன்ஸ்) சைரன் ஓசைகள் ஏதோ பிழையாக நடந்துவிட்டது.) போர் சேதங்கள் வருகின்றன என்பதை நகரின் (கொழும்பு) மக்களுக்கு அறிவிக்கின்றன. மேலும் மேலும் அம்புலன்ஸ்கள் ஓடுவது அதீத ஆர்வத்தை குடிவாதிகளிடம் ஏற்படுத்துகின்றது...

...படையினர் இருவார கால ஓய்வு எடுக்கையில் இராணுவ திட்டமிடலாளர்கள் எவ்வாறு புலிகளின் எதிர்ப்பை மீறி புளியங்குளத்தைக் கைப்பற்றலாம் என திட்டமிட்டனர். கொழும்பில் கூடிய கூட்டு நடவடிக்கைகளுக்கான இணைப்பகத்திற்கு இதுவே ஆய்வுக்குரிய விடயமாகியது. தரை - கடல் - வான் படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், உளவு பிரிவு தலைமைகள், இராணுவ நடவடிக்கை பொறுப்பாளர் ஆகியோரே இவ் இணைப்பகத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

24.08.97

## ஜெயசிக்குறுய்: தினசரி 2.4 மில்லியன்

இன்று ஜெயசிக்குறுய் 131 நாள் வயதுடையது. இது சிறீலங்காவின் நீண்ட இராணுவத்தாக்குதல் நடவடிக்கை இழப்பு தொகை 630 ஐ தாண்டிவிட்டது. இது அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் விட கூடிய இழப்பாகும். அதேபோல்தான் காயப்பட்டவர்களின் தொகையும் அதிகரிக்கின்றது. நாளாந்த செலவீனங்களிலும், ஆயுத தளவாட இழப்பிலும் பெரும் இழப்பு ஏற்பட்டுவிட்டது. தினசரி நடவடிக்கைகளுக்கு 2.4 மில்லியன் ரூபாக்கள் தேவைப்படுகிறது.

10 பிரதான தாங்கிகள், 1 இராணுவ கவசவாகனம், ஒரு தன்னியக்க கிரிகோட்லோஞ்சர், எறிகணைகள், சிறுரக ஆயுதங்கள், தொலைத்தொடர்பு கருவிகள் வாகனங்கள் என்பன பல இழக்கப்பட்டுள்ளன.

......புளியங்குளம் நடவடிக்கை தொடங்கிய ஆகஸ்ட் 19 முதல், 81 மி.மீ எறிகணைகள் (இராணுவத்தினருக்கு) ஏராளமான காயங்களை ஏற்படுத்திவருகிறது. தினசரி 3000 - 3500 எறிகணைகளை புலிகள் தினசரி வீசியுள்ளனர்.

அமைப்பு மற்றும் ஆயுத தளவாட பலத்தை பெற்றுள்ள 'ஜெயசிக்குறுய்' வெற்றிபெறும் ஆனால் அது அரசு 4-ம் வருடத்தை பூர்த்திசெய்யும் முன் நிகழுமா என்பதே அரசியல் ரீதியான கேள்வியாகும்.

12.10.97

## இலக்கு: புளியங்குளம் கடும்சண்டை அதிக இழப்பு

புறமாயுள்ள சிறிய கிராமம் என முன்பு கருதப்பட்ட புளியங்குளம் இன்று சிறீலங்காவில் 'கொலைக் களம்' என்ற பெயரை சம்பாதித்துள்ளது. கடந்த இரு மாதங்களாக இம் முக்கிய சந்தியை கைப்பற்றுவதற்கான கடுமையான போரை இராணுவத்தினர் நடாத்தி வருகின்றனர். ஆனால் இது மிக செலவீனமானதாக (மனித இழப்பிலும் - ஆயுத தளவாட இழப்பிலும்) அமைந்துவிட்டது. இதேபோன்றே நாளை ஐந்து மாதங்களை கடக்கும் ஜெயசிக்குறுயும் அமைந்துவிட்டது.

..வன்னியின் மேற்குப் பகுதி மீதான புலிகளின் தந்திரோபாய ரீதியான ஈடுபாடு 16 வருடகால பிரிவினைவாதபோரில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. மேற்கு கடலோரம் தமிழ்நாட்டிலிருந்து 22 மைல் தொலைவில் அமைந்திருந்தது. புலிகள் விரும்பும் நீண்ட பாதையான வல்வெட்டித்துறை - முல்லைத்தீவு - கிழக்கு கரையோரங்களுக்கு நேரெதிரானது இது. மேலும் வில்பத்து - புத்தளம் பாதையையும் இது கொண்டுள்ளது....

23.11.97

## ஜெயசிக்குறுய் பொன்விழா இலக்கு

புலிகளுக்கு எதிரான இராணுவ இயந்திரத்தை நடாத்தும் மனிதரான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை எதிர்வரும் டிசம்பருடன் முடிவு பெறவேண்டும் என விரும்புகின்றார். இவர் இதற்கான நிகழ்ச்சி நிரலை புதிய முழுமையான நடவடிக்கைகளுக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் சிறீலால் விஜயசூரியாவிடமும் ஏனைய பொறுப்பான அதிகாரிகளிடமும் சமர்ப்பித்துள்ளார்.

கண்டியில் தனது 50-வது சுதந்திரதினத்தை கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை அரசு புரிந்து வருகிறது. இவ்விழாவுடன் இடம்பெற உள்ள கண்காட்சியில், இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் என்பன தமது சாதனைகளை வெளிப்படுத்தும் விடயங்களை முன்வைக்க உள்ளனர். 'ஜெயசிக்குறுய்' வெற்றி சந்தேகத்திற்கு இடமின்றி குறிப்பிடத்தக்க விடயமாக இக் கண்காட்சியில் விளங்கும்...

07.12.97

## கொமாண்டோக்களின் மோசமான தோல்வி

....வியாழன்காலை (4.12.97) 8 மணியளவில் எல்லா நகரங்களும் திடீரென வெடித்தன. புலிகள் மூர்க்கத்தனமான பதிலடித்தாக்குதலை நடாத்தினர். 'செய் அல்லது செத்துமடி' IV. குறைந்தது 147 படையினர் (பெரும்பாலானோர் அதிரடிப்படையினர்) கொல்லப்பட்டனர். 22 படையினர் காணாமல்போய்விட்டனர். 2 தினங்களின் பின்னர்கூட தாக்குதல் தொடர்பான முழுவிபரங்களையும் அறியாதுள்ளனர்.

...இந்த தாக்குதலுடன் 7 மாத ஜெயசிக்குறுய் போரில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை 1000 இலக்கை தாண்டிவிட்டனர். காயப்பட்டோர் 5000 ஐ தாண்டிவிட்டனர்.

...புலிகளின் தலைவர் பிரபாகரனே இராணுவ மற்றும் அரசியல் தலைமைக்கான தேர்வு என்பது தமிழர்களின் மனதில் ஆழமாக உள்ளது. இந்த எண்ணம் அழிக்கப்பட வேண்டும். இதற்கு சாத்தியமான இராணுவ அரசியல் தந்திரோபாயம் தேவை. இதுவே 7 மாத கால 'ஜெயசிக்குறுய்' எதிரான புலிகளின் இராணுவ எதிர்ப்புக்கு பின்னால் உள்ள நோக்கமாகும். இது தாண்டப்படும்வரை புலிகள் ஒரு சக்தியாகவே இருப்பார்கள்.

21.12.97

## 98-ற்கான மேடை தயாராகிவிட்டது

....தரைமார்க்கமான யாழ்குடாநாட்டுக்கு செல்லும் பிரதான விநியோகப் பாதையை கைப்பற்றும் திட்டம் அடுத்த வருடம் பெப்ரவரி 4-ம் திகதி - 50 வது சுதந்திரதினத்தன்று சாதிக்கப்படும் என அவர் (ரத்வத்தை) அறிவித்துள்ளார். 'எவ்விலை கொடுத்தாலும் நாடு மீள இணைக்கப்படும். எமது திட்டத்தை கேலி செய்தவர்கள் அதிர்ச்சியடைவர்' என அவர் தன் பார்வையாளருக்கு கூறினார்.



பிரதான விநியோக பாதை திறக்கப்பட்டபின் புலிகளுடன் பேசுவீர்களா? என கேட்டபோது 'புலிகள் ஆயுதங்களை முதலில் கீழே போட வேண்டும்' என்றார். புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பீர்களா என கேட்டபோது 'நான் அவரை சந்தித்து கைகுலுக்குவேன் ஆனால் நாங்கள் வென்று அவர் தோற்றபின்' என்றார்.

வடக்கில் இராணுவ - அரசியல் வெற்றிகளை பெறலாம் என்ற நம்பிக்கை அரசிடமும், அதேபோன்று சாத்தியமான விசால்மான பிரதேசங்களின் பாதுகாப்பை சீர்குலைக்கலாம் என பிரபாகரனும் திட்டமிடுவது தற்போதைய நிலவரங்களின் பின்னணியில் தெரியவருகிறது.

04.01.98

## ஜெயசிக்குறுய் காலக்கெடு உறுதியற்றது

....மீளக் குவிக்கப்பட்ட 'ஜெயசிக்குறுய்' அபாயத்தை இலகுவாக்க தன்முன் உள்ள தேர்வு பாதைகளை புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அகலப்படுத்தி வருவதை இன்றைய பாதுகாப்பு நிலவரம் சுட்டிக் காட்டுகின்றது. இதுவரையிலான இராணுவ திட்டமிடல் குறைபாடுகள் புலிகளுக்கு கிடைத்த போனஸ் ஆகும். ஆரம்ப மாதங்களில் பெறப்பட்ட பரபரப்பை ஜெயசிக்குறுயினால் தொடர முடியாது போனமையினால் மாரி காலத்தின் முன் இலக்கை அடைய முடியவில்லை. இச் சூழ்நிலையை இராணுவ திட்டமிடல்வாதிகள் எதிர்பார்க்கவில்லை. நவீன தளவாடங்களும் வாகனங்களும் உள்ள இராணுவம் மாரிகால சூழ்நிலையில் ஏறத்தாழ இடைநிறுத்தப்படும் சூழ்நிலைக்கு செல்வார்கள் என்பதை கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாது. இப்படியான சாத்தியத்தை கவனத்தில் எடுத்து திட்டமிடாது பாரதூரமான பிழையான கணிப்பீடாகும். சூழ்நிலைகளின் காலதாமதம் புலிகளுக்கு தேவைப்பட்ட நேரத்தை கொடுத்து தமது எதிர்ப்பை ஸ்திரப்படுத்தவும் பிற அச்சுறுத்தல் வழிகளை தேர்வு செய்யவும் வழிசமைத்தது.

11.01.98

## ஜெயசிக்குறுயின் காலக்கெடு

காலக்கெடுக்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றப்படும் என கடந்த செவ்வாய் அன்று ரத்வத்தை கூறியுள்ளார். அரசியல் தலைவராக இருந்து கொண்டு இராணுவ இயந்திரத்தை இயக்கும் ரத்வத்தைக்கு அந்த புதிய சூழ்நிலைகள் என்ன என்பதும், அச் சூழ்நிலைகள் அவர் விதித்த காலக்கெடுவை அடைவதற்கு தரும் கடினங்களையும் அறிவார். இதனை இவர் பகிரங்கமாக சொல்லவில்லை. தவிர பெப்பரவரி 4 அன்று ஏன் இன்றுமொரு காலக்கெடு தோல்வியடைந்தது அதனால் பிரிவினைவாத போர் நீடிக்கின்றது என்பதற்கு புதிய விளக்கங்கள் நாட்டிற்குச் சொல்லப்படக்கூடும். எனினும் ஜெனரல் ரத்வத்தை பொதுமக்களுக்கான பிரகடனம் மூலம் இதனை சொல்லி அது உலக செய்தியாக வரமுன்னர் மூத்த இராணுவத் தளபதிகள் பெப்.4 காலக்கெடு அடையப்படமுடியாது என்பதை அறிந்திருந்தனர்.

22.03.98

## மாங்குளம்: அருகே ஆனால் இன்னமும் தூரத்தில்

கடந்த சனியன்று பாதுகாப்பு படைகளின் நகர்வானது மழைபோன்று பொழிந்த பீரங்கி எறிகணை வீச்சால் இடைநிறுத்தப்பட்டது. கூட்டு நடவடிக்கை தலைமையகத்தின் பிரதான அதிகாரி பிரிகேடியர் எஸ். விஜயசூரிய வெடித்த பீரங்கி குண்டால் தோளில் காயப்பட்டார். முன்னாள் இராணுவ தலைமையக இயக்குநரான இவர் சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டார்.

மறுதினம் 120 மி.மீ பீரங்கி குண்டுகளில் 5, 55-வது பிரிவில் தந்திரோபாயத் தலைமையகம் மீது வீழ்ந்து வெடித்தது. 55-வது பிரிவின் பொது கட்டளை அதிகாரியாக பொறுப்பேற்றிருந்த பிரியந்தரணசிங்க கொல்லப்பட்டார். 55-வது பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சரத் பொன்செகா அவரது பிரதி தளபதி பிரிகேடியர் பொறான் ஆகியோர் காயமுற்றனர். கடந்தவருடம் மே 13-ல் ஜெயசிக்குறுய் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1300 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 65% உயிரிழப்பு, காயம் என்பன எறிகணை வீச்சுக்களால் ஏற்பட்டது என இராணுவம் ஒத்துக் கொண்டுள்ளது.

# புகலிடச் சினிமா

## முடிவல்ல

**'முடிவல்ல' குறும்படம் - தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்து சுவிஸ் நாட்டுக்குள் வந்து அரசியல் தஞ்சம் பெறுவதற்காக சுவிசுக்கு அண்மையினுள் தற்காலிக தங்குமிட நாடொன்றில் தங்கியிருக்கும் நம்மவர்களைப் பற்றியும் அவர்களுடைய எல்லை கடப்பைப் பற்றியும் அதில் பிரயாண முகவரின் பத்திரம், அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றது.**

### சினிமாவின் ஆழங்களைக் கட்டமைக்கும் விமர்சனங்கள்

ஈழமுரசுப் பத்திரிகையில் நான் விரும்பிப் படிக்கும் பக்கங்களில் ஜமுனா ராஜேந்திரனின் சினிமா விமர்சனம் முதன்மையானது என்றால் மிகையாகாது. அவ் விமர்சனத்தில் முழக்கம் 169, 170 களில் ஜீவனின் குறும்படம் பற்றிய ஜமுனாவின் பார்வையைக் காணக்கூடியதாக இருந்தது. சுவிசில் தயாரிக்கப்பட்ட குறும்படம் ஒன்று முதற் தேர்விற்குட்பட்டு ஜமுனாவின் பார்வையையும் பெற்றுக் கொண்டது என்ற வகையில் மகிழ்சியுறும் அதேவேளை, ஜீவனிடம் காணக்கூடிய சினிமா பற்றிய சனாதனக் கருத்தியல்களை வாசகர்களுக்கும் ஜமுனா அவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டிய அவசியமே இப்பந்தி ஆகும்.

ஜீவனால் பெண்கள் பற்றிய சனாதனக் கருத்தியலைத் தாண்டி வரமுடியவில்லை.

ஜீவனின் சனாதனக் கருத்தியல் முகம் தெரியாத வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படுகிறது.

இவை பெண்கள் மீதான ஜீவனின் கருத்தியல் பற்றிய ஜமுனாவின் பார்வை. அதாவது பெண்கள் பற்றிய ஆழமான

> **பெண்கள் விடயத்தில் மட்டுமல்ல சினிமா பற்றியும் அவரிடத்தில் சனாதனப் பார்வையே மேலோங்கி நிற்கிறது. அண்மையில் நிகழ்ந்த குறும்பட விமர்சன அரங்கில் ஜீவனின் சினிமா பற்றிய பார்வைக்கும் ஜீவனின் குறும்படம் பற்றிய ஜமுனாவின் விமர்சனத்திற்கும் இடையிலான விரிசலைக் காணக்கூடியதாக இருந்தது.**

மேன்மையான அல்லது நவீன கருத்து எதுவுமின்றி எமது சமூகத்துக்குரிய சாதாரண பார்வையே ஜீவனிடமும் காணப்படுகிறது என்பதை ஜமுனா அவர்கள் கனதியான சொற்பிரயோகத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள் விடயத்தில் மட்டுமல்ல சினிமா பற்றியும் அவரிடத்தில் சனாதனப் பார்வையே மேலோங்கி நிற்கிறது. அண்மையில் நிகழ்ந்த குறும்பட விமர்சன அரங்கில் ஜீவனின் சினிமா பற்றிய பார்வைக்கும் ஜீவனின் குறும்படம் பற்றிய ஜமுனாவின் விமர்சனத்திற்கும் இடையிலான விரிசலைக் காணக்கூடியதாக இருந்தது.

பிரான்ஸ் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்திய குறும்படப் போட்டிக்கு சுவிசில் உள்ள 'சுயம் படைப்பகம்' தயாரித்திருந்த 'முடிவல்ல' குறும்படத்திற்கான 'சிறப்புக் காட்சியும் விமர்சன அரங்கும்' நிகழ்வை 28.2.98-ல் சூரிச் நகரில் நிகழ்த்தியிருந்தார்கள். அன்ரன் பொன்ராசா, அழகு குணசீலன், சூ. புண்ணியமூர்த்தி ஆகியோருடன் ஜீவன் அவர்களும் விமர்சகர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். ஜீவன், இப் படத்தின் கதை அமைப்புத் தொடர்பாகவும் காட்சி அமைப்புத் தொடர்பாகவும் பல விமர்சனங்களை முன்வைத்தார். இந்த விமர்சனங்கள் கருத்தியல் ரீதியாக அமையாமல் சினிமா தொடர்பான சனாதனப் பார்வையை வெளிப்படுத்துபவையாக அமைந்திருந்தன.

சுருங்கக் கூறின் 'முடிவல்ல' படத்தின் மீதான ஜீவனின் விமர்சனம் சென்னையில் இருந்து புறப்படும் ஒரு வானூர்த்தி இலங்கைக்குச் செல்வதைப்படமாக்க வேண்டுமானால் அதன் ஆரம்பம், பிரயாண வழி, தரிப்பிடம் என்று அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற விதத்தில் சிறுபிள்ளைத்தனமாக அமைந்திருந்தது.

இவரது விமர்சனத்திற்கு 'முடிவல்ல' குறும்படத்தின் இயக்குனர் திரு.ஏ.ஜி. யோகராஜா சுருக்கமான ஒரு பதிலை மட்டும் கூறியிருந்தார். அப்பதில் ஜீவனின் விமர்சனம் முழுவதற்குமான சிறந்த பதிலாக இருந்தது. அவர் கொடுத்த பதில் இதுதான்.

நான் விசுவின் படத்தை விரும்பிப் பார்ப்பதில்லை. அவை பார்வையாளனை முட்டாளாக்குபவை. நாம் முழுமையான குறும்படங்களை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருந்தாலும் பரவாயில்லை... ஆனால் குறைந்த பட்சம் பாரதிராஜா, பாலுமகேந்திரா, மணிரத்தினம், கமலகாசன் போன்றோரது கனமான படங்களையாவது பார்த்து விளங்கிக் கொள்ள பயிற்சி பெறவேண்டும். இங்கு ஜீவனின் விமர்சனங்கள் விசுவின் படங்களுக்குரிய வினாக்களையே எழுப்புகிறது என்ற வகையில் சுருக்கமாகக் கூறப்பட்ட பதில் மிகவும் பொருத்தப்பாடாவே அமைந்திருந்தது.

இவ்விடயங்களை ஆதாரமாக வைத்து நோக்குபவர்களுக்கு சினிமா மீதான ஜீவனின் சனாதனப் பார்வையைப் புரிந்து கொள்ள அதிக நேரம் தேவையில்லை. அப்படியானால் ஜமுனா கூறுவது போன்ற சிறந்த படத்தை எப்படி ஜீவனால் தயாரிக்க முடிந்தது.

- ஒன்று அவர் படப்பிடிப்பில் தேர்ச்சி பெற்றிருக்கிறார் என்பது.
- சினிமாத்துறையினருடன் சேர்ந்துழைத்த அனுபவமும் அவருக்கு நிறைய உண்டு.
- சிலவேளை திரைப்பட இன்ஸ்ரிரியூட்டில் மாணவனாக சில காலம் இருந்திருக்கலாம்,

அதனால் சிறு சம்பவங்களை குறுகிய நேரத்தில் படமாக்கும் அனுபவத்தை ஆழமான பார்வை எதுவும் இல்லாவிட்டாலும் பெறுவதற்கு வாய்ப்பிருந்திருக்கலாம். அந்த வகையில் ஜீவன் தெரிந்த வகையான ஒரு வகை Structre க்குட்பட்டு சகல காட்சிகளையும் சிறந்த வகையில் தொகுத்தளிக்க அவரால் முடிகிறது என்பதே உண்மையாகும். அதன் ஆழமும் அர்த்தமும் உணர்வும் விமர்சகர்களாலேயே நிர்மாணிக்கப் படுகிறது. அல்லது கட்டமைக்கப்படுகிறது.

ஜீவன் அவர்கள் அக்கிரோ குரோசவாவை அறிந்திருக்கலாம். சத்திய ஜித்திரேயைத் தெரிந்திருக்கலாம். ஆனால் இவர்களைப் புரிந்து கொள்வது என்பது இலகுவான காரியமல்ல. ஜமுனா குறிப்பிடுவது போன்ற கோட்பாட்டறிவு, இலக்கிய அறிவு, அரசியல் அறிவு, ஆய்வறிவு ஆகியவற்றிற்குட்பட்ட ஆழமான மேன்மையான அறிவைப் பெறுவதும் அத்தகைய பார்வையை சினிமாவிற்குள் ஒன்று குவிப்பதும் சுலபமான காரியமும் அல்ல.

*T.B. கதிர்காமநாதன்*
*பேர்ன், சுவிஸ்*

★ ★ ★

## எச்சில் போர்வை + கவிக்குயில் ஜீவன்

என் இரு படைப்புகள் சம்பந்தமான விமர்சனங்கள், என்னையும், என்னைச் சார்ந்தோரையும் ஊக்கப்படுத்துவதாக அமைந்தாலும், சில குறைகளை விமர்சிக்கும்போது அதை நியாயப்படுத்தும் விதத்தில் பேசாமல் எனக்கேற்பட்ட யதார்த்தமான அடிப்படைப் பிரச்சினைகளை தாங்கள் முன் வைப்பது ஆரோக்கியமான எதிர்கால புலம் பெயர் தமிழ் பேசும் சினிமாவுக்கான ஒரு தூண்டுதலை அளிக்கும் எனக் கருதுகின்றேன்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களில் பலர், தமது தாய் மொழியான தமிழைப் பேசவே வெட்கப்படும், இக்கால கட்டத்தில் ஆங்கிலப் பாடல்களோடு உல்லாசமாகப் பவனி வரும் மூன்று ஐரோப்பிய சிட்டுக்களின் கையில் எதிர்பாராமல் கிடைக்கும் தமிழ் ஒலித்தட்டிலுள்ள ஒரு பாடலால் கவரப்பட்டு, அதை மனனம் செய்து ஓர் இசை நிகழ்ச்சியில் பாட முனைவதுதான் கவிக்குயிலின் கதை.

மேலும் இசைக்கு மொழியெனும் பேதம் இல்லை என்பதையும் வேற்று இன - மொழி - கலாச்சாரத்திற்குரிய மூன்று துருக்கி, பெல்ஜியம், ஜேர்மன் யுவதிகள் வழி வெளிக்கொணர முயன்றேன். கவிக்குயிலை தொகுக்கும்போது என் இதயத்துள் ஏற்பட்ட அழுத்தத்துடன் கூடிய வருத்தமும், தொலைபேசி வழி முகம் தெரியாத ஜெயா என்பவரது நம்பிக்கை தரும் வார்த்தைகளும் என்னை வெளியுலகுக்குக் காட்டிய எச்சில் போர்வை குறும்படத்தை படைக்கத் தூண்டியது.

எச்சில்போர்வையில்நாம் வாழ்ந்து, அனுபவித்துக்கொண்டிருக்கும் யதார்த்த வாழ்வின் சிறு துளியைத்தொட்டு சின்னத்திரையில் தெளித்திருக்கிறேன்.

ஈழத்திலிருந்து அரசியல் தஞ்சம் கோரி சுவிஸ் நாட்டுக்கு வரும் ஓர் அகதி தனது தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் மன உழைவுகளால் படும் அவஸ்தையை எச்சில் போர்வை சித்தரிக்க முயல்கிறது.

இதில் தனிப்பாத்திரமாக எமது குழுவின் ஒளிப்பதிவாளர் லூயிஸ் மட்டுமே ஆரம்பம் முதல் இறுதி வரை நடித்திருக்கிறார். வேறு எவருமே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது கவிக்குயிலுக்கு திரைக்கதை கிடையாது. தொகுப்பில் உருவான படம் தான் அது.

எச்சில் போர்வையின் கருவை மனதில் ஆழமாக சிந்தித்தேன். திரைக்கதையை ஒரு பக்கத்தில் குறித்துக்கொண்டேன். நான்கு மணித்தியாலங்களுக்குள் ஒளிப்பதிவு செய்து ஒரே நாளில் தொகுத்து முடித்தேன்.

**கவிக்குயில்:** வண்ணக்கனவுகள்
**எச்சில் போர்வை:** வாழ்க்கை

ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டியில் எச்சில்போர்வை பிரான்ஸ் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தால் சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்டாலும் ஈழமுரசில் வந்த யமுனா ராஜேந்திரன் அவர்களின் கட்டுரை மூலமும், IBC தமிழின் 'நெடும்புனல்' நிகழ்ச்சி வழியும் தான் அச்சிறப்பு நிகழ்ச்சி வெளிக்கொணரப்பட்டிருக்கிறது.

புலம்பெயர் தமிழர்களின் படைப்புக்கள், முன் சொன்ன சமூகவியல் சினிமா விமர்சகர்கள் மூலமாவது வெளிக்காட்டப் பட்டிருப்பது ஆறுதலான ஒரு விடயம். பாராட்டுகளுக்கு மத்தியில் என் மேல் வீசப்படும் குறும் தாக்குதல்கள் என்னவெனில்...

1. **ஆண்-பெண் சென்டிமென்ட் (உணர்வு)**
2. **பெண்ணடிமை தொடர்பான சனாதன கருத்தியல்**
3. **கலாச்சாரத்தைக் காக்க முற்படும் நோக்கு**

என்பவை என் படங்களுக்குள் தொனிக்கிறது என்பது.

கவிக்குயில் இறுக்கமான ஜீன்சும், சட்டையும் அணிந்து, ஆங்கிலப் பாடல்களைப் பாடிய யுவதி, பொட்டும் சேலையுமாக வந்து காதலுக்காக உருகும் 'ஊருசனம் தூங்கிடுச்சு...' பாடலைப் பாடுவதால் நான் பெண்கள் தொடர்பான சனாதனக் கருத்தியலைக் கொண்டிருப்பதாக எண்ண வேண்டாம்.

அப் பாடலில் விளக்கமே புரியாது அதில் வரும் இசைக்காக மட்டும் அப்பெண் ஏன் அப்பாடலை விரும்பியிருக்கக்கூடாது?

சாதாரணமாக மேடைப் பாடகர்களால் மேடையில் பாடும் பாடல்கள் அவர்களின் தாக்கத்தால் பாடும் பாடல்களா?

சில வேளைகளில் விமர்சகர்கள் தென்னிந்திய சினிமாவின் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ளாததை இங்கே காணக்கூடியதாக இருப்பதாகக்கூட எண்ணத் தோன்றுகிறது.

புலம்பெயர் நாடுகளில் பெண்கள்

> **ஆணோடு பெண் சமன் என மேடைகளிலும், பேச்சளவிலும் கூறிக்கொண்டு, பாலியல் தொடர்புகளை உருவாக்கிக் கூறி புனிதமான நட்பைக்கூட கொச்சைப் படுத்திப் பார்ப்பதும், பேசுவதும் யமுனா போன்றோரால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்காது என நினைக்கிறேன்.**

கலைப் படைப்புகளில் பங்கு கொள்ள முன் வராததும், பெண்களை கலைகளில் ஈடுபடுத்த முடியாதவாறு எமது கலாச்சார சுவர் தடுப்பதும் ஆணோடு பெண் சமன் என மேடைகளிலும், பேச்சளவிலும் கூறிக்கொண்டு, பாலியல் தொடர்புகளை உருவாக்கிக் கூறி புனிதமான நட்பைக்கூட கொச்சைப் படுத்திப் பார்ப்பதும், பேசுவதும் யமுனா போன்றோரால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்காது என நினைக்கிறேன்.

ஜாதிகள் இல்லை என பாரதி போல் மேடையிலும், பேச்சிலும் முழங்கும் எத்தனையோ பேர், புலம் பெயர் நாடுகளில் ஜாதிப் பிரச்சினைகளை தாயகத்தைவிட இங்கு மிகையாகக் கடைப்பிடிக்க முயல்வது வேதனைக்குரியது, அதைப் போலத்தான் சனாதனக் கருத்தியலையும் குறிப்பிட விரும்புகிறேன்.

வனசா பாடும் ஊருசனம் பாடல் குறும்படம் பற்றிய விளம்பரம் வரு முன்னே என்னால் ஒளிப்பதிவு செய்யப்பட்டது என ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அப்பாடலைப் பாடும்போது வனசாவின் விருப்பப்படிதான் சேலை அணிந்திருக்கிறார். பொட்டு வைத்திருக்கிறார். அது எனது திணிப்பல்ல. அக்காலத்தில் வனசாவை எனக்கு தெரியாது.

வனசா, ஜானகியின் பாடலுக்கு வாயசைக்கிறார் ஜானகியினுடையதாக இருந்தாலும், கவிக்குயிலில் கரோலின் இசைக்குழுவினரின் இசையில் வனசாதான் பாடியிருக்கிறார்.

கவிக்குயில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானபோது வனசா வாழ்க்கையில் எப்படி மேடைக்கு பாட வந்தார் என்பதை அருமையாகப் படம் பிடித்திருக்கிறீர்கள் என்று சிலர் கூறினார்கள்.

இப்படம் படத் தொகுப்பால் உருவகமான என் கற்பனை வடிவமே தவிர, அவரது வாழ்க்கை பற்றிய ஒரு பகுதியல்ல என்பதைக் கூற விரும்புகிறேன்.

ஏன் அவள் அப்பாடலை விரும்பினாள் என்பதை முறையாக விளக்கவில்லை என்பதும் வனசாவின் அழுகையை மிகைப் படுத்திக் காட்ட முயன்றிருக்கிறேன் என்பதும் மற்றுமொரு அம்பு.

பாடல்மேல் அவருக்கு பிடிப்பு ஏற்படுவதை வனசாவின் முகமும் கண்களும் ஏற்படுத்துகின்றன. அது பேச்சு வழி வராதது குறையாகத் தெரியலாம். குறிப்பாக ஒரு சிலரைக் கண்டதும் ஒரு வித ஈர்ப்பு ஏற்படுகிறது. பல வேளைகளில் ஏன் அப்படி என்று சொல்ல வார்த்தைகள் வருவதில்லை வார்த்தைகளை விட உணர்வுகளை வெளிப்படுத்தும் சக்தி கண்களுக்கு அதிகம். எனவே பாடல் ஒலிக்கும்போது வனசாவின் கண்களில் தெரியும் ஒளியே அதற்கு சான்று பகரும். கதைக்கு பொருந்தாத ஒரு சில இடங்களில் அழுகை நான் புகுத்தியிருப்பதால் சற்று இடறி இருப்பதை ஒத்துக்கொள்கிறேன்.

எச்சில் போர்வையில், லூயிஸ் லிப்ட்டில் செல்லும்போது கேட்கும் உரையாடல் மூலமும் பெண்கள் பற்றிய சனாதன

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)




**அத்தியாயம் 7**

**முன்கதைச் சுருக்கம்:-**

(அந்தக் கரையோர கிராமத்தில் வறுமையின், கொடுமையால் அன்ரனியும் தகப்பனும் கடலுக்குச் செல்ல, கடலில் நேவி வர, நேவியிடமிருந்து தப்பி அன்ரனி மட்டும் வீட்டுக்கு வருகிறான். தகப்பனுக்கு என்ன நடந்ததென்று தெரியாதநிலையில் தாயின் வற்புறுத்தலால் அன்ரனி வெளிநாட்டுக்குச் செல்கிறான்.)

அந்தோனியார் கோவில் அன்று, ஊர் மக்களின் கலகலப்பால் நிறைந்திருந்தது. தங்களின் வேண்டுதலை நிறைவேற்றிய கடவுளுக்கு நேர்த்திக் கடனாக, கஞ்சி காய்ச்சி ஊரவர்கள் சிலர் வழங்கிக் கொண்டிருந்தார்கள். மரியாவும் அந்தக் கஞ்சியை பெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தவள், மகளிடம் கஞ்சியைக் கொடுத்தபடி,

'அண்ணா கொழும்பால வரத்தான்... நாங்களும் ஒருக்கா கஞ்சி காச்சோணும்...' என்று சொல்லி வாய் மூடவும், கூரையில் நின்ற பல்லி 'ச்...ச்' என்று கூறியது. மரியா அச்சத்துடன் 'என்ன நாசத்துக்கு உந்த அறுந்துபோன பல்லி சொல்லுதோ தெரியேல்லை...' என்றவாறு சுவருடன் சாய்ந்து அமர்ந்தாள். தாயின் நிலை கண்ட மேரி மனதிற்குள் 'இந்த மனிசி வர, வர எல்லாத்துக்கும் யோசிச்சு பயப்பிடுகுது...' என்று நினைத்தாள்.

மரியாவின் பயத்தை நீடிக்க விரும்பாதது போல செய்வேத்தி அன்றே கொழும்பிலிருந்து வந்தார். வந்ததும் தனது வீட்டுக்கு போகாமல், நேரே தங்கையிடம் வந்தார். தமயனைக் கண்டதும் 'எப்பிடி அண்ணா பயணம்...? தம்பி சுகமா போய்ச் சேர்ந்தவனோ... உன்னோடை கதைச்சவனோ...?' என்று ஆவல் மிகுதியினால் கேள்விகளை அடுக்கினாள் மரியா.

'ஓம் பிள்ள...! சம்மாட்டியாருக்கு தெரிஞ்ச ஏஜன்சி எண்டபடியால்.... ஒரு பிரச்சினையுமில்லாமல் சுகமா போய்ச் சேர்ந்திட்டான்! என்னோட கொஞ்ச நேரம்... கதைச்சவன்..! உன்னைத்தான் கண்டபடி யோசிக்க விடவேண்டாம் என்றும், எல்லாரையும் வடிவாக கவனிக்கவும் சொன்னவன்... கெதியா கடிதம் போடுவான்.... நான் இப்ப வீட்டைபோட்டு, பிறகு ஆறுதலா வாறன்...' என்று கூறியபடி தங்கையின் முகப் பூரிப்பைக் கண்டு திருப்தியுற்றவராக அங்கிருந்து விடை பெற்றார்.

அடுத்த கிழமை, வெயிலின் உக்கிரம் குறையத் தொடங்கிய, ஒரு மாலை நேரத்தில் பாடசாலைக்குச் சென்ற அருளை எதிர்பார்த்தபடி மரியா தெரு வாசலில் குந்தியிருந்தாள். 'வீட்டில கேட்க ஆளில்லை எண்ட துணிச்சலில்... உவன் நல்லா சுத்த வெளிக்கிட்டிட்டான்... வரட்டும்...' என்று தனக்குள்ளே முணுமுணுத்தாள். பழைய நினைவுகள் நெஞ்சில் வந்து அலைமோத கண் கலங்கினாள். அந்தநேரம் கையில் காய்ந்த பனைமட்டைகளை பொறுக்கி கொண்டுவந்த பொன்னியாச்சி 'என்னடி புள்ள... இதில இருக்கிறாய்...' என்று நாரியை ஒரு கையால் பிடித்தபடி கேட்டாள். பொன்னியாச்சி மகள் சமைத்துப் போட, சாப்பிட்டுவிட்டு இப்படி ஊர்க் கதை கதைப்பதுதான் பொழுதுபோக்கு, பொதுவாக வம்புக் கதைகள் பொன்னியாச்சியின் நாக்கில் எப்போதும் வந்து புரளும்.

இவை எல்லாவற்றையும் நன்கு அறிந்த மரியா 'உவன் சின்னவன் பள்ளிக்கூடத்துக்குப் போனவன்..! இன்னும் வரேல்லை. அதுதான் பாத்துக்கொண்டிருக்கிறன்..' என்று கதையை துண்டிக்கும் விதமாக கூறி முடித்தாள். ஆனாலும் பொன்னியாச்சி, கையிலிருந்த பனைமட்டைகளை அருகில் வைத்து வசதியாக காலை நீட்டி, உட்கார்ந்தபடி, வாயைக்கிளற முற்பட்டாள்.

'உவன் மூத்தவன் கடிதம் போடுகிறவனோ? ஏதும் காசுகள் அனுப்பிறவனோ...? மேரியை ஏன் 'இன்னும் வைச்சிருக்கிறாய்? என்ரை பேடிச்சிக்கும் இவளின்ரை வயதுதான்... அவள் கட்டி, ரெண்டு பிள்ளையும் பெத்துப்போட்டாள். உந்தக்கால பிள்ளையளை நம்ப ஏலாது...! ஏதோ கவனமாய் இரு' என்று வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் விதமாக கதைக்கத் தொடங்கினாள் பொன்னியாச்சி.

மரியா அருளைக் காணாத ஏக்கம் ஒருபுறமும், பொன்னியாச்சியின் குதர்க்கமான கதைகளின் ஆத்திரம் இன்னொருபுறமாகவும் அவித்துக்கொண்டிருந்தாள். அப்போது அங்கே வந்த அருளின் பள்ளித் தோழன் கெனடி 'அருள் சொல்லிவிட்டவன்... தான் வர நேரம் செல்லுமாம்... தேடவேண்டாமென்று...' என மரியாவிடம் சொல்லிப்படி தனது நண்பர்களுடன் சென்றான்.

இதைக் கேட்ட மரியா பதைபதைப்புடன் மேரிக்கும் உள்ளே சென்று தகவல் சொல்லியபின், ஓட்டமும் நடையுமாக தமயனின் வீட்டுக்குப் போனாள். செய்வேத்தி குடும்பத்தினர் 'அருள் எப்பிடியும் இரவைக்கு வருவான்..' என்று ஆறுதல் கூறினர். ஆனால் அந்த ஆறுதல் வார்த்தைகள் பொய்யாகின. அருள் அன்றும் வரவில்லை. அடுத்த நாளும் வரவில்லை. மரியா ஓரளவு புரிந்துகொண்டாள். அருள் எங்கே போயிருப்பான் என்று...!

விடிகாலையிலே செய்வேத்தியும், மரியாவும் அருளைத் தேடிப் புறப்பட்டார்கள். முதலில் அவர்கள் தேடிச் சென்ற முகாமில் 'இப்படி ஓர் பெயரில் எவருமே வரலில்லை என்று கூறினார்கள். அதைக் கேட்ட மரியா 'அருளுக்கு வேறு ஏதாவது விபத்து நடந்திருக்குமோ என்ற நினைப்பில் வழிநெடுக அழுது கொண்டே வந்தாள். செய்வேத்திதான் ஓரளவு அதட்டி, ஆறுதல் கூறி வேறு முகாம்களுக்குக் கூட்டிச் சென்றாள்.

கடைசியாக அவர்கள் சென்றமுகாமில்தான், அருளைப் பற்றிய தகவல் கிடைத்தது. ஆனால் அருளைப் பார்க்க முடியவில்லை. அங்கு நின்ற முகாம் பொறுப்பாளரான இளம் போராளி மரியாவை நோக்கி 'அம்மா அருள் முதலில் இங்கதான் வந்தவர்...! இப்ப அவரை வேற இடத்தில் மாத்தியிருக்கிறம்...! கொஞ்ச நாளைக்கு பிறகு உங்களைப் பார்க்க வருவார்...! இப்ப நீங்கள் வீட்ட போங்கோ யோசிக்காதையுங்கோ...' என்று பணிவாகவும், கனிவாகவும் ஒலித்த அவ்வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு மரியா வீடு திரும்பினாள்.

வீட்டில், பேயறைந்தது போன்ற சோகம் எங்குமே உறைந்து காணப்பட்டது. இடிமேல் இடியாக சோகங்கள் தாக்கியதால் மரியா வெறுமையாக, அமைதியாக தாய்மை உணர்வுடன் மௌனமாக அழுதுதீர்த்தாள். ஆனால் மேரியோ தான் தனியேவிடப்பட்டது போன்ற தனிமையில் புழுவாகத் துடித்தாள். எதிலும் பிடிப்பின்றி காலத்தை கடத்தினாள். நீத்தாதான் இருவருக்கும் ஆறுதலாக அங்கேயே இருந்தாள்.

நீண்ட நாட்களின் பின்பு அன்று காலையில் அவர்கள் வீட்டு வாசலில், தபால்காரனின் மணியோசை கேட்டது. நீத்தாதான் சென்று, அந்த வெளிநாட்டுக் கடிதத்தை வாங்கி மாமியாரிடம் கொடுத்தாள். கடிதத்தை பிரித்த மரியா, உள்ளேயிருந்த போட்டோக்களை கண்டு 'நல்ல நிறமா... உடம்பா இருக்கிறான் என்ரை பிள்ளை...' என்று சந்தோஷத்துடன் கூறினாள். அங்கு நின்ற மேரி அன்ரனியின் போட்டோக்களை கண்டு சந்தோஷப்பட்டாலும், அருளின் நினைவில் கண்கலங்கியபடி கடிதத்தை வாசித்தாள்.



அன்பின் அம்மா, அக்கா, தம்பி என்று தொடங்கிய கடிதம், பின்பு முழுக்க அருளைப்பற்றித்தான் இருந்தது. நான்கு மாதம் சேர்த்த காசு அனுப்பியிருக்கின்றேன்... நீங்கள் யோசிக்கவேண்டாம். கடன் முடிய அக்காவுக்கு கலியாணம் பேசவும். இங்கு எல்லா வசதிகள் இருந்தும், எனக்கு வெளிநாட்டு வாழ்க்கை பிடிக்கவில்லை. எப்படியும் ரெண்டு மூன்று வருசத்தில், அருளை கூட்டிவிட்டுவிட்டிட்டு, நான் அங்கு வருவேன். மாமாக்களையும், சம்மாட்டியாரையும் சுகம் கேட்டதாகச் சொல்லவும்' என்று எழுதி அன்ரனி அக்கடிதத்தை முடித்திருந்தான்.

எத்தனை நாளைக்கு அருள் இயக்கத்துக்குப் போன தகவலை அன்ரனிக்கு மறைப்பது..? பல கடிதங்களில் அன்ரனி, அருளை கடிதம் எழுதும்படி நச்சரித்துக்கொண்டிருந்ததால், மேரி கடைசியில் உண்மையை எழுதினாள். அது அன்ரனிக்கு எவ்வளவு அதிர்ச்சியை கொடுத்திருக்கும் என்ற நினைவில் தனக்குள்ளே அழுது புழுங்கினாள் மேரி.

கால ஓட்டத்தில், அந்தோனியார் கோவில் பெருநாளும் வந்தது. அன்று ஊர் முழுக்க கலகலப்பாக இருக்க, மரியாவும் மேரியும் ஒவ்வொரு மூலையில் அழுதபடி இருந்தனர். நீத்தா ஒருவாறு மேரியைச் சமாதானப்படுத்தி கோவிலுக்கு அழைத்துச் சென்றாள். மரியா, வரமறுத்து வீட்டிலேயே இருந்தாள். பெருநாள் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. மேரி பூசை எல்லாம் முடிய, நிகழ்ச்சிகளின் பங்குபற்றாமல் மனதில் பாரத்துடன் வீட்டுக்கு வந்தாள்.

வீட்டில அவள் கண்ட காட்சி, அவளை இன்ப அதிர்ச்சிகொள்ள வைத்தது. அருள் இயக்க சீருடையில் ஏதோ ஒரு ஆளுமைத் திறன் முகத்தில் பிரகாசிக்க அங்கே நின்றுகொண்டிருந்தான். ஓடிச் சென்ற மேரி அருளின் தோளைப் பிடித்து அழத் தொடங்கினாள்.

'என்னைத் தனிய விட்டிட்டு போக எப்பிடியடா உனக்கு மனம் வந்தது?' என்று விம்மினாள்.

தமக்கையின் கையை அழுத்திய அருள் 'என்னக்கா...நீ... எத்தினை வீட்டில முழுப் பிள்ளையளையும் இந்த மண்ணுக்கு தந்திட்டு சந்தோஷமா இருக்குதுகள்...! உனக்கு அண்ணன் இருக்கிறார்.. பிறகென்ன...!' என்று அமைதியாக சிரித்து சமாளித்தபடி வா அக்கா.... என்ரை பூமரங்கள் எப்பிடியிருக்கு கண்டு பாப்பம் என்று வாசலை நோக்கி மேரியை கூட்டிச் சென்றான். அருளின் குறும்புத்தனமும், குழந்தைத் தனமும் மறைந்து போயிருந்ததை மேரி புரிந்துகொண்டாள்.

அடுப்படியில் மரியா சமையலை மும்முரமாக கவனித்துக்கொண்டிருந்தாள். அருளுக்கும், அவனுடன் வந்த மற்றைய ஐந்து போராளிகளுக்கும் சேர்த்து, நல்ல மீன்கறியாக சமைத்தாள். 'உந்தக் கெடுவாங்கள்... தமிழருக்கு தாறதை.. தந்தால்... ஏன் இந்தப் பிள்ளையள் ...இப்பிடி கஷ்ரப்படுகுதுகள்! ஏதோ இந்தப் பிரச்சினை முடிஞ்சு... என்ரை பிள்ளை வந்து சேர்ந்திட வேணும்...! எத்தினை தாய்மார்... என்னைப்போல ஏங்கித் தவிக்குதுகள்..!' என்று நினைத்தாள் மரியா, மகனை அந்தக் கோலத்தில் கண்ட அந்தத் தாயுள்ளம் பெருமையில் பூரித்தது. இந்தப் பெருமையும், சந்தோஷமும் அந்த வீட்டில் சில மாதங்களுக்கு மட்டுந்தான் நீடித்தது.

(தொடரும்)

# புகலிடச் சினிமா

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

னக் கருத்தியல் எழுவதாகக் கூறுவதை முற்றாக மறுக்கின்றேன்.

படத்தில் நடிக்கும் லூயிஸ் பிரச்சினைகளுக்கு நடுவே சோகத்தின் விளிம்பில் நிற்கும் போது அடுத்தவர்கள், எவரைப் பற்றியும் கணக்கில் எடுக்காது சினிமாவில் வரும் கவர்ச்சிக் கன்னிகளைப் பற்றி அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பக்கம், அவர்கள் லூயிஸின் நிலை அறியாது பொழுது போக்கிற்காக அரட்டை அடித்துக் கொள்பவர்களாகக் கூட இருக்கலாம். அல்லது அடுத்தவர் எக்கேடு கெட்டுப் போனால் நமக்கென்ன எனும் மனோநிலை கொண்டவர்களாகவும் இருக்கலாம்.

நான் சுவிசுக்கு வந்த புதிதில், சில நண்பர்களுடன் ஒரே வீட்டில் வசித்தேன், என்னோடு இருந்தவர்களின் ஒரு நண்பனது தந்தை காலமானார் என்ற செய்தி கேட்டு, அந்த நண்பர் அறைக்குள் தனியாக விம்மி விம்மி அழுதுகொண்டு இருந்தார். ஆனால் பல நண்பர்கள் அவரைப் பற்றி எள்ளளவும் எண்ணாமல் பியர் குடித்தபடி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் செக்ஸ் காட்சிகளைப் பார்த்து அபிநயம் செய்து நாகரிகமற்ற விதத்தில் கத்திக் கொண்டிருந்தார்கள். அந்நிகழ்வின் மூலம் நான் அடைந்த தாக்கத்தை வெகுவாகக் குறைத்தே இப்படி வெளிக்கொணர்ந்திருக்கிறேன். அடுத்தவர் துன்பத்தில் இன்பம் காணும் ஒரு சிலரையும் இக் கூட்டத்துள் சேர்க்கலாம்.

அப்படிப்பட்ட ஒரு சிலரால், அனைவரும் அந்த ரகத்தைச் சார்ந்தவர்கள் எனக் கருதக் கூடாது என்பதால்தான், அப்படியான சமயத்தில் மற்றுமொருவர், 'இதற்கெல்லாம் கவலைப்படாதே அடுத்து நடப்பதை பார்' என்பது போன்ற நம்பிக்கைத் துளிர் தரும் வார்த்தைகளைக் கூறுகிறார்.

ஆயிரம் கால்கள் எட்டி உதைத்தாலும் ஒரு ஆறுதல் வார்த்தை, நம்பிக்கையை ஒருவனின் உள்ளத்தில் ஏற்படுத்தி விடுகின்றது. இப்பகுதியில் என் வாழ்வில் நான் கண்டு அனுபவித்த அனுபவங்கள். அதைத்தான் சின்னத் திரையில் காட்ட முனைந்திருக்கிறேன். என் கலைப் படைப்புகள் மூலம் உபதேசம் செய்வதை விரும்புவதில்லை. ஆனால் நான் காணும் யதார்த்த வாழ்வை மேடை, தெருக்கூத்து, புகைப்படங்கள், குறும் திரைப் படங்கள், சின்னத் திரை ஆகியவற்றின் வாயிலாகக் கொண்டு வந்திருக்கிறேன்.

எந்த ஒரு கலை வடிவத்தையும் படைப்பவன் முடிவை அவனே கூறிவிடுவதை நான் வரவேற்பதில்லை. சிந்திக்காமல் ஒருவன் சொல்வதை கேட்கும் சமூகமாக எவரும் உருவாகக்கூடாது. சிந்தித்து செயலாற்றும் சமூகமாக மனித சமூகம் பரிணமிக்க வேண்டும்.

அநேகமாக படைப்புக்களின் முடிவு சுபம் அல்லது மரணம் ஆக இருக்கிறது. வாழ்க்கை ஒரு தொடர்..... ஒருவனது சாவு அவனது சரித்திரத்தை முடித்து விடுவதில்லை. அவனது எண்ணங்கள் வேறு எங்கோ பரிணமித்துத் தொடர்கிறது. ஒருவன் ஆரம்பித்ததை மற்றொருவன் முடித்து வைக்கிறான்.

எண்ணங்களால் கவிதை பாடி வான் நிலவில் வீடு கட்டியவன் கவிஞன். ஆனால் வான் நிலவில் தடம் பதித்தவன் கவிஞனல்ல, விஞ்ஞானி. ஒருவனது நல்ல எண்ணங்கள், மற்றோர் இடத்தில் செயல் வடிவம் பெறுவதாகக் கூடக் கூறலாம். இது யதார்த்தம்.

அநேகமான சினிமாக்காரர்கள் யதார்த்தமில்லாத பொழுது போக்கு அம்சங்களைக் கொண்ட படங்கள் மூலம் பணம் பண்ண முற்படுகிறார்கள். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் மட்டுமே காத்திரமான யதார்த்தமான படைப்புகளை உருவாக்குகிறார்கள். வியாபார நோக்கமற்ற கலைஞர்கள் புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்தாலும் கூட அவர்களைக் கண்டு கொள்ளக் கூடிய வழிகள் குறைவாக இருப்பதாலும், 'தான் மட்டும்' எனும் ஈகோ காரணமாகவும், பலரால் நல்ல படைப்புக்களைத் தர முடியவில்லை.

பலதரப்பட்ட கலைஞர்கள் மனம் திறந்து பேசி ஒன்று சேர்வதன் மூலமும் ஏனைய கலைஞர்களை மதிப்பதன் மூலமும், மெச்சக்கூடிய படைப்புக்களை புலம் பெயர் நாடுகளில் உருவாக்க முடியும் என நம்புகிறேன். அதுதவிர நம்மிடமே நல்ல தயாரிப்பாளர்கள் உருவாக வேண்டும்.

**இலட்சங்களுக்காக வாழும் மக்கள் மத்தியில்,**
**இலட்சியங்களுக்காக வாழும் ஒரு சிலராவது இல்லாமலில்லை.**

என்றென்றும் நேசமுடன்
ஜீவன்

# ALPHA TELECOM





| | | |
|---|---|---|
| Sri Lanka | 52P, | 48P |
| India | 44P, | 40P |
| Malaysia | 33P, | 29P |
| Canada | 12P, | 8P |
| Australia | 14P, | 10P |

UK 5P

புத்தாண்டில் உங்கள்
உறவினர்கள், நண்பர்களுடன்
உரையாட குறைந்த கட்டண
தொலைதூர தொலைபேசி
சேவையை வழங்குவதில் மகிழ்ச்சி
அடைகிறார்கள்.



| | | |
|---|---|---|
| France | 14p, | 10p |
| Germany | 14p, | 10p |
| Switzerland | 16p, | 12p |
| Norway | 16p, | 12p |
| Singapore | 23p, | 19p |
| USA | 9p, | 5p |

## ALPHA TELECOM

இணைப்புகளுக்கும், தொடர்புகளுக்கும்:
வேந்தன்: 0181 682 1141/ 0956 262684

# வெளிவந்துவிட்டன

## ரமி யின்











RAMIY RECORDS







இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன்கள் சுந்தரலிங்கம் கடம்பன், சிவநாதன் ஜெயந்தன், சசிதர் சோமசுந்தரம் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

# உங்கள் கைவண்ணம்



செல்வி
துசாந்தினி பாலராஜா

வயது: 9
இடம்:
77400 Lagny - S- Marne,
France.




# கவிதை முற்றம்

## நீயும் பெற வேண்டாமா?



அக்கா அக்கா குயிலக்கா
எங்கே போறாய் குயிலக்கா?
காக்கா அக்கா கூட்டிலே
முட்டையிட போறியா?

காக்கா அக்கா அடைகாத்து
குஞ்சு பொரித்த பின்னாலே
கொஞ்சிக் கொஞ்சிக் குரலெழுப்பி
பாட்டுப் பாட போறியா?

பச்சை இலையின் பின்னாலே
பதுங்கி வாழும் குயிலக்கா
பயந்து பயந்து வாழும்- உன்
வாழ்க்கை என்ன குயிலக்கா?

காக்கா அக்கா வாழ்வதனை
காணும் போதில் குயிலக்கா
காக்கா அக்கா உரிமையெல்லாம்
நீயும் பெற்றிட வேண்டாமா?

புதுவை. மு.வேந்தன்

# கட்டுரை முற்றம்

## நல்லொழுக்கம்

சிறுவர்களுக்கு நல்லொழுக்கம் அவசியம். ஆகையால் சிறுவர்களாகிய நாம் இளமைப் பருவத்திலிருந்தே நல்லொழுக்கங்களில் பழகி வருதல் வேண்டும்.

ஒழுக்கம் என்பது என்ன? ஒழுங்குகளை கடைப்பிடிப்பதே ஒழுக்கமாகும்.

குறிப்பிட்ட வரைமுறைக்குள் நின்று பழகுதலும் ஒழுங்கு ஆகும். மனச்சாட்சிக்கும், பகுத்தறிவுக்கும் கட்டுப்பட்டு வாழும் ஒழுங்கும், ஒருவர் தன்னை ஒரு வரம்புக்குள் உட்படுத்தி வாழும் முறையும் ஒழுங்குப் பயிற்சியாகும்.

காலையில் எழுந்ததும் காலைக் கடன் முடித்து, நீராடி, கடவுள் வழிபாடு செய்து, உணவருந்துதல் வேண்டும். இவை வீட்டின் ஒழுங்குகள்.

சாலையில் வலப்பக்கமாக நடந்து செல்வது, குறிப்பிட்ட இடத்தில் சாலையைக் கடப்பது போன்றவை சாலையில் அனுசரிக்கப்படும் ஒழுங்குகள்.

பாடசாலை குறிப்பிட்ட நேரத்திற்குத் தொடங்குகின்றது. மாணவர்கள் காலந்தாழ்த்தி வரக்கூடாது. பாடசாலைக்குக் கிரமமாகச் செல்ல வேண்டும். ஆசிரியர் வந்தவுடன் பணிவுடன் வணக்கம் சொல்ல வேண்டும். இவை பாடசாலையின் ஒழுங்குகள்.

இவ்வாறு சமூகத்தின் பொது நலனுக்கும், மனித வாழ்வுக்கும் வகுக்கப்பட்ட விதிமுறைச் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதும் ஒழுக்கமாகும்.

ஒழுக்கம் என்னும் பண்பு, இளமையிலிருந்தே எல்லோரும் போற்ற வேண்டிய உயர்ந்த குணம். இடம், பொருள், காலம், பண்பாடு, பழக்கவழக்கம், தொழில், சூழ்நிலை இவற்றின் காரணமாக ஒழுங்கு விதிகள் மாறலாம். ஆனால் ஒவ்வொருவரும் ஏதேனும் ஓர் ஒழுங்குக்குள் கட்டுப்பட்டு வாழ்வதே ஒழுக்க வாழ்க்கை ஆகும்.

பாடசாலையின் ஒழுங்குகள் வேறு, அலுவலக ஒழுங்குகள் வேறு, இல்லறத்தின் ஒழுங்குகள் வேறு, துறவறத்தின் ஒழுங்குகள் வேறு, மருத்துவமனையின் ஒழுங்குகள் வேறு, சிறைச்சாலையின் ஒழுங்குகள் வேறு. அவை அந்தந்த இடத்தின் நன்மை கருதி, அவ்வொழுக்கங்களைக் கடைப்பிடிப்பது எல்லோரதும் கடமையாகும். இந்த ஒழுங்குமுறை சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோருக்கும் பொதுவானது.

ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பவன் ஒழுக்கமுள்ளவன். ஒழுக்கமுடையவன் அவ் ஒழுங்குகளை உயிருக்கு மேலாக மதித்து நடப்பவன் ஒழுக்க சீலன்; நல்லொழுக்க பண்பினன்.

பூமி தன்னைச் சுற்றுவதோடு சூரியனையும் சுற்றுகின்றது. இது பூமியின் ஒழுங்கு. இதைப் பூமி மீறினால் இரவு பகல் வராது, பருவ காலம் ஏற்படாது. உயிரின வாழ்வில் பல சிக்கல் வந்து சேரும். இது இயற்கையின் விதி.


மரங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பூத்து, காய்த்து கனி தருகிறது. பின் இலையுதிர்கின்றது. மீண்டும் வளர்கின்றது. இதுவும் இயற்கையே. ஆந்தை பகலில் வெளிவராது. அந்த ஒழுங்கை மீறி வெளிவந்தாலே எதிரிகளால் அது கொல்லப்படும். பறவைகளும் மாலையில் கூடு திரும்புகின்றன. இவையும் இயற்கையின் ஒழுங்குவிதிகளை அனுசரிக்கின்றன.

இவ்வாறு உயிரினங்கள் எல்லாம் தமக்கென்றுள்ள ஒழுங்குகளை இயல்பிலேயே பின்பற்றுகின்றன. ஆகவே அவை வளர்கின்றன. மனிதனும் அவ்வாறே தான் வாழ்வதற்கும், வளர்வதற்கும் தன் தகுதிக்கான ஒழுங்குகளைக் கடைப்பிடித்தால்தான் அவன் வாழ முடியும்; வளர முடியும்.

எனவே சிறுவர்களாகிய நாமும் இளமையிலிருந்தே இடத்துக்கேற்ற வகையாக வகுக்கப்பட்டுள்ள ஒழுங்கைக் கடைப்பிடித்து, நல்லொழுக்கமுடையவர்களாக, நல்லொழுக்கசீலர்களாகப் பழகி வருதல் வேண்டும்.

# முற்றத்தின் முத்துக்கள்

*சிறுவர் முற்றத்தில் உலாவர ஆசைப்படுகின்றேன்.*



செல்வன் சௌந்தர்ராஜன் ஆதர்சன்
இடம்: Chatillon, France.

# அறிந்து கொள்ளுங்கள்

## அழிந்துபோகும் பறவை



பிள்ளைகளே!

நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தப் பூமி நாள்தோறும் அழுக்காகிக் கொண்டே போகிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் ஏராளமான பொருட்கள் உற்பத்தியும், தொழிற்சாலைகள், வாகனங்கள் பெருக்கமும் காடுகள் அழிக்கப்படுவதும் தொடர்ந்தவண்ணமே உள்ளது. இதனால் ஏராளமான கழிவுகள் நாள் தோறும் வெளியேற்றப்படுகின்றது. அத்துடன் இரசாயனக் கழிவுகளில் இயற்கைச் செல்வங்களான பல உயிரினங்களும் அழிந்துபோய்க் கொண்டிருக்கின்றன.

ஜேர்மனியப் பறவையான Feldlevch (விறு குருவி) என்னும் உயிரினம் இந்த ஆண்டு முடிவிற்குள் முற்றாகவே அழிந்து விடுமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இரசாயன மருந்துகளைத் தெளித்துக் கொல்லப்படும் சிறு பூச்சி புழுக்களை தொடர்ந்து உண்டுவந்ததனாலேயே இந்த இனமே அழியும் அபாயத்திற்கு உள்ளாகி விட்டது.

பார்த்தீர்களா பிள்ளைகளே! சூழல் அசுத்தம் ஒரு குருவிச் சந்ததியை முற்றாகவே எங்களிடம் இருந்து பிரித்துவிட்டது. சூழல் மாசுபடுவதைத் தடுக்க எங்களால் முடிந்ததை நாமும் செய்ய வேண்டும்.

*(தகவல்- பூவரசு)*



# மலையேறும் மங்கை சோனத்தால்

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் நடைமுறை வாழ்க்கையில் ஏதோ ஒன்றில் அலாதிப்பிரியம் இருக்கும். ஆனால், பிரியமாக உள்ள அந்த குறிப்பிட்ட ஒன்றினையே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொள்பவர்கள் சிறு தொகையினரே. அச்சிறு தொகையினில் ஒருவர் தான் 'சோனத்தால்' என்ற பெண்மணியும். அப்படி இவர் கொண்ட இலட்சியம் என்னவென்றால், பல நாடுகளின் மலையை ஏறி முடிப்பது தானாம். இந்த விசித்திர ஆசைக்கு எப்படித்தான் ஆளானார் என்பதை சோனத்தாலே விபரிக்கிறார். நான் சிறு வயதில் மலையில் ஏறுவதை நினைத்தே பார்த்ததில்லை.

என் 15-வது வயதில் முதல் முறையாக என் நண்பனுடன் விளையாட்டுக்காக மலையில் ஏறினேன். அன்றைய அனுபவம் எப்படியென்று என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் முழுமையாகக் காதல் வசப்பட்ட நிலையில்தான் ஏறி முடித்தேன். ஆனால், திரும்பி வந்ததும் மீண்டும் மலைகளில் ஏற வேண்டும் என்ற ஆசை எழுந்தது பின் அதுவே என் நிரந்த இலட்சியமாகவும் மாறி விட்டது.

இந்த மலையேறும் ஆசையால் படிப்பிலும் கவனம் செலுத்தவில்லை. இதனால் நிரந்தரத் தொழிலும் இல்லை. ஆனால், மலையேறும் விருப்பம் மறையவும் இல்லை. முறையாக மலை ஏறப் பழகுவதற்கு பெரிய தொகைப் பணம் வேண்டும். என்னிடமோ பணமில்லை. என் திண்டாட்டத்தைக் கண்ட பாட்டி தன் பழமை வாய்ந்த சொத்துக்களில் ஒன்றான வீட்டை விற்றே எனக்குப் பணம் தந்தார். அப்பணம் என் பயிற்சிகளிற்கே தேவைப்பட்டதால் போதிய நல்ல சாப்பாடு கூட இல்லாமல் கஸ்ரப்பட்டேன்.

ஆனால், மலையேறும் என் இலட்சியத்தில் உறுதியாக இருந்தேன். இதன் காரணமாக பல நாடுகளிற்கும் சென்று அங்குள்ள மலைகளில் ஏறினேன். குறிப்பாக 25 வயதில் Peruviennes என்றும் மலையில் 6000m தூரமும், அண்மையில் இமய மலையில் 8000m தூரமும் ஒட்சிசன் இல்லாமலும் ஏறி மாபெரும் சாதனை படைத்தன் மூலம் என் இலட்சியத்தில் வெற்றி கண்டுள்ளேன் என பெருமையுடன் குறிப்பிடுகிறார், சோனத்தால்.

இன்று 33 வயதுடைய சோனத்தால், அதிகம் போனது நேபாள நாட்டுக்குத்தானாம். அங்குள்ள நண்பிகள் இவரை வண்ணத்துப்பூச்சி என்றே அழைக்கின்றனர். காரணம் எப்பொழுதுமே இவர் மலைகளையே சுற்றுவதால்தானாம். இன்று சர்வதேச அளவில் தான் புகழடைந்ததிற்கும் பல எழுத்தாளர்களின் கதைகளின் நாயகியாக இருப்பதற்கும் காரணம் திபெத் நாட்டு மக்கள் தான் என்பதை நன்றியுடன் குறிப்பிடுகிறார். ஏனெனில் இவர் அதிகம் பயிற்சி பெற்றது அங்குதான்.




மலையேறுவது மட்டுமன்றி எழுதுவது, புகைப்படம் எடுப்பதிலும் ஆர்வமுள்ள இவர் அண்மையில் தான் மலையேறிய ஆனந்த அனுபவங்களைக் கொண்டு 'சொர்க்கத்தில் வாழ்க்கை' என்ற நூலை வெளியிட்டு இருக்கிறார் என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

# கர்நாடகாவின் முதல் பெண் குருக்கள்

இன்று தமக்கு வரும் சோதனைகளையே சவாலாக ஏற்று சாதனைகள் புரியும் பெண்கள் தொகையினர் அதிகரித்து வருகின்றனர். இந்த வகையில் கர்நாடக மாநில கோலார் தங்க வயலைச் சேர்ந்த 31 வயதான இராஜ இராஜேஸ்வரியும் அடங்குகிறார்.

ஏனெனில் இன்றைய கர்நாடக மாநிலத்தின் பெருமைக்குரிய முதல் பெண் அர்ச்சகர் இவர்தான். ஆனாலும் இந்த முதல்பெண் அர்ச்சகர் பதவியை அடைய இராஜ இராஜேஸ்வரி தான் வாழும் சமூகத்திடையே பட்ட துன்பம் கொஞ்சமல்ல.



இரு குழந்தைகளுடன் அர்ச்சகர் இராஜ இராஜேஸ்வரி

வசதி மிக்க குடும்பத்தில் ஒரே ஒரு செல்லப் பெண்ணாக இருந்தும் தம் குடும்ப வழக்கப்படி 14 வயதிலேயே தாய்மாமனைக் கைப்பிடிக்க வேண்டிய கட்டாயம். கைப்பிடித்த மணாளனும் தீராத சந்தேகத்தை இவர் மேல் கொண்டு 3 குழந்தைகளிற்கு இராஜ இராஜேஸ்வரியைத் தாயாக்கிவிட்டு இவரை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.

இதைக்கண்ட இராஜ இராஜேஸ்வரி கலங்கிவிடவில்லை. தன் வசதி மிக்க பெற்றோரிடத்தும் அடைக்கலம் தேடவில்லை. மாறாக விடாத பிடிவாதம் கொண்டு முறையாக ஜாதிக முறைப்படி சமஸ்கிருத மந்திரங்களை படித்தார். பின் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளையும், வேலூர் ரத்தினகிரி பாலமுருகனடிமை அடிகளாரிடமும் ஆசி பெற்று மாரியம்மன் ஆலயம் ஒன்றில் அர்ச்சகராக பொறுப்பேற்று தொடர்ந்து 48 நாட்கள் பூஜையும் நடத்தினார். இன்று திறமைமிக்க பெண் அர்ச்சகரான இவரை எல்லோரும் இராஜேஸ்வரிக் குருக்கள் என்றே அழைக்கின்றனர்.

இருந்தாலும் சிலர் ஓர் பெண் எப்படி கோயிலில் பூஜை செய்யலாம் என வழக்கும் தொடரப்போகிறார்கள். ஆனால் இதைப் பற்றிக் கவலையே இல்லாத இராஜ இராஜேஸ்வரி சொல்கிறார் 'நான் 8-ம் வகுப்பு மட்டும்தான் படித்துள்ளேன். இன்னும் அதிகம் படித்திருந்தால் பெரிய துறைகளிலும் ஜெயித்துக்காட்டியிருப்பேன். நான் கணவனால் கைவிடப்பட்டதும் எத்தனை பேர் என் அழகை அனுபவிக்க வந்தனர். நான் யாருக்கும் பணியவில்லை. என் கணவர் திருந்தி என்னிடம் வந்தாலும் இனி ஏற்றுக்கொள்ளப் போவதில்லை



என்னுடைய பிள்ளைகளை மிகவும் நல்ல நிலைக்கு ஆளாக்க வேண்டும். அதுவே என் தற்காலிக எண்ணம்' என்று துணிவுடன் கூறும் இப் பெண்ணிடம் மற்றப்பெண்கள் தம் பிரச்சினைகளிற்கு ஆலோசனை பெறும் ஓர் நல்ல வழிகாட்டியாக கொண்டுள்ளனர்.

எந்நேரமும் இவர் வீட்டில் ஆறுதல் தேடி தம் துன்பங்களைச் சொல்லவரும் பெண்களிற்கு அளவேயில்லை. இதனால் விரைவில் ஓர் நல்ல பெண்கள் இயக்கத்தை தொடங்கி திறம்படச் செயலாற்ற வேண்டுமென்று முயற்சிசெய்து வருகிறார் இராஜ இராஜேஸ்வரிக் குருக்கள் எனும் இத் துணிவான பெண்மணி.

வளர்ந்துவரும் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக ஈழமுரசு பெண்கள் பகுதியினரால் நடாத்தப்படும்

## கவிதைப் போட்டி



இப் படத்தை உற்றுநோக்குங்கள். தலைமுறை இடைவெளி கொண்ட இவ் இரு பெண்களுக்கிடையிலான எண்ணவோட்டத்தை கவிதையாக வடித்து, உங்கள் பெயர் முகவரியுடன் 20.05.98 இற்கு முன்பாக எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள். வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள் ஈழமுரசு நடாத்தும் 'இசைமுரசு' போட்டியின்போது வழங்கப்படும்.

# அமெரிக்கப் பெண்களிடத்தில் அதிகரித்துவரும் புற்றுநோய்

அமெரிக்காவில் அண்மையில் புற்றுநோய் அதிகரிப்பதற்கான காரணத்தையும் அந் நோய்க்கு அதிகம் ஆளாகும் நபர்களையும் பற்றி ஓர் ஆய்வு நடந்தது. இவ் ஆய்வின் இறுதியில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கை அங்குள்ள பெண்களை சற்றுப் பீதியடைய வைத்துள்ளது.

ஏன் தெரியுமா? அங்கு அதிகளவில் புற்றுநோய்க்கு இலக்காவது பெண்கள்தானாம். அதுவும் இவர்களின் அதிகரித்த புகைத்தல், மது அருந்துதல் போன்ற காரணங்கள்தான் புற்றுநோய்க்கான முதல் இடத்தில் இருக்கிறதாம். எங்கே இதனை அறிந்த பின்னர்; இனி அமெரிக்கப் பெண்கள் மட்டுமல்ல மதுவுக்கும் புகைத்தலுக்குத் தம்மை அடிமைப்படுத்திக்கொண்ட அனைவருக்கும் விழிப்பு வருமா?' என்பது கேள்விக்குறிதான்.

# அன்னை பூபதியின் 10வது ஆண்டு நினைவெழுச்சி

அன்னையர்க்கு அன்னையான அன்னைபூபதியின் 10-வது ஆண்டு நினைவுநாள் ஜேர்மனியில் வூப்பெற்றால் நகரில் எழுச்சிக் கலை நிகழ்ச்சிகளுடன் இடம்பெற்றது. மண்டபம் நிறைந்த மக்கள் அன்னை பூபதியின் நினைவில் ஒன்றுகூடினர்.

அமைதி வணக்கத்தையடுத்து அன்னை பூபதிக்கு மலர் வணக்கம், தீப வணக்கம், உரை வணக்கம், ஆகியவை இடம்பெற்றன. அன்னை பூபதி நினைவுக் கவிதை வாசித்தல் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கு அன்னை பூபதி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியகக் கலைப் பண்பாட்டுக்கழகம் இப் போட்டிகளை நடாத்தியது.

பரிசுபெற்றவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியக இணைப்பாளர் அன்னை பூபதி நினைவுச் சின்னங்களை வழங்கினார். கீழ்ப் பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்ற மாணவர்கள் தங்கள் திறமைகளை மேடையில் காட்டினர்.

உமா சிறீ விக்கினேஸ்வரமூர்த்தி, ஜர்சிகா கந்தகுலம், ஆர்த்திகா பாலசுப்பிரமணியம், சில்வஸ்ரர் ஜெயகிஜன், மருசவின் ஆகியோர் கவி பாடினர். கீழ்ப்பிரிவு கவிதைப் போட்டியில் பங்கு பற்றிய இரண்டாம் பரிசுபெற்ற தீபிகா ஜெயராஜா தமது மழலை மொழியால் கவி பாடி அனைவரையும் மகிழ்வித்தார்.

மிகச் சிறிய வயதில் கவிதைப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்புப் பரிசைப் பெற்ற சிறீராம் சிறீ விக்கினேஸ்வரமூர்த்தி அன்னை பூபதி கவிதை பாடினார். இவருக்கான சிறப்புப் பரிசை ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு.ஆனந்தராஜா வழங்கினார்.

அன்னை பூபதி நினைவு நாளில் தமிழ்த்தாய் வெளியீடான 'உதிரம் உறைந்த மண்' புத்தக வெளியீடு இடம்பெற்றது. தமிழீழத்திலிருந்து வந்துள்ள இப் புத்தகம் அங்கு வெளியிடப்பட முன்னரே ஜேர்மனியில் வெளியிடப்பட்டது. சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான கொடூரம் எத்தகையது என்பதைப் புத்தகம் விளக்குவதுடன் நாகர் கோயில் குண்டுத் தாக்குதலின் பரிதாபத்தை சாட்சியங்களின் மூலம் எழுத்தாளர் வல்வை ஆனந்தன் என்பவர் தெளிவுபடுத்தியுள்ளார் என்றும் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக ஜேர்மனிப் பொறுப்பாளர் திரு.கா. சிவநாதன் இப் புத்தக வெளியீட்டின் போது தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உண்மை நிலையை உலகுக்கு எடுத்துரைக்கும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணிப் பொறுப்பாளர் வண.பிதா கஸ்பராஜ் அடிகளார் இப் புத்தகத்து முதல் பிரதியை வெளியிட அதனை ஜேர்மன் ஆன்மீகப் பணியகப் பொறுப்பாளர் வணபிதா ஜெயசேகரம் அடிகளார் வாங்கிக் கொண்டார்.

அன்னை பூபதி நினைவுநாளில் வண. பிதா கஸ்பராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். வெரித்தாஸ் வானொலிக்கு வன்னியிலிருந்து தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வந்த கடிதங்களை அங்கு அவர் வாசித்துக் காட்டிய போது பலர் துன்ப மிகுதியால் அழுதனர். அவர் உரையாற்றிய போது மண்டபமே அமைதியாக இருந்தது.

தமிழிசை வணக்கம் இசை நிகழ்ச்சியைப் பார்வையாளர்கள் மெய்மறந்து ரசித்தனர். ஆசிரியரும் மாணவரும் ஒருவரை ஒருவர் மிஞ்சும் அளவுக்கு திறமையை வெளிப்படுத்தினர். இன்னிசை வேந்தர் சங்கீத பூசணம் பொன் சுந்தரலிங்கமும் அவரின் மாணவரும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக இணைப் பொறுப்பாளருமான கண்ணனும் இவ்விசையை வழங்கினர். பக்க வாத்தியக் கலைஞர்கள் இசையோடு இசையாக ஒன்றிப் போயினர். வயலின் சூ.ராதாகிருஷ்ணன், தபேலா. ச.தேவகுருபரன். மிருதங்கம். ச. பிரணவநாதன், கெஞ்சிரா க. செல்வநாயகம், முகர்சிங் சிவரூபன் ஆகியோர் பக்கவாத்தியங்களை வழங்கினர்.

அன்னைபூபதி நினைவுநாள் எழுச்சி நடனங்களை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக ஜேர்மனிப் பணியக நடன ஆசிரியர்களான வானதி தேசிங்குராஜா, சாவித்திரி இம்மானுவேல் ஆகியோரின் மாணவிகளும் மற்றும் மேற்படி கழக நடன ஆசிரியர்களான பவித்திரா செல்வகாந்தன், ரஜனி சத்தியகுமார், அற்புதராணி கந்தசாமி ஆகியோரும் அவர்களின் மாணவிகளும் வழங்கினர்.

## ஜேர்மனியில் மே தின ஊர்வலம்



ஜேர்மனியில் நடைபெற்ற மே தினப் பேரணியின் ஒரு பகுதி


ஷேக்ஸ்பியரின்

எம். அரியநாயகத்தின் இயக்கத்தில்

**ஜூலியஸ் சீசர்**

துன்பியல் நாடகம்

காலம்: 31.05.1998 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 6.30 மணி

இடம்:

A.M.O.R.C

199bis, Rue de Saint Martin

(M°: Etienne Marcel)


## புகலிட நிகழ்வுகள்

# வடநோர்வே வார்டோவிற்கு வண. பிதா கஸ்பராஜ் வருகை

## தமிழ் மக்களுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது

30.04.98 பி.ப 03.45 மணிக்கு பிரதான காரியாலயத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருடனும் அரசியல் கட்சி தலைவர்களுடனும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறும் வகையில் வார்டோ தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒழுங்கு செய்தது பெருமைக்குரிய விடயமாகும்.

வண.பிதா அவர்கள் ஈழத்தின் நீண்ட காலப் பிரச்சினையையும் தற்போதைய பிரச்சினையையும் விரிவாக விளக்கினார்.

நானும் உங்களைப்போல் வேறு நாட்டவன். ஆனால் ஒரு இனம் அழிவதையோ, அல்லது துன்புறுத்தப்படுவதையோ குடும்பங்கள் சீர்குலைக்கப்படுவதையோ எவராலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. 60 வீதமானோர் மரத்தின்கீழ் வாழ்கிறார்கள் இவர்களுக்கு உணவு வசதி மருந்து வசதிகள் எதுவும் கிடையாது என்பவற்றையும் விரிவாக எடுத்துரைத்தார்.

இதற்கு கல்லூரித் திணைக்களக உத்தியோகத்தர் இவற்றிற்கு நாங்கள் எப்படியான உதவிகளைச் செய்யலாமென கேட்கப்பட்ட கேள்விக்கு வண.பிதா பதிலளிக்கையில், நீங்கள் செய்யும் உதவி ஒன்றும் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அதாவது உண்மையிலே அகதிகளாக இருக்கும் 7 இலட்சம் மக்களுக்குக் கிடைப்பதில்லை என்றும், யார் மூலம் அனுப்பினாலும் அவர்களுக்கு கிடையாது என்றும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டும்தான் அவர்களுக்கு உதவி செய்வதாகவும், உண்மையில் அவர்கள் மூலம் செய்யும் உதவி மட்டும்தான் அவர்களுக்குக் கிடைப்பதாக அங்குள்ள மக்கள் மூலம் தான் அறிந்ததாகவும் கூறினார்.

அரசியல் பிரமுகர் ஒருவர், வணபிதாவை பிரதமருடனும் வெளிநாட்டு உள்நாட்டு அமைச்சருடனும் கதைப்பதற்கு ஒழுங்கு செய்வதாகவும், அவருக்கு இது பற்றிய விளக்கங்களைக் கொடுக்கும்படியும் அதற்கான ஒழுங்குகளைத்தான் செய்வதாகவும் கூறினார். மாநகர முதல்வர் மற்றும் பலரும் கேட்ட கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்களை அளித்தார் வண. பிதா.

# மலேசியாவில் தேனிசை செல்லப்பாவின் இன்னிசை அமுது

எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா மலேசியாவில் மார்ச் மாத இறுதியிலும் ஏப்பிரல் மாதம் நடுப் பகுதி வரை நாடு முழுவதும் சுமார் ஆறு இடங்களில் மலேசியத் தமிழர்களின் மத்தியில் தனது இனிய குரலால் தமிழ் இன, மான உணர்வுப் பாடல்களையும் தமிழீழ எழுச்சிப் பாடல்களையும் பாடி மலேசிய மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றுவிட்டார்.

மலேசிய தமிழ் நெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் 'இன்னிசை அமுது' நிகழ்வு நாடு முழுவதும் ஒழுங்கு செய்யப்பட்டது. இந் நிகழ்வுக்கு தேனிசை செல்லப்பாவின் மகன் திரு.இளங்கோவலன் அவர்களும் வந்திருந்தார். இவர்கள் மலேசியாவிற்கு முதன் முதலாக வந்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் தமிழ் மக்களுக்குச் சொல்லாத பல விடயங்களை மலேசியத் தமிழ் மக்களுக்காகக் கூறினார்.

பெண்கல்வி, பெண்ணடிமை, கலப்பு மணம், மூட நம்பிக்கை போன்றவற்றை பாடல்கள் மூலம் கருத்துக்களை எடுத்துக்கூறி மக்களைச் சிந்திக்கவும், சிரிக்கவும் வைத்தார். தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடி கண்ணீர் வரவும் செய்தார்.

இவ்வளவு காலமாக சினிமாப் பாடல்களின் கர்நாடக சங்கீதக் கலைஞர்களில் நிகழ்வுகளை பார்த்து வந்த மக்கள் முதன் முதலாக மலேசியாவில் தமிழ் இசை நிகழ்வை பார்த்தும் கேட்டும் மகிழ்வுற்றனர்.

மலேசியாவில் கோலாலம்பூர், தைப்பிங், பெங்கலான்உலு சுங்கைப்பட்டாணி, சித்தியலான், ஜோகூர்பாரு, போன்ற இடங்களில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.





தேனிசைச் செல்லப்பா அவர்களின் நிகழ்வுக்கு சுங்கைப்பட்டாணி வெற்றி இசைக்குழுவினர் இசையூட்டினர். அவர்களுடன் திரு.இளங்கோவலன் அவர்கள் சேர்ந்து இசைக் கருவி வாசித்தார்.

அத்துடன் ஐயாவுடன் பெண் பாடகி திருமதி பவானி அவர்கள் பாடல்களைப் பாடி மக்களின் பாராட்டைப் பெற்றார். இவர் வெற்றி இசைக் குழுவின் பாடகியாவர்.

மலேரியத் தமிழ்நெறி கழகத் தலைவர் இரா. திருமாவளவன் அவர்கள் தேனிசை செல்லப்பா அவர்களுக்கு 'தமிழின தேசியப் பாடகர்' என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தனர்.

இந் நிகழ்வுக்கு முழலிசை (தபேலா) வழங்கிய திரு.சங்கர் என்பவருக்கு திரு. தேனிசை செல்லப்பா அவர்களும் திரு. இரா. திருமாவளவன் அவர்களும் 'முழலிசை வேந்தர்' என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தனர்.

நாடு முழுவதும் கிடைத்த நன்கொடைகளை மலேசியத் தமிழர் நெறி கழகம் தமிழீழ மக்களுக்கான உதவி செய்யும் அமைப்பான உலகத் தமிழர் நிவாரண நிதி, அறங்காவலர் திரு.பசுபதி அவர்களிடம் வழங்கினார்.

# ஜேர்மனியில் முதன்முதல் ஒரு மிருதங்க அரங்கேற்றம்

ஜேர்மனியின் யூலிச் நகரில் பதின் மூன்று வயது விதுனன் பிரதாபராசாவின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற்றது. இவர் இசைத்துறையில் புகழ் பெற்ற இசைப் பேராசிரியர் மோர்சிங் ஆகிய பக்கவாத்தியங் களுடன் அரங்கேற்றம் மேடை யேறியது.

இது ஒரு சிறுவனின் மிரு தங்க அரங்கேற்றம்தான் என்ற எண்ணத்துடன் இசையை செவி தமிழ்க் கலையை மறக்கவில்லை என்று கூறுவதைவிட, அதனை வளர்த்து புகழ் பெறவைக்கிறார் கள் என்பதற்கு இந்த மிருதங்க அரங்கேற்றமே ஒரு சான்று!' என அவர் தெரிவித்தார்.




இராமநாதனின் சிறந்த மாண வரும், ஈழத்தில் புகழ்பெற்ற இசைப்புலவர் சண்முகரத்தினத் தின் மகனுமான மிருதங்க மேதை இலங்கை வானொலி புகழ் சபிரணவநாதனின் முதல் மாணவருமாவார்.

மிருதங்க அரங்கேற்றம் அமைதி வணக்கத்தையடுத்து உலகத் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு.இரா.சோமாஸ் கந்தன் சண்முகரத்தினம், செல்வலக்சுமி ஆகியோரின் மங் கல விளக்கேற்றலுடன் ஆரம்ப மாகியது. இசைவேந்தர் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவரின் மாணவரும் ஐரோப் பாவில் சிறந்த இசையமைப்பா ளருமான கண்ணனும் தமிழி சைப் பாடல்களைப்பாடினர்.

வயலின் வித்துவான் சந்திர சேகரின் மாணவரும் இந்திய வானொலிப் புகழ் சு. இராதா கிருஷ்ணனின் வயலின், பிரபல தவில் வித்துவான் கே.பி. செல்வ நாயகத்தின் கஞ்சிரா, ஜேர்மன் 'தமிழீழம் இசைக் குழு'வின் கலைஞர் சிவரூபன் கடம், லண் டன் புகழ் க. சிதம்பரநாதனின் மடுக்கத் தொடங்கிய சபை யோரின் முகத்தில் வியப்பும் ஆச் சரியமும் தென்பட்டன. விது னன் பிரதாபராசாவின் விரல் 'கள் தாளம் பிசகாமல் மிருதங்க ஒலியை ஏற்படுத்திக்கொண்டி ருந்தன. இது தமது முதல் மேடை என்பதை மறந்து இசை யோடு விதுனன் லயித்துப் போயிருந்தார்.

இந்த மிருதங்க அரங்கேற்றத் திற்குத் தலைமை வகித்த விடுத லைப் புலிகளின் ஜேர்மன் பணி யக கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு.கா.சிவநாதன், 'ஜேர்மனியைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான முதன் மையான மிருதங்க அரங்கேற்ற மாகும். இந்தச் சிறுவனின் கைக ளில் அசைவில் விரல்களின் விளையாட்டு பிரமிக்க வைக் கின்றது. இவன் ஞானம் வளர்க' என்றார்.

ஜேர்மனியில் வசித்துவரும்; இந்திய புகழ்பெற்ற கலைஞர் திரு.சிறிராம் பிரதம விருந்தின ராக கலந்துகொண்டார். 'தமி ழீழ மக்கள் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும்

சங்கீத பூசணம் இசை வேந் தர் பொன்.சுந்தரலிங்கம் உரை யுாற்றியபோது, 'நான் இன்று எங்கள் தாய் மண்ணில் ஒரு மிருதங்க அரங்கேற்றத்தில் பாடு கிறேன் என்ற உணர்வில்தான் இருக்கிறேன். இது ஜேர்மனியில் தான் நடைபெறுகின்றதென் பதை மறந்துவிட்டேன். அருமை யான வாத்தியக் கலைஞர்களு டன் சிறப்பான ஒரு இளம் மிரு தங்க கலைஞரின் அரங்கேற்றத் தில் நான் பாடுவதையிட்டு பெருமைப்படுகிறேன்' என்றார்.

சங்கீத ரத்தினம் பிரணவ நாதன், திரு.பொன். சுந்தரலிங் கத்தினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அடுத்து பங்குகொண்ட கலை ஞர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட னர். அரங்கேற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட சகல கலைஞர் களும் திரு. க. பிரதாபராசாவி னால் சிறப்பிக்கப்பட்டு கௌர விக்கப்பட்டனர். மிருதங்க அரங் கேற்ற நிகழ்ச்சிகளை திரு. மு. தில்லைநாதன் தொகுத்து வழங்கினார்.

# சுவிசில் அன்னை பூபதியின் 10வது ஆண்டு ஞாபகார்த்த எழுச்சிவிழா

தச வருடங்களுக்கு முன்னால் அன்னை பூபதி அவர்கள் எம் மண்ணின் விடிவுக்காக உண்ணா விரதப்போர் நடத்தி தியாகித்த நாளை நினைவு கூருமுகமாக, சுவிற்சர்லாந்தின் மேற்கு பகுதியி லுள்ள லவுசான் நகரில் 25.04.98 சனிக்கிழமை எழுச்சி விழா நடைபெற்றது. மாவீரன் பால சிங்கம் முரளிகிருஷ்ணன் (இளங் கீரன்) அவர்களின் சகோதரி திருமதி தர்மகுலசிங்கம், தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்கள், பொதுமக்க ளுக்காக அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

கடந்த காலங்களில் அன்னை பூபதி எழுச்சிவிழா நடனங்கள் பலவற்றை நெறிப்படுத்திய ஆசி ரியை திருமதி பிரணவி யோகன் ராஜ் இம்முறையும் தொடர்ந்து தனது நடன நெறிப்படுத்தலி னால் பல கருத்தான நடனங் களை தந்திருந்தார். எழுச்சி விழாவிற்கு வருகை தந்த தமிழீழ அந்த நாட்டு மக்களின் ஒத்து ழைப்பையும் எடுத்துக் கூறியி ருந்தார்.

அன்னையைப் பற்றி சின் னஞ்சிறார்கள் பாடல் ஒன்று பாடியிருந்தார்கள். திருக்கோ ணேஸ்வரா நடனாலயா மாண விகள் எழுச்சிப் பாடலுக்கு அபி நயம் பிடித்துக் காட்டியதோடு கலைபண்பாட்டு கழகத்தின் ஆத ரவுடன் பாசல் சங்கமம் இசைக் குழு உருவாக்கி அரங்கேற்றிய அன்னை பூபதி நாட்டிய நாட கமும் பலரின் பாராட்டைப் பெற்றது.

ஜேர்மன் கலைபண்பாட்டுக் கழக வெளியீடான 'சுதந்திர தரிசனம்' நாட்டிய நாடகத்தை செல்வி அபிராமி புவனேந்திர னின் மாணவிகள் நிகழ்த்தி பல ரது பாராட்டையும் பெற்றுக் கொண்டனர். அடுத்து இரு சிறுவர்களை வைத்து உரையா டல் மூலமாக சில கருத்துக் களை தயாரிப்பாளர் பேர்னாட் றோக் வெளிக்குணர வைத்தார். நாடகப் போட்டியில் இரண்



டாம் இடத்தை பெற்றுக் கொண்ட 'சூரியன் உதிப்பதில்லை' நாடகமும் மேடையேறியது. கொடியிறக்கத்துடன் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என் னும் தாரக மந்திரத்தோடு எழுச்சிவிழா முடிவுற்றது.

மக்களுக்கு தேசிய தலைவர் திரு.வே.பிரபாகரன் ஒளியிழை நாடா மூலம் நிகழ்த்திய சொற் பொழிவில், மேலதிக பங்களிப் புக்கோரி விடுதலையின் முக்கி யத்துவத்தையும், சில உலக நாடு களின் விடுதலையில் புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்த

*தொகுப்பு: சங்கையூர் குமார்*

# அன்னை பூபதி 10ம் ஆண்டு நினைவுதினம்

இத்தாலி லொம்பார்தியா மாகாணம் வாழ் தமிழ் மக்களா லும் பியோமொந்தே மாகா ணம் வாழ் தமிழ்மக்களாலும் 26.04.1998 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியவில் மிலானோ நகரத்தில் வியாலே கொர்சிக்கா வில் அமைந்துள்ள கத்தோ லிக்க தேவாலய மண்டபத்தில் அன்னை பூபதியின் 10வது ஆண்டு நினைவு தினம் உணர்ச்சிபூர்வ மாகக் கொண்டாடப்பட்டது. இம்முறையே இவ்வகையான நிகழ்வு முதல் முறையாக மிலானோ நகரில் இடம்பெறு வது குறிப்பிடத்தக்கது.

சுடர் வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து அமைதி வணக்கம், உறுதியுரை, மலர்வணக்கம் என்பன இடம் பெற்றன. லொம்பார்தியா, பியோமொந்தே வாழ் தமிழ்மக் கள் பெருந்திரளாக வருகை தந்து உணர்ச்சி பூர்வமாக அன் னைக்கு வணக்கம் செலுத்தினர்.

மேலும் அன்னை பூபதியின் தியாகம் பற்றிய பேச்சுக்கள், கவி தைகள், எழுச்சி நடனம் என் பன இடம் பெற்றன. பியோ



மொந்தே பொன்சோனே விக் னேஸ்வரா பாடசாலை மாண வர்களால் 'புலியாய் தமிழா எழடா' என்ற காட்சியும் கான மும் இடம்பெற்றது. தொறீனோ வாழ் தமிழ்ச் சிறார்களால் 'செஞ்சோலைச் சிறார்கள்' எனும் நாடகம் வழங்கப்பட்டது. தொடர்ந்து அன்னை பூபதியின் வரலாறு வில்லிசையாக இடம் பெற்றது. இறுதியாக லொம் பார்தியா, பியோ மொந்தே வாழ் இசைக்கலைஞர்களால் தமிழீழத் தாயகப் புரட்சிக் கானங்கள் வழங்கப்பட்டது.

**எம்மண்ணில் மக்கள் துயரகன்று அமைதி வாழ்வுபெற மரியன்னையின் மாதத்தில் பெல்ஜியம்–பெனோ சமாதானத் திருயாத்திரை**

**இடம்: Wallfahrtsort -Banneux-Belgium**
**Reu de l'esplanade 57, B-4141 Banneux -N.D**

**நாள்: 16.05.98 சனிக்கிழமை**


**(மறையுரை வழங்குபவர் கரவையூர் செல்வம் அடிகளார்)**

மரியன்னை காட்சியளித்த திருத்தலங்களுள் ஒன்றான பெனோ திருத்தலம் ஒல்லாந்து—பெல்ஜியம்—ஜேர்மன்—லக்சம்பேர்க் எல்லையில் அமைந்துள்ளது. எம் மண்ணில் மக்கள் துயர் நீங்க வும்: நிரந்தரவிடுதலையுடன் அமைதி வாழ்வு பெறவும் புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் சிதறிவாழும் நாம் அனைவரும் ஒன்றுகூடி மரியன்னையிடம் உருக்கமாக வேண்டுவோம்.

யாத்திரைத் திருப்பலி 11.30 மணிக்கு ஆரம்பமாகும். மாலை யில் நோயாளர் ஆசீர்: நற்கருணை வழிபாட்டுடன் 18.30 மணிக்கு யாத்திரை நிறைவுபெறும். அனைவரையும் இத்திருயாத்திரையில் பங்கேற்று எமக்காகவும் விசேடமாக எம் மக்களுக்காக பெனோ அன்னையிடம் உருக்கமாக மன்றாட அன்போடு அழைக்கின் றோம்.

**ஒழுங்கு: தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் ஜேர்மனி - ஒல்லாந்து**

*அ.பி. யெயசேகரம்*
*'இயக்குனர்'*
*தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - ஜேர்மனி.*




# குற்றவாளி: சமூகம்: எழுத்தாளன்:

ஐக்கிய ராஜ்யத்தில் ஏப்ரல் 98 மாதத்தின் இறுதி இரண்டு வாரங்களில் ஒரு புத்தகம் மிகப் பெரிய பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கிறது.

**புத்தகத்தின் பெயர்:**
**கேட்கப்படாத அழுகுரல்கள்** (Cries Unheard)

**புத்தகத்தின் ஆசிரியர்:**
**கித்தா ஸெரனி** (Gitta sereny)

புத்தகத்தின் ஆசிரியரான ஸெரனி மனிதமனதின் இருண்ட பக்கங்களை ஆய்வு செய்யும் எழுத்தாளர் (Darker Side of the humanity) எனப் பெயர் பெற்றவர். மிகுந்த பொறுப்புணர்வுடன் எழுதும் சீரிய எழுத்தாளர், தீவிரமான ஆய்வும் தேடலும் மேற்கொள்பவர் எனப் புகழப்படுபவர். இங்கிலாந்தின் மதிப்பு மிக்க இலக்கிய சஞ்சிகையான கிரண்டா (Granta) இதழிலும் எழுதி வருபவர்.

பின் தனது 23-வது வயதில் விடுதலை செய்யப்பட்டார் மேரி. கடந்த 18 ஆண்டுகளாக சமூகத்துக்கு எந்தப் பிரச்சினையும் தராமல் வாழ்ந்து வருகிற மேரி தற்போது 14 வயது பெண் குழந்தை ஒருவரின் தாயாகவும் உள்ளார்.

**வலதுசாரிகளும், அறவியல் குறித்து இரட்டை வேஷம் போடுகிறவர்களும் எந்த விதத்திலும் குற்றம் செய்யாத மேரியின் 14 வயதுக் குழந்தையை வேட்டையாடித் திரிகிறார்கள். தனது தாய் ஒரு பழைய கொலைச் செயல் புரிந்தவர் என்பது கூட போனவாரம் வரை அக் குழந்தைக்குத் தெரியாது.**

ஹிட்லரின் அமைச்சரும் கட்டடக் கலை நிபுணருமான ஆல்பர்ட் ஸ்டீரின் வரலாற்றை எழுதியவர். ஆல்பர்ட் ஸ்டீர் உண்மையுடன் போராட்டம் எனும் அப்புத்தகம் மிகுந்த சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்ததென அறிமுகப்பட்டுத்தப்பட்ட நூல்.

74 வயதாகும் ஸெரனி ஹங்கேரியைச் சேர்ந்தவர். பாசிசத்தின் கொடுங்கரங்களிலிருந்து தப்பி பிரிட்டனில் வாழ்ந்து வருகிறவர். வலதுசாரி வரலாற்றாசிரியரான டேவிட் இர்விங்கின் கடுமையான விமர்சகர் இவர். தீவிரமான நாசி எதிர்ப்பு (Anti-nazi) நடவடிக்கையாளர்.

இவர் தற்போது எழுதியிருக்கும் புத்தகமான 'கேட்கப்படாத அழுகுரல்கள்', அரசியல் வட்டாரம், அரசாங்க வட்டாரம், இலக்கிய வட்டாரம் என அனைத்து மட்டங்களிலும் கடுமையான அறவியல் (Ethical) பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறது.

அந்தப் புத்தகத்தில் அப்படி என்னதான் இருக்கிறது?

98 மே முதல் வாரத்தில் மெக் மில்லன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கும் அப்புத்தகம் மேரி பெல் (Mary bell) எனும் 41 வயது பெண்ணைப் பற்றியது. தனது 11-வது வயதில் இரண்டு சிறுவர்களைக் கொலை செய்த பெண் பற்றியது அப்புத்தகம். சிறுவர்களின் வயது முறையே 6-ம் 4-ம் ஆகும்.

12 வருட சிறை வாசத்தின்

மேரி விடுதலை செய்யப்பட்டபோது வழக்கு மன்றத்தில் இரண்டு நிபந்தனைகளைக் கோரிப் பெற்றார். தனது பெயர் மாற்றப்பட்டு வாழ்ந்து வரும் தன்னை வெறும் அடையாளம் கோரி வேட்டையாடக்கூடாது தனது குழந்தையின் அடையாளம் தனது அடையாளம் பற்றிய உண்மைகள் வெளி உலகுக்கு அறிவிக்கப்படக் கூடாது. என்பதுதான் அந்த நிபந்தனைகள்.

ஸெரனி, இந்த மேரி பெல் எனும் 11 வயது பெண்குழந்தை கொலை செய்ததற்கான காரணங்களை இருவித நோக்கங்களுக்காக சமூகத்தின் முன் வைக்க விரும்புகிறார்.

I. **அந்தக் குழந்தை வாழ நேர்ந்த அன்றைய சமூகத்தின் சூழல், அந்தக் குழந்தையைச் சுற்றி நிலவிய மனிதர்களின் நடவடிக்கைகள், அந்தக் குழந்தையின் மனோ வளர்ச்சியில் வகித்த பாத்திரம் போன்றவற்றின் பின்னணியில் இப் பிரச்சினையை ஆய்வு செய்ய விரும்புகிறார்.**


II. **குழந்தைகளின் குற்றச் செயல் தொடர்பான பிரச்சினைகளை வளர்ச்சியுற்ற பெரியவர்களின் பிரச்சினைகளை கையாளும் முறைகளில் கையாளக்கூடாது எனும் அவர், சிறைத் தண்டனை போன்றவற்றையும் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்கிறார்.**

இந்தப் புத்தகம் ஒரு பெண் குழந்தை எனும் மேரியைப் பாதித்த சமூக தனிநபர் காரணங்களை விளக்கிச் சொல்கிறது. மேரியின் தாய் ஒரு விபச்சாரியாக, குடிகாரப் பெண்ணாக வாழ்ந்தவர். குழந்தையை சதா அடித்துத் துன்புறுத்தியவர். வந்த ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு குழந்தையான மேரியை ஆட்படுத்தியவர். மேரியின் மனோவியல் வளர்ச்சியில் அவளைச் சுற்றியிருந்த சமூகமும் தனிமனிதர்களும் வகித்த வன்முறையிலான பாத்திரத்தை புத்தகம் ஆய்வு செய்கிறது.

வழக்கம் போலவே 'சாத்தான்' கருத்தியலில் நம்பிக்கையில்லாதவர்களும், தனிமனித உளவியல் உருவாக்கத்தில் சமூகக் காரணிகளைக் காண்கிற படிப்பாளிகளும் இப் புத்தகத்தை வரவேற்கவே செய்கிறார்கள்.

இடதுசாரி தாராளவாதப் பத்திரிகையான 'கார்டியன்' போன்றவை, சீரிய இலக்கிய இதழான 'கிரண்பா' போன்றவை ஸெரனியின் பொறுப்புணர்வையும் ஆய்வு மனப்பான்மையையும் ஆதரித்துக் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

டயானா இறந்தபோது இரட்டை வேஷம் போட்ட அதே 'மிரர்', 'ஸண்' பத்திரிகைகள் இப்போதும் ஒழுக்கம் பற்றியும் அறவியல் பற்றியும் படு கேவல




மாக கூச்சலிட்டுத் திரிகின்றன. மேரிபெல் வீட்டைக் கண்டுபிடித்து, அவரது 14 வயது பெண் குழந்தையையும் ஓடஓட விரட்டி பொலிசிடம் அடைக்கலம் கோர வைத்திருக்கிறார்கள். அவரது வீட்டு முன் கூடாரம் போட்டு அசிங்கமாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

கொல்லப்பட்ட இரண்டு சிறுவர்களின் தாய்மார்க்கும் மிகுந்த பொறுப்புணர்வுடன் ஒரு திறந்த கடிதம் எழுதியிருக்கிறார் ஸெரனி.

தனது நோக்கம் நடந்த துயரத்தை திரும்ப மேடையேற்றிப்


எழுத்தாளர் கித்தா ஸெரனி

பார்ப்பதல்ல, மாறாக 11 வயது பெண் குழந்தையை கொலை செய்யத் தூண்டிய சமூக உளவியல் காரணங்களை அறிய முயல்வதே என்று எழுதியிருக்கிறார்.

இப்பிரச்சினையில் இன்னுமொரு அம்சம், மேரிக்கு ரெனியால் இப் புத்தகத்தை எழுதி உதவியதற்காக கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் 50,000 பவுன் தொகை. தான் புத்தகத்தால் பெற்ற பணத்தில் ஒரு சிறு தொகையைத் தருவது தன்து தார்மீகக் கடமை என்கிறார் ஸெரனி. ஏனெனில் தான் மேரியை பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை என்கிறார். காரணம் மேரி வாழ்நாளெல்லாம் 'பயன் படுத்திக்கொள்ளப்பட்டவள்' ஆக இருந்திருக்குமுன் தான் அதைச் செய்ய விரும்பவில்லை என்கிறார் ஸெரனி.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் உள்துறை அமைச்சர் ஜாக் ஸ்ட்ரா இருவருமே அதிர்ந்து போயிருக்கிறார்கள். குற்றச் செயல்களை விளக்குவதன் மூலம் காசு பெறுவது அ..பக்கேடு சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்கிறார்கள் இருவரும். அட்டோர்ணி ஜெனரல் மேரியிடமிருந்து காசை திரும்பப்பெறத் தேவையில்லை எனக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

**எழுத்தாளர் வேலை உண்மையைச் சொல்வதுதான். அது குற்றமாயின், அவன் அதைச் செய்துதான் ஆகவேண்டும்.**

வலதுசாரிகளும், அறவியல் குறித்து இரட்டை வேஷம் போடுகிறவர்களும் எந்த விதத்திலும் குற்றம் செய்யாத மேரியின் 14 வயதுக் குழந்தையை வேட்டையாடித் திரிகிறார்கள். தனது தாய் ஒரு பழைய கொலைச் செயல் புரிந்தவர் என்பது கூட போனவாரம் வரை அக் குழந்தைக்குத் தெரியாது.

இடது தாராளவாதிகளும், எழுத்தாளரான ஸெரனியும் கொடூரமான் முறையில் கொலை செய்யப்பட்ட சிறுவர்களின் சோகத்தையும், அவர்களது தாய்மார்களின் துக்கத்தையும் பொறுப்புடன் அணுகுகிறார்கள். அதேவேளை 11 வயது பெண் குழந்தையைக் கொலை செய்யத் தூண்டிய சமூக / தனிநபர் உளவியல் பிரச்சினைகளை ஆராய்ந்து முன்வைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறார்கள்.


கார்டியன் தனது தலையங்கத்தில் மூன்று விஷயங்களை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறது.

I. **மேரியின் 14 வயதுப் பெண் குழந்தையை வேட்டையாடித் துன்புறுத்துவதை ஆபாசப் பத்திரிகைகள் (ஸண், மிரர், மெயில்) கைவிட வேண்டும்.**

II. **மேரி தனக்கு வழங்கப்பட்ட 50,000 பவுண் தொகையை ஏதேனும் அறக்கட்டளைக்கு (சிறுவர்களின் தாய்மார்கள் சொல்கிற) கொடுத்துவிட வேண்டும்.**

III. **எழுத்தாளர் வேலை உண்மையைச் சொல்வதுதான். அது குற்றமாயின், அவன் அதைச் செய்துதான் ஆகவேண்டும்.**

யமுனா ராஜேந்திரன்

ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689
Pub

# நாற்புறமும் எதிரிகளால் சூழப்பட்ட தேசம் 'இஸ்ரேல்'

முதலாம் உலகப் போர் முடிவடைந்து பாலஸ்தீனம் பிரித்தானியாவின் நிர்வாகத்திற்குள் கொண்டுவரப்படுகிறது. அக்காலப் பகுதியில் பாலஸ்தீனத்தின் பெரும் பகுதியில் அரபு குடியேற்றங்களே அமைந்திருந்தன. யூதர்கள் சிறுபான்மையாகவே பாலஸ்தீனத்தின் சில பகுதிகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 1920-களில்



தொடர்ந்து குடியேறிக்கொண்டிருந்த யூதர்கள் பாலஸ்தீனத்தின் பல பகுதிகளிலும் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். பெரும்பான்மை இனத்தவராக அரபுக்கள் வாழ்ந்து வந்தாலும் அநேகமானோர் கிராமப் புறங்களில், நகரப்பகுதிகளில் தொடர்புகளின்றி மிகவும் குறைந்த வாழ்க்கைத் தரத்துடன்தான் வாழ்ந்தார்கள். இவர்களது தலைவிதி கூட சில குறிப்பிட்ட அரபு தனவந்தர்களால்தான் நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது. பிற்காலத்தில் அதிலும் இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டு 50 ஆண்டுகளானபோது கூட அரபுக்கள் தம்மை நிலைநிறுத்தி தனித்துவமாக எதிரியைச் சந்திக்க முடியாமல் உள்ளதற்கு அன்று அவர்கள் தம்மை, தமது எதிர்காலத்தை திட்டமிடவில்லை என்பதுதான் காரணம்.

ஆனால் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து துரத்தப்பட்டு பால்ஸ்தீனத்திற்குள் 1920 களில் குடியேறிய யூதர்கள் திட்டமிடலுடன் கூடிய மனோ திடமும் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் பிரித்தானிய அரசினால் குடியேற்றப்பட்ட இடங்களில் தமது எதிர்கால நலன்களுக்கான பல திட்டங்களை மேற்கொண்டனர். கல்வி, வர்த்தக சங்கங்கள், சமூக அமைப்புக்கள் ஏன் இரகசிய இராணுவ அமைப்பொன்றையும் கூட அவர்கள் தோற்றுவித்துக் கொண்டார்கள். இவர்களால் சில அரசியல் கட்சிகளும் அமைக்கப்பட்டன.

ஆனால் அரசியலைப் பொறுத்தவரையில் அன்று யூத அடிப்படைவாத, தீவிரவாத அமைப்புக்கள் சிலவே பெற்றிருந்தது. அவர்கள் தொடர்ந்து பல தடவைகள் பிரித்தானிய இராணுவ நிலைகள் மீதும் அரபுக் குடியேற்றங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி ஏராளமானோரை கொன்றொழித்தனர். இதற்கு அவர்கள் கூறிய காரணம் பாலஸ்தீனத்துக்குள் யூதர்கள் பலம் கொண்டவர்களாக இருக்கவேண்டுமானால், இவ்வகையான நடவடிக்கைகள் அவசியம் என்றுதான். ஆனால், அன்று டாவிட் பென்குரியன் அவர்களுக்கு கூறிய பதிலோ சற்று வித்தியாசமானது. நாம் பலமோடு இருப்பதற்காக அவர்களை துரத்தாதீர்கள். அவர்கள் இங்கு முழு உரிமையோடும் வாழ வேண்டும். விட்டுவிட்டு ஓடினால் நாம் அவர்களை திரும்ப அழைக்கமாட்டோம். ஆனால் அவர்கள் துரத்தப்படுவதற்கான தாக்குதல்களை நாம் ஊக்குவிக்கக்கூடாது என்று பென்குரியன் கூறினார். இஸ்ரேலின் தோற்றத்திற்கு முன் இப்படிக் கூறிய பென்குரியன், பின்னால் இஸ்ரேல் பிரகடனப் படுத்தப்பட்டபோது இஸ்ரேலில் யூதர்களுக்கு சரியான வசதிகளைச் செய்வதானால் இப்பகுதியில் இருந்து அரபுக்கள் அகற்றப்படவேண்டும் என்றார்.

யூதர்களை குடியேற்றியதால் அரபுக்களும், தமது பலத்தினை தக்கவைத்துக்கொள்ள, யூதர்களும் பிரித்தானிய ஆட்சியாளர் மேல் பல தாக்குதல்களை நடாத்தினார்கள். ஆனால் அரபுக்களை விட அதிகமான தாக்குதல்கள் யூத அடிப்படைவாதிகளாலேயே பிரித்தானியரை வெளியேற்ற நடாத்தப்பட்டது. இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகியது, ஜேர்மனிய நாசிகளை எதிர்ப்பதில் யூத இளைஞர்கள் பல்லாயிரம்பேர் பிரித்தானிய மற்றும் நேச நாட்டுப் படைகளுள் இணைந்தனர். இதன் மூலம் முறையான ஆயுதப் பயிற்சியினை யூதர்கள் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் அரபுக்கள் அதுபற்றிச் சிந்திக்கவேயில்லை. யுத்தம் முடிவடைந்த நிலையில் அழிவுகளின் மத்தியில் பிரித்தானியா தனது நாட்டை மீள அமைத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தது. இந்நிலையில் பாலஸ்தீனத்தைத் தொடர்ந்து வைத்திருக்கவோ அல்லது அரபுக்களுக்கும், யூதர்களுக்கும் சமமான அதிகாரத்தை அளிக்கும் வகையில் நிர்வகிக்கவோ பிரித்தானியாவால் முடியவில்லை. அது பாலஸ்தீனப் பிரச்சினையை ஐ.நாவின் பொறுப்பில் விட்டுவிட்டு ஒதுங்கிக்கொண்டது.

1947-ம் ஆண்டு நவம்பர் 27-ம் திகதி ஐ.நா பொதுச்சபை பாலஸ்தீன அரபுகளுக்கும், யூதர்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என வாக்களித்தது. இதனை அரபு உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை இரு தரப்பினரும் மோதிக் கொள்ளத் தொடங்கினார்கள். போதியளவில் அனுபவம் கொண்டிருந்த யூதப் போராளிகள் தமது எதிர்கால எல்லைகளை நோக்கி மிக வேகமாக நகரத் தொடங்கினார்கள்.

1948-ம் ஆண்டு ஏப்பரல் 9-ம் திகதி யூத அடிப்படைவாதிகளால் மேற்கு ஜெருசலேம் கிராமமான டேர்யாசினில் 200 இற்கும் அதிகமான அரபு இனத்தவர் கோரமாகக் கொல்லப்பட்டனர். இதனால் இப் பகுதியில் இருந்து பல்லாயிரம் அரபு மக்கள் வெளியேறத் தொடங்கினர். பாலஸ்தீனத்திற்குள் இவ்விதம் தாக்குதலில் ஈடுபட்ட இவ் அமைப்பினர் மற்றைய அரபு நாடுகளிலும் அரபுகளுக்கு எதிரான இரகசிய தாக்குதல்களை நடாத்தினர். இதன்மூலம் ஆத்திரமடைந்த அரபு மக்கள் அந்தந்த நாடுகளில் யூத இன மக்கள் மீது தமது தாக்குதல்களை நடாத்தத் தொடங்கினர். இதன் காரணம், அங்கிருந்து யூத மக்கள் வெளியேறி பாலஸ்தீனத்திற்குள் வரவேண்டும் என்பதே.

1917-ம் ஆண்டு 50,000 ஆக இருந்த பாலஸ்தீன யூதர்களின் எண்ணிக்கை 1949-ம் ஆண்டளவில் 650,000 ஆக மாறியது. இந்நிலையில் பெரும்பான்மை அரபுக்கள் நாட்டைவிட்டு வெளி




யேறியதால் 200,000 பேர் மாத்திரம் பாலஸ்தீனத்தில் சிதறியிருந்தனர். மூன்று முதல் நான்கு மில்லியன் வரையிலான அரபுக்கள் பாலஸ்தீனத்தில் இருந்து வெளியேறி லெபனான், சிரியா, ஜோர்டான், எகிப்து போன்ற நாடுகளில் அகதிகளாக வாழத் தொடங்கினார்கள்.

1948-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி இஸ்ரேலின் உதயம் அறிவிக்கப்பட்டது. இவ் இராச்சியத்தை அதே தினம் சோவியத் ரஷ்யாவும், அமெரிக்காவும் அங்கீகரித்தன. அன்று முதல் இன்றுவரையான காலப்பகுதியில் இஸ்ரேல் 5 போர்களையும், எண்ணற்ற மோதல்களையும் சந்தித்துள்ளது. ஆரம்பத்தில் உறுதிக்கான, பலத்திற்கான, பாதுகாப்பிற்கான யுத்தம் என்று கூறிய இஸ்ரேல் தற்போது அமைதிக்கான யுத்தம் நடாத்தி வருவதாகக் கூறுகிறது.

## முதலாவது பாலஸ்தீன யுத்தம் (1947 - 1949)

முதலாவது பாலஸ்தீன யுத்தம் எனக் கூறப்படுவது 1947-ன் இறுதியில் ஐ.நாவின் பொதுச் சபை, பாலஸ்தீனத்தின் பிரிவு பற்றி அறிவித்தவுடன் ஆரம்பமாகியது. பிரித்தானிய நிர்வாகத்தின் கீழ் பாலஸ்தீனம் இருந்தது. யூதப் போராளிகள் தங்க




ளது குடியேற்றங்களைத் தாக்கிய அரபுப் போராளிகள் மீது தாக்குதலை நடாத்தினர். மோதல்கள் மிக விரைவிலேயே பல பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியது. பிரித்தானிய அதிகாரிகளின் கட்டளைகளின் கீழ் இயங்கிய `Trans Jordanian Arab Legion' ஜெருசலெமை முற்றுகையிட்டது.

அடுத்த நான்கு மாதங்களில் யூத இராணுவ அமைப்பு நேரடியாக தாக்குதலைச் சந்தித்தது. வடக்குப் பாலஸ்தீனத்தில், ஜாபாவில், ஜெருசலேமில் அரபு விடுதலை படைக்கு எதிரான யுத்தத்தில் யூத இராணுவம் வெற்றி பெற்றது. பிரித்தானியப் படைகள் ஹய்பாவிற்கு பின் வாங்கின. இதேவேளை சில பிரித்தானிய அதிகாரிகள் அரபு விடுதலைப் படைக்கு கட்டளையிட்ட அதேவேளை, யூத இராணுவத்திற்கும் உதவினார்கள் என்று சொல்லப்படுகிறது. 48-ம் ஆண்டு மே மாதம் இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாலஸ்தீன அரபுப் படைகள், மற்றும் ஈராக், லெபனான், சிரியா போன்ற நாடுகளின் படைகள் போன்றவைகள் யுத்தத்தில் இணைந்துகொண்டன. மோதல்கள் தொடர்ந்தன. ஐ.நா. சபையின் போர்நிறுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. ஜூன் மாதம் 11-ம் திகதி ஐ.நா. சபை 4 வார யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்தது. ஆனால் அரபு நாடுகள் அதற்கு இணக்கம் தெரிவிக்காத நிலையில் மீண்டும் 11 நாட்கள் கடும் யுத்தம் இடம்பெற்றது.

இக் காலப்பகுதியில் இஸ்ரேலியப் படைகள் ஜெருசலேமின் முற்றுகையை உடைத்தது மட்டுமன்றி வேறுசில பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. மீண்டும் ஜூலை மாத நடுப் பகுதியில் ஐ.நா. சபை இரண்டாவது போர் நிறுத்தத்திற்கு கோரிக்கை விடுத்தது. இது அமுல் செய்யப்பட்டபோதும் சிறுசிறு மோதல்கள் ஆங்காங்கே நடந்தன. இக் காலப்பகுதியில் நெடுகல், கலிலீ போன்ற பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது.

1949-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒருவாறு யுத்தம் முடிவுக்கு வந்தபோது இஸ்ரேல் தனது சனத்தொகையில் ஒரு விகிதத்தினை இழந்திருந்தது. ஆனால் 5000 சதுர கிலோ மீற்றர் நிலப்பகுதியை மேலதிகமாக கைப்பற்றிக் கொண்டிருந்தது. அரபு விடுதலை இராணுவமும் அதன் நேசப் படைகளும் பெரும் இழப்புக்களைச் சந்தித்து நீண்ட தூரம் பின்வாங்கி இருந்தன.

. ஐ.நா. சபையின் மேற் பார்வையில் எகிப்து, சிரியா, ஜோர்தான், லெபனான் போன்ற நாடுகளுடன் `அமைதி ஒப்பந்தத்தை இஸ்ரேல் மேற்கொண்டது. ஆனால் அரபுக்களின் வெளியேற்றம் தடுக்கப்பட முடியவில்லை. மேலும் பல மில்லியன் மக்கள் தமது இடங்களை விட்டு வெளியேறினர். இஸ்ரேல் செய்துகொண்ட இவ் ஒப்பந்தம் அந்நாட்டிற்கு புதிய பல எல்லைகளைக் கொடுத்தது. இவ் எல்லைகளும் அமைதி ஒப்பந்தமும் 1967 வரை பாதுகாக்கப்பட்டது.

(தொடரும்)

**- உதயன்**

## உதைபந்தாட்ட உலகம்

# பிரான்ஸ் 98

உலகக் கிண்ணத்திற்கான 16-வது உதைபந்தாட்டப் போட்டிகள் இன்னும் ஒரு மாதத்தில் ஆரம்பமாகின்றன. இந்த 16-வது உலகக் கிண்ணப் போட்டிகளில் 32 நாடுகளின் அணிகள் கலந்து கொள்கின்றன. இப் போட்டிகளை 2.5 மில்லியன் ரசிகர்கள் நேரடியாகப் பார்வையிடுவார்கள். இப் போட்டிகள் நடக்கும் 10 விளையாட்டு அரங்கங்களில் ஒரு மில்லியன் வரையிலான உணவுப் பொட்டலங்கள் பரிமாறப்படவுள்ளன. இப் போட்டிகளுக்காக 7500 வரையிலான பத்திரிகையாளர்களும், புகைப்பிடிப்பாளர்களும் கடமையாற்றுகின்றனர்.

இம் முறை நடைபெறும் இப் போட்டிகளின் பிரதான ஏற்பாட்டாளர்களாக அமெரிக்க கொக்கா கோலா நிறுவனம் மற்றும் பியூஜி புகைப்பட நிறுவனம், பிரபல அடிடாஸ் நிறுவனம் போன்றவைகள் செயலாற்றுகின்றன. இவை தவிர ஜே.வி.சி. நிறுவனம், மாஸ்ரர் காட் நிறுவனம், ஒப்பல் நிறுவனம், பிலிப்ஸ் நிறுவனம் இவற்றுடன் மேலும் பல நிறுவனங்கள் ஏற்பாட்டாளர்களின் பட்டியலில் இணைந்து கொண்டுள்ளனர்.

விளையாட்டுத்துறைக்கு அப்பால் இவ் உதைபந்தாட்டப் போட்டிகளின் மற்றுமோர் பக்கத்தை இக் கட்டுரை வெளிக்கொணர்கிறது.

## நுழைவுச் சீட்டுக்கள்

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டுக்கள் 350 பிரெஞ்சு பிராங்குகள் முதல் 2950 பிரெஞ்சு பிராங்குகள் வரை என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இறுதிப் போட்டியின் 70300 நுழைவுச் சீட்டுகளில் 28800 நுழைவுச் சீட்டுக்கள் பிரெஞ்சு மக்களுக்




கும், 19000 சீட்டுக்கள் வெளிநாட்டவருக்கும் (அதிலும் 12500 சீட்டுக்கள் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளின் ஆதரவாளர்களுக்கு), மிகுதியானவை இவ் உலகக் கிண்ணப் போட்டிகளின் ஏற்பாட்டாளர்களுக்கும், பிரதம விருந்தினர்களுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும் என ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதான ஏற்பாட்டாளர்களான கொக்காகோலா, ஒப்பல், மாஸ்ரர் காட் நிறுவனங்கள் தமக்கென 20000 நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டுள்ளன.

இவ் இறுதிப் போட்டியின் நுழைவுச் சீட்டு, கறுப்புச் சந்தையில் 15000 பிரெஞ்சு பிராங்குகள் வரை விற்பனையாகலாம் எனக் கூறப்படுகின்றது. எந்தவிதமான மறுபிரதிகளும் எடுக்கமுடியாதவாறு (ரூபாய் நோட்டைப்போன்ற) தயாரிக்கப்பட்டுள்ள இச் சீட்டுக்கள் உள்நுழையும் போது மிக நவீன 'Optic Reading' எனும் கட்டுப்பாட்டு முறையினால் பரிசோதிக்கப்படும்.

பாரிசில் நடைபெறும் போட்டிகளின் மாலைப்பொழுதை இனிமையாகக் கழிக்கப்போகும் பிரமுகர்களுக்காக 'Le Notre' எனும் பிரபல உணவு நிறுவனம் 160 சொகுசு இருக்கைகளுடன் கூடிய ஒரு உணவு விடுதியினை புதிய விளையாட்டரங்கில் அமைத்துள்ளது. இங்கிருந்து எந்தவித இடையூறுகளும் இன்றி தனியான மூடப்பட்ட பகுதிகளில் அமர்ந்து உணவருந்தியபடியே போட்டியை ரசிக்கலாம். ஆனால் உணவு உட்பட 37500 பிரெஞ்சு பிராங்குகள்தான் ஒருவருக்கான கட்டணம்.

பாரிசின் புதிய விளையாட்டரங்கில் 6000 இருக்கைகள் மிக விசேடமான முறையில் முக்கியஸ்தர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் அமைந்திருக்கும் இடங்



கள் அநேகமாக குளிரூட்டப்பட்டிருக்கும். இவ் ஒரு ஆசனத்தின் விலை 5800 பிரெஞ்சு பிராங்குகள். உலகக் கிண்ணப் போட்டிகளின் ஏற்பாட்டாளர்களுக்கென இறுதிப் போட்டியில் மாத்திரம் 2000 விசேட உணவுப் பொட்டலங்கள் பரிமாறப் படும். ஜனாதிபதி மற்றும் அரச பிரதிநிதிகள் ஆட்டத்தைக் கண்டு களிக்க 1000 இருக்கைகளுடன் கூடிய விசேட பகுதி ஒன்றும் தயார் செய்யப்பட்டுள்ளது.

## பிரயாண வசதிகள்

பாரிசில் அமைக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டரங்கின் இருக்கை வசதி 80000 வரையானதாகும். ஆனால் அங்கு அமைக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடத்தில் (Car Park) 5000 இடங்களே உள்ளன. இவ் வாகனத் தரிப்பிடத்தின் நுழைவுக் கட்டணம் 100 பிரெஞ்சு பிராங்குகள். சரி அதுதான் பரவாயில்லை என நினைத்தாலும் அங்கும் இடமில்லை. காரணம் அங்குள்ள 5000 இடங்களும் ஏற்கெனவே பிரதான முக்கியஸ்தர்களுக்காகவும், பத்திரிகையாளர்களுக்காகவும் ஏற்பாட்டாளர்களுக்காகவும், தொலைக்காட்சி நிறுவனங்களுக்காகவும் ஒதுக்கப் பட்டுவிட்டன. இதேவேளை இவ் விளையாட்டரங்கின் அருகாமையில் 630 மில்லியன் பிரெஞ்சு பிராங்குகள் செலவில் இரண்டு புகையிரத நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர 6 புதிய பேருந்துச் சேவைகள் இவ் விளையாட்டரங்கப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் பாரிசில் நடைபெறும் போட்டிகளைக் காண வெளி இடங்களில் இருந்து வரும் ரசிகர்களுக்காக 200 இரவு நேர அதிவேக ரயில்ச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## தொலைத்தொடர்பு, தொலைக்காட்சி

உலகக் கிண்ண இறுதிப் போட்டிகள் அநேகமாக எல்லா நாடுகளிலும் மீள ஒளிபரப்புச் செய்யப்படலாம். முழுமையாக இல்லாவிடினும் முக்கியமான சந்தர்ப்பங்களாவது இவ்வகையில் ஒளிபரப்பாகும். இறுதிப் போட்டி நடைபெறும் பாரிஸ் விளையாட்டரங்கில் 17 பாரிய ஒளிப் பதிவுக்கருவிகள் (Camera) பொருத்தப்பட்டுள்ளன. இவைகளுடன் ஓர் உலங்கு வானூர்தியும் மைதானத்திற்கு மேலே பறந்துகொண்டிருக்கும். இவை தவிர பல நகரக் கூடிய சிறு ஒளிப்பதிவுக் கருவிகள் மைதானத்தின் பல பகுதிகளிலும் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவைகளின் மூலம் பெறப்படும் படங்கள் மைதானத்தின் கீழ் பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் 28 தொலைக்காட்சி அஞ்சல்நிலைய வாகனங்களுக்கு அனுப்பப்படும். அங்கிருந்து சுமார் 176 தொலைக்காட்சி நிறுவனங்களுக்கூடாக உலகம் முழுதும் உதைபந்தாட்ட காட்சிகள் சென்றடையும்.

வானொலி, பத்திரிகையாளர்களுக்கென விசேட அஞ்சல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அவர்களின் வசதிக்காக 240 தொலைநகல் இயந்திரங்களும், 1180 தொலைபேசிகளும் இணைக்கப்பட்டுள்ளன. இவை தவிர இவர்களுக்காக 1078 தொலைக்காட்சிகளும் இம் மண்டபத்தில் பொருத்தப்பட்டுள்ளன. இங்கு 120M² அகலம் கொண்ட இரண்டு பாரிய தொலைக் காட்சித் திரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பாரிசின் புதிய விளையாட்டரங்கமானது, 5000 மக்கள் வாழும் ஓர் கிராமம் உட்கொள்ளும் மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்கின்றது.

## பாதுகாப்பு

இறுதிப் போட்டி நடைபெறும் மாலைப் பொழுதின் பாதுகாப்புக்கென 1700 விசேட பொலிசார் மைதானத்தின் சுற்றுப் பகுதியில் கடமையாற்றுகின்றனர். உட்செல்லும் ஒவ்வொரு பார்வையாளரும் நன்றாகப் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவர். போத்தல்கள், குடைகள், வெடிகள் போன்றவைகள் உள்ளே கொண்டுசெல்ல தடை செய்யப்பட்டுள்ளது. அரங்கத்தின் உட் பகுதியில் 1200 அரங்கக் காவலர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸ் சேவையின் விசேட அமைப்பினர் அரங்கத்தின் உட் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அரங்கத்தின் உட்பகுதியில் 163 விசேட ஒளிப்பதிவுக் கருவிகள் இரகசியமான முறையில் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 12 கருவிகள் மிக நுண்ணியமாக அவதானிக்கக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

போட்டி நடைபெறும் சமயத்தில் 16 மருத்துவ நிருணர்களும், 104 உதவியாளர்களும், 13 தாதிகளும் கடமையாற்றுவர்.

# 'நம் அன்னை' - சார்ட் -



*'சார்ட்' திருத்தலயாத்திரை திருவிழாபற்றிய கருத்துக்களையும், ஒழுங்கு முறைகளையும் அன்னையின் பக்தர்கள் அனைவருக்கும் முன்வைப்பதன் மூலம், இத்திருவிழா பக்தியான முறையிலும், ஒழுங்காகவும் நடைபெற உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம். வைகாசிமாதம் 17-ம் திகதி நடைபெறவிருக்கும் 'சார்ட்' அன்னையின் திருப்பயணம் - திருவிழாவில் 'சார்ட்' திருத்தலத்திற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய வழிபாட்டு ஒழுங்குகள் கடைப் பிடிக்கவேண்டிய நடைமுறைகள் பற்றி பகிர்ந்து கொள்கிறோம்.*

**1. வழிபாட்டு ஒழுங்கு காலை 11.00 மரியன்னை திருமணி வழிபாடு**

**இடம்: Le Stade Des Grandes Prix, Ave. D'aligre, Chartes**

**பகல் 12.15 மணி தொடக்கம், பி.பகல் 2.00 மணிவரை**

**மதிய இடைவேளை**

*பி.பகல் 2.30 மணி-மரியன்னை திருச் சுருப பவனி (மைதானத்தில் இருந்து பேராலயம் நோக்கி)*

*பி.பகல் 3.30 மணி (15.30) மரியன்னையின் பேராலயத்தில் திருநாள் திருப்பலி.*

**2. போக்குவரத்து ஒழுங்குகள்**

*பிரான்ஸ் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால் 'சார்ட்' திருத்தலத்திற்கு ஒழுங்கு செய்யப்பட்ட பேருந்து வண்டிகள் (பஸ்) கீழ் குறிக்கப்படும் இடங்களில் இருந்து 17.05.1998 ஞாயிறு காலை 8.00 மணிக்குப் புறப்படும். எனவே அந்தப் பகுதி பிரயாண ஒழுங்குப் பணி பிரதிநிதிகளிடம் உங்கள் பெயர்களைப் பதிந்து ஆசனங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.*

1. இடம்: புனித சூசையப்பர் ஆலயம்-பாரிஸ் கொன்சுட் தொடர்பு: அருட்திரு. எஸ்.மரியசெபஸ்ரியன் (அ.ம.தி) Tel: 0148072804
2. இடம்: புனித மார்த்தா ஆலயம் - Aubervilliers, Pantin தொடர்பு: திரு.கே. ஜே. பாக்கியராஜா - Tel: 0148399542
3. இடம்: புனித ஜெனிவி ஆலயம் - Garges Les Gonesse தொடர்பு: திரு.தோமஸ் அந்தோனிப்பிள்ளை, Tel: 0139943546
4. இடம்: புனித மார்ட்டின் ஆலயம் Sevran & Ivry தொடர்பு: திரு. ரட்ணதுரை சின்னத்துரை Tel: 0143855837
5. இடம்: புனித பத்தில்டா ஆலயம் Chelles தொடர்பு: திரு லூயிஸ் மார்ட்டீன் Tel: 0143084895

**3. வாகன ஒழுங்கு**

★ *திருவிழா அன்று சார்ட் திருத் தலத்திற்கு வரும் அனைத்து வாகனங்களும் (Bus, Van, Car,....) மரியன்னை திருமணி வழிபாடு நடைபெறும் மைதானத்தில் மட்டுமே (Le Stade des Grands Prix) நிறுத்தி வைக்க 'சார்ட்' நிர்வாகத்தின் அனுமதி உண்டு.*

★ *'சார்ட்' அன்னையின் பேராலய சுற்றாடலில் எவ்வித வாகனங்களும் நிறுத்திவைக்க அனுமதிக்கப்படமாட்டாது.*

★ *திருவிழாத் திருப்பலி நிறைவுபெற்றதும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மைதானத்தில் இருந்தே மீண்டும் புறப்படும்.*

**4. உணவு பரிமாறுதல்:**

**'சார்ட்' திருத்தலத்திற்கு வழக்கமாக உணவு பரிமாறுபவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கமைய:-**

★ *இதுவரைகாலமும் பரிமாறப்பட்ட உணவுத் தொகையை இம்முறை சற்று குறைத்துக்கொள்ளுதல்,*

★ *உணவு பங்கிடுவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் மட்டுமே உணவுகளைப் பங்கிடுதல்,*

★ *ஆராதனை, செபங்கள் நடைபெறும் நேரம் உணவு பங்கிடுதல் தவிர்க்கப்படுதல்,*

★ *நீங்கள் உணவுகளைப் பரிமாறும் இடங்களைத் துப்பரவாக விட்டுச் செல்லுதல்,*

★ *உணவுகளை வீண் விரயம் செய்யாமல் பார்த்துக்கொள்ளுதல், மேலதிக உணவுகளுக்குச் செலவிடும் பணத்தை பொதுநலன் கருதி நன்கொடையாக வழங்க முன்வருதல்.*

*யாத்திரை, திருவிழா வழிபாட்டு நிகழ்வுகளுக்கு முன்பும், முடிவிலும் உணவு, குளிர்பானம்,கோப்பி, தேநீர் போன்றவை விளையாட்டு மைதானத்தில் (Le Stade des Grands Prix) மட்டுமே பரிமாறப் படவேண்டும். அத்துடன் பேராலய சுற்றாடலில் எவ்வேளையிலும் உணவு, குளிர்பானம், கோப்பி, தேநீர் போன்றவை பரிமாறுதல் 'சார்ட்' நகர நிர்வாகத்தினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*

*புனித தலத்திற்கு யாத்திரை செய்யும் அனைவரையும் தங்கள் உணவு, குளிர்பானம், தண்ணீர் போன்றவற்றை தங்கள் தேவைக்கமைய உறுதிப்படுத்திக் கொள்வது மிகவும் விரும்பத்தக்கது.*

*மேலும் சார்ட் திருத் தலத்திலே அன்று பணிபுரியும் சேவையாளர்களுக்கு உங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுத்து இத் திருவிழா சிறப்பாகவும், ஒழுங்காகவும், பக்தியுணர்வுடனும் நிறைவேற உங்கள் அனைவரையும் கேட்டு நிற்கின்றோம்.*

**அருள் நிறை மரியே வாழ்க!**

அருட்பணி எஸ். மரிய செபஸ்ரியன் (அ.ம.தி.)
*பிரான்ஸ் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநர்.*

# வன்னியில் சர்வதேச செஞ்சிலுவைத் தினம்

சர்வதேச செஞ்சிலுவைத் தினமான கடந்த 8-ம் திகதி வன்னிப் பகுதியிலும் செஞ்சிலுவைத் தின நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களாலும் ஊழியர்களாலும் அன்றைய தினம் பல சிரமதான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு கட்டமாக முல்லை மாவட்ட ஆதார வைத்தியசாலையும் அதன் வளாகமும் செஞ்சிலுவைச் சங்கத்தினால் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

அதே நேரம் வசந்தபுரம், கெருடாமடு, மல்லாவி, துணுக்காய் ஆகிய பகுதிகளில் நடமாடும் சுகாதார சேவை பணியும் மேற்கொள்ளப்பட்டதுடன், செஞ்சிலுவை தினம் தொடர்பான பொதுக்கூட்டமொன்றும் நடாத்தப்பட்டுள்ளது.

## சொற்சிலம்பம் - 3 பிழை திருத்தம்

சொற்சிலம்பம் 3 இல் ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் ஒன்றாக இருக்க வேண்டும் என தவறாகப் பிரசுரமாகிவிட்டது. அது முதல் எழுத்தும் இரண்டாவது எழுத்தும் ஒன்றாக இருக்க வேண்டும் என வர வேண்டும். உதாரணம்: சம்பந்தி, சம்பல்

இவ் விதிமுறை சொற்சிலம்பம் 3 இற்கு மட்டுமே பொருந்தும்.

**விடைகள் வந்துசேர வேண்டிய இறுதித் திகதி: 15.05.98**

# ஜனநாயக ஈ.பி.டி.பி. ஆடுகளை ஏப்பம்

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள கால்நடைகளை ஈ.பி.டி.பி. குழுவினர் பிடித்து தமக்கு உணவாக பயன்படுத்துவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

அண்மையில் நெடுந்தீவுப் பகுதியில் மேய்ச்சல் நிலத்தில் புல் மேய்ந்துகொண்டிருந்த 20 ஆடுகளை இவர்கள் பிடித்துச் சென்றுள்ளனர். இதற்கு முன்னரும் இப் பகுதியில் சில மாடுகள் மர்மமாக காணாமல் போயிருந்தன. அவற்றின் மறைவிற்கும் ஈ.பி.டி.பி.யினரே காரணமென அப் பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

இக் கால்நடைத் திருட்டுக்களைப் பற்றி கருத்து வெளியிட்ட அப் பகுதிவாசிகள் ஜனநாயக வழிக்கு திரும்பியதாகக்கூறும் நரிகளே எமது ஆடுகளை ஏப்பம் விடுகின்றன எனத் தெரிவித்துள்ளனர்.

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கரையொதுங்கிய சடலம்

குருநகர் கடலில் அழுகிய நிலையில் மிதந்து வந்த ஆணின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய் அன்று கண்டெடுக்கப்பட்ட இச் சடலம் தலை இல்லாத நிலையில் 'பொலித்தீன்' உறை ஒன்றினால் சுற்றிக்கட்டப்பட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடையாளம் காணப்படாத நிலையில் இது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கலைந்த சொற்கள் எண்: 6

இங்கு சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் இருக்கும். இச்சொற்களைக் கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கூ | தா | கு | கு | ம | ள் | உ | ம | த | வ | ம | பா | ம் |
| லா | ட் | ங் | ட் | ச | து | ழ | லை | ஆ | ச் | ச | ச | வ |
| நி | ல | ட | ஞ் | ம் | லை | வ | று | ச | ம | வ | ம் | ரு |
| உ | ல | ம | ம் | ள | ன் | ர் | ம் | கி | க | ண | ர் | பு |
| கு | ர | ம் | ட் | வா | யோ | க | தி | க் | ண் | ச | க் | கை |
| ம | ல் | மு | ண | டி | க் | க் | கை | கி | ர | ட | ங் | கு |
| வி | கு | த | கொ | க | கு | கு | க் | வ | டு | வே | ல் | எ |
| ம் | ற | டி | த் | வா | க் | பு | மூ | மே | அ | பு | மு | தி |
| வ | க | து | ய் | லை | ம் | சி | ண் | ல | பு | து | தெ | ப |
| ய | த | க் | ம | கா | க | ம | ங் | பு | ம் | ரு | வ | பூ |
| ல் | பு | ப் | டு | க | டு | க | ப் | ப | ர | வ | ழ | ச |
| ம் | ப் | செ | ம் | தி | ரி | லி | ல | ம | க | ம் | ட் | ன் |
| க | ணி | ன | ரு | ப் | ச | கை | ட | க | ர | ட | வ | த |
| யா | யா | ப் | பு | க் | ஞ் | க் | று | ர | ம் | ட் | க | வ |
| தி | தி | ர | வ | ம் | கு | ஞ் | ச | ம் | பை | வ | ப | ம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தியானிப்பு | தியானம் | திடுக்கம் | மலைக்குகை | தலைவன் | மகரிகை |
| கரம்பு* | சிக்கனம் | புருஷன் | உழவர் | மழலை | கடுகடுப்பு |
| கடகம் | கலைந்தல் | கலகம் | கிண்டல் | மதுவம் | கழிவாளம் |
| கைக்கவசம் | புருவம் | எழுதும்பலகை | கூட்டம் | மடமை | வயல்பூபதி |
| மட்டி | நிலம் | காம்புக்கிண்ணம்* | மரமஞ்சள் | துருவம் | கத்துதல் |
| சட்டம் | கக்கம் | மும்மடங்கு | அலங்கரிப்பு | ஆமணக்கு | குஞ்சரி* |
| பூவரும்பு | செருக்கு | மூவரசர் | வேங்கை | தியாகம் | உலங்கு |
| குஞ்சம் | துறவி | ஆறு | வட்டம் | திருப்தி | திரவம் |
| கொடியோர் | வசம்பு | மச்சம் | மண்மேடு | திக்குவாய் | மகரம் |
| கரம்பை* | மகுடி | குக்கர் | மடக்கு | சலிப்பு | மட்டலகு |
| வாக்குமூலம் | புழுதி | தவம் | பாசம் | நிலா | |

சொற்களுக்கான விளக்கம்: கரம்பு* - பாழ்நிலம் குஞ்சரி* - பெண்யானை
கரம்பை* - களிமண் ஒரு பூடு பாழ்நிலம். காம்புக்கிண்ணம்* - அகப்பை மகரிகை* - தோரணம்.

பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி: . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பிறந்த திகதி: . . . . . . . . . . . . . . . . . . .

சந்தாதாரராயின் சந்தா இல: . . . . . . . . . . . .


கலைந்த சொற்கள் எண்-6 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 23.05.98

*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

## கலைந்த சொற்கள் எண் - 5 விடைகள்



*ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 250 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.*

*அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.*

1) திருமதி க. நேசராணி
91600 Savigny S/Orge,
France.
2) க. தவராசன்
45144 Essen,
Germany.
3) கனகசபை ஈசன்
8002 Zurich,
Swiss.
4) ரம்யா கரன்உபன்
4500 Solothurn,
Swiss.
5) துரைசாமி சந்துரு
59939 Olsberg,
Germany.

இவர்களுக்கு **Lune International Paris** நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-6 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-7 உம், 28 மே - 03 ஜூன் 98 ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேபூ சவுந்தரராஜா**

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

42




42

| | |
|---|---|
| இந்தியா | 36 நிமிடம் |
| கனடா | 100 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை (இரவு 10 மணி முதல்- காலை 4 மணி வரை | 42 நிமிடம் |
| இலங்கை (15.5.98 வரை) | 40 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |

| | |
|---|---|
| துனிசியா | 60 நிமிடம் |
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 60 நிமிடம் |
| மொரோக் | 60 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 நிமிடம் |

## இலங்கைக்கு 42 நிமிடங்கள்*

*இரவு 10 மணி தொடக்கம் காலை 4 மணி வரை

## GNANAM Telecom Center

**195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.**

**Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14**

**M°: La Chapelle / Gare du Nord**

**TELECOM CENTERS**
78 Bd Bd Barbes, 75018 PARIS
Tél: 01 55 79 75 11
M°: Marcadet Poissonieres

வெகு விரைவில்

சுவிஸ், லண்டனில்
எமது சேவை ஆரம்பமாகின்றது!

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1.64 | 1.77 | 0.16 | 0.68 |
| பிராங்பேட் | 0.56 | 2.90 | – | 0.30 | 1.20 |
| சூரிச் | 1.48 | 2.42 | 0.83 | 0.24 | – |
| பாரிஸ் | 6.02 | 9.72 | 3.35 | – | 4.04 |
| லண்டன் | 0.61 | – | 0.34 | 0.10 | 0.41 |
| பம்பாய் | 39.76 | 65.08 | 22.47 | 6.60 | 26.20 |
| கொழும்பு | 63.85 | 104.50 | 36.08 | 10.60 | 43.20 |

# வைரஸ் காய்ச்சலுக்கு 300 பேர் பலி

சிறீலங்கா, தமிழீழம் ஆகியவற்றில் தற்பொழுது நிலவிவரும் கடுமையான வெப்பச் சூழல் காரணமாக தோன்றியுள்ள வைரஸ் காய்ச்சலுக்கு இதுவரை 300 பேர் பலியானதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உத்தியோகபூர்வமற்ற செய்திகளின்படி இக் காய்ச்சலுக்கு மரணமானோர் தொகை 1500 இலிருந்து 1750 வரையில் இருக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 விதமாக பரவி வரும் இக் காய்ச்சல், குறிப்பாக குழந்தைகளையே தாக்கிவருகின்றது. இக் காய்ச்சலுடன் சின்னமுத்து, பொக்கிளிப்பான், கூவைக் கட்டு ஆகிய தொற்றுநோய்களும் தற்பொழுது பரவ ஆரம்பித்திருப்பதால் எதிர்வரும் வாரங்களில் நிலைமை மேலும் மோசமடையலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அரசின் அழுத்தங்....

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்பதால் சிறீலங்காவில் எமது பணியினை முடித்து வெளியேறுகிறோம் எனத் தெரிவித்துள்ளது.

தனது இறுதி முடிவு தொடர்பாக விளக்கமளித்த இந்த மனித உரிமை அமைப்பு மட்டக்களப்பு பகுதியில் தாம் மேற்கொண்ட ஆய்வு வேலைகளுக்கு சிறீலங்கா அரசு ஏற்படுத்திய பல தடங்கல்களையும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், சிறீலங்கா அரசு உண்மையான ஜனநாயகத்தையும், மனித உரிமையையும் பேண முடியாத ஒரு அரசு எனவும் குறிப்பிட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கிளைமோர் தாக்குதல்....

தல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

சிறீலங்கா பொலிஸ் வாகனமொன்றினை இலக்காக வைத்து நடாத்தப்பட்ட இத் தாக்குதலின் விளைவாக ஒரு பொலிசார் படுகாயமடைந்துள்ளதுடன், வாகனமும் கடும் சேதமடைந்துள்ளது.

இச் சம்பவத்தினையடுத்து அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் 13 பொதுமக்களை கைது செய்துகொண்டு சென்றுள்ளனர்.

### பெயர்வு

கடந்தவாரம் இடம்பெற்ற 'பெயர்வு' சிறு கதையை எழுதிய குந்தவை வடமராட்சி தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவருடைய இயற்பெயர் இரா சடாச்சரதேவி என்பதாகும். 1960–களின் பிற்பகுதியில் எழுத்துத் துறையில் புகுந்த இவர் பல நல்ல கதைகளை எழுதியுள்ளார். 'பெயர்வு' சிறுகதை ஏப்ரல் 98ல் வெளிவந்த கணையாழிக்காக அவர் எழுதிய கதையாகும்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### விடுதலைப் புலிகள்....

'சமாதானம்' என்ற வார்த்தை ஒன்று உண்டா என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. முதலில் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வழிவகைகளை அரசு மேற்கொள்ளட்டும். பின்னர் அது பற்றிப்பேசட்டும்.

ஐ.நா. வின் பிரதிநிதியாக வந்திருக்கும் நீங்கள் கூட இங்கு சிறுவர்கள் ஆயுதம் ஏந்தவில்லை என்ற உண்மை நிலையினைக் காண்கிறீர்கள் பொய்ப் பிரச்சாரங்களை நம்பவேண்டாம் எனவும் ஆயர் தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### ஈழத் தமிழர்களின்....

இவ்வாறு கொழும்புற்கு விஜயம் செய்த புதுடில்லிக்கான தென்னாபிரிக்கத் தூதர் ஜே. எம். மற்சில்டா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் வாழும் தமிழக மக்களாயினும், ஈழ தமிழ் மக்காளயினும் இங்குள்ள நிலைமைகளில் வெகுவாக அக்கறை கொண்டுள்ளார்கள். ஈழத் தமிழ் மக்களுக்கு அமைதியான வாழ்வொன்று கிடைக்கவுமே அவர்கள் விரும்புகிறார்கள் எனவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.


## துயர் துடைக்க கரம் கொடுப்போம்

### தொண்டர்களுக்கான அழைப்பு

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகம் பட்டினியுடனும் - நோயுடனும் போராடும் தன் உறவுகளின் துயர் துடைத்து அவர்களை அரவணைக்க 'துயர் துடைப்பு நாட்களை' எதிர்வரும் ஜூலை மாதத்தில் பிரகடனப்படுத்தியுள்ளது

இப் பாரிய மனிதாபிமான பணியில் பங்கேற்க பல்லாயிரம் தொண்டர்களை உரிமையுடன் அழைக்கின்றோம்.

உங்கள் மனித நேயத்தையும் - உறவுகளின் மேல் உள்ள உரிமையையும் மனதில் நிறுத்தி உங்கள் நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகங்களுடன் தொடர்புகொள்ளவும்

TRO
P.O. Box 4254, Knox city,
VIC - 3152, Australia.
Tel: 61 39 88 83 899

★

O.R.T - France
26 Rue du Département,
75018 Paris, France.
Tel/Fax - 01 40 38 30 74

★

P.O. Box 4742
Sofienberg
0506 Oslo, Norway.
Tel/Fax - 22-717537

★

861, Brodview Ave
Toronto - Ontario,
M4K 2P9, Canada.
Tel - 416 / 466 - 9624
Fax - 416 / 406 - 4755

Tal Str. 15,
6020 Emmenbrucke,
Switzerland.
Tel/Fax - 041 260 83 98

★

K. Chinnaththurai,
Schiermonnikoog Str. 44,
1825 NB
Alkmaar, Netherland.

★

Via Dante
218/A
90141 Palermo, Italy.
Tel: 91 68 24 056

★

E. Anantharajah
Hompech str. 16
41189 Monchengladbach,
Germany.
Tel - 021 66 58 508

79, Hoe Street,
Walthamstow,
London E17 4SA,
U.K.
Tel- 0181-520 5876
Fax- 0171-403 16 53

★

57 Old Town Road,
Cumberland,
MD 21502,
U.S.A.
Tel: 1 301 59 53 705

★

G. Ananthan
Brorsons VJE-51, 2-TV
7400 Herning, Denmark.
Tel - 97 - 21 46 88
Fax - 97 - 21 76 49

★



தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுப் பணியகம் நடாத்தும்

## மாவீரர் நினைவு

மென்பந்து துடுப்பெடுத்தாட்ட சுற்றுப்போட்டி -1998

காலம்: 17.05.1998 ஞாயிறு
காலை 9.00 மணி
இடம்: Stains மைதானம்

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் 01 43 58 11 42 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம்.



## வீடு வாடகைக்கு


Noisy Champs RER க்கு மிக அருகாமையில் Box உடன் கூடிய சகல வசதிகளுடனான F4 வீடு, ஆடி மாதத்திலிருந்து வாடகைக்குள்ளது.

தொடர்புகளுக்கு: 01 43 05 62 54

Pub


## 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்: 12.06.1916



ஆண்டவன் அடியில்: 12.04.1998

### திரு. ஜோசப் ஜேம்ஸ் (இருதயசாமி)

*(குருநகர் – யாழ்ப்பாணம்)*

யாழ். குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இருதயசாமி என்று அழைக்கப்பட்ட திரு.ஜோசப் ஜேம்ஸ் எம்மையெல்லாம் மீளாத் துயரில் விட்டுப் பிரிந்த 31-ம் நாள் நினைவஞ்சலியைச் செலுத்துகிறோம்.

இவர் பிலோமினா ஜேம்ஸ் என்பவரின் அன்புக் கணவரும் எமில் (இலங்கை), மேரிறோஸ்(இலங்கை), சிசில் கிளமென்ரைன் (நோர்வே), நிர்மலா (நோர்வே), பசில் (நோர்வே), மேரி குளோட்டில்டா (கனடா), நைல்ஸ் (நோர்வே), மேரி யோசெப்பின் (இலங்கை), பிறிஸ்கா (கனடா) ஆகியோரின் பாசம் மிகு தந்தையும் தங்கம், பாலா (காலஞ்சென்ற), மேரி யோசெப்பின் (குஞ்சு), கிறிஸ்துராசா (மகேஸ்), மேரி குளோரியா, உதயகுமார் ஜொய்சி, டக்கிளஸ் (சேகர்), சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறார்கள்.

*தகவல்: திரு. ஜேம்ஸ் பசில் (நோர்வே)*

Pub


AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

லண்டனில் புதுப் பொலிவுடன்



கணபதி தமிழ்க்கடை
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் + மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
**Ganapathy Food & Wine**
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

# முல்லை முகாமின் வீழ்ச்சியே ஆட்திரட்டும் நடவடிக்கைக்கு பாதிப்பை தந்தது

*- இராணுவத் தளபதி -*

பாடசாலைகளில் ஆட்திரட்டும் நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ள சிறீலங்கா, இராணுவத்தரப்பு பாடசாலைகளில் மட்டுமல்லாது சமுர்த்தி உதவித்தொகை பெறும் குடும்பங்களையும் ஆட்திரட்டும் நடவடிக்கைகளுக்கு உதவி செய்யுமாறு கோரவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இராணுவ தலைமையகத்தின் ஆட்திரட்டும் நடவடிக்கைகள் பற்றி செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட இராணுவத்தளபதிரொகான் தளுவத்தை

நாம் பாடசாலைகளில் மட்டும் இதனைச் செய்யப்போவதில்லை. சமுர்த்தித் திட்டம் ஊடாகவும், பௌத்த பிக்குமாரின் உதவியுடனும் ஆட்திரட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகிறோம். பாடசாலைகளில் ஆட்திரட்டுவதென்பது இராணுவ வரலாற்றுக்கு புதியதல்ல. அமெரிக்காவில் கூட பாடசாலைகளில் இராணுவ ஆட்சேர்ப்புக்கு உதவியான காரியங்கள் நடைபெறுகின்றன. எனவே நாம் இந்தமுறையை பின்பற்றுவது தவறல்ல. எமக்கு இப்போது ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பிரச்சினையே ஆளணிப் பற்றாக்குறைதான். முல்லைத்தீவு முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட பின்னர்தான் எமது ஆட்சேர்ப்பு திட்டத்தில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதென்பதனை நான் இக் கட்டத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எனத் தெரிவித்த தளுவத்தை ஆட்சேர்ப்பு வெற்றியளித்தால் மட்டுமே 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கைகளை வேகமாக முன்னெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு மீண்டுமொருமுறை பொதுமன்னிப்பினை வழங்கும் அறிவிப்பினை கடந்தவாரம் சிறீலங்கா அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## குளியாப்பிட்டி பரிவர்த்தனை நிலையத்தில் குண்டு வெடிப்பு

களுத்துறை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பினைப் போன்று குளியாப்பிட்டி தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திலும் கடந்த 8-ம் திகதி குண்டொன்று வெடித்துள்ளது.

இக்குண்டினை யார் பொருத்தினார்கள், எவ்வாறு அது வெடிக்க வைக்கப்பட்டது என்ற காரணங்களை அறிய சிறீலங்கா புலனாய்வுத்துறை தற்போது பெருமுயற்சி எடுத்து வருகிறது.

இக் குண்டு வெடிப்பின் காரணமாக தொலைபேசி சேவையின் இலத்திரனியல் பகுதி சேதமடைந்துள்ளது.

## அரசின் அழுத்தங்களால் சிறீலங்காவிலிருந்து விலகுகிறோம்

*- சர்வதேச சமாதான படை -*

இலண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனமான சர்வதேச சமாதான படையணி (பீஸ் பிரிகேட்ஸ் இன்டர்நஷனல்) சிறீலங்கா அரசின் கெடுபிடிகளாலும், அழுத்தங்களாலும் தொடர்ந்து இயங்க முடியாமல் இருப்பதால் தமது சேவையை சிறீலங்காவிலிருந்து விலக்குவதாக உத்தியோகபூர்வமாக கடந்த 6-ம் திகதி அறிவித்துள்ளது.

1989-ம் ஆண்டு முதல் தனது பணியினை சிறீலங்காவில் ஆரம்பித்த இவ் அமைப்பு மட்டக்களப்பு பகுதியில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தமது பணிகளை மேற்கொண்டு வந்தது. ஆனால் சிறீலங்கா பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இந்த அமைப்பின் பணிக்கு பெரும் முட்டுக்கட்டைகளையும் அழுத்தங்களையும் போட்டு வந்தனர்.

குறிப்பாக கடந்த மார்ச் மாதம் இந்த அமைப்பிற்கு புதிய உத்தரவொன்றினை போட்ட சிறீலங்கா அரசு அமைப்பின் சகல அறிக்கைகளும் தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே வெளியிடவேண்டுமெனவும் கோரியிருந்தது.

இக் கட்டுப்பாட்டுக்கு உடன்பட மறுத்த அமைப்பு, மனித உரிமை தொடர்பான பார்வையாளர் மீது இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சிறுவர்கள் ஆயுதமேந்துவதாக கூறுவதில் உண்மை இல்லை

*- ஐ.நா. பிரதிநிதியிடம் மன்னார் ஆயர்*

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில சிறுவர்கள் ஆயுதம் ஏந்த வைப்பதாக கூறப்படுவதில் உண்மை இல்லை. சிறீலங்கா அரசு இதனை புலிகளுக்கு எதிரான ஒரு பிரச்சாரமாகவே தூக்கிப் பிடிக்கிறது. புலிகள் எல்லோரையும் ஆயுதம் ஏந்த வைப்பதில்லை, மாறாக திறமைகளை ஆராய்ந்து கல்வி, தொழிற்பயிற்சி போன்றவற்றிலும் ஈடுபடுத்துகின்றனர்.

இவ்வாறு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாக வன்னிக்கு வந்திருந்த ஒலாரா ஒட்டுண்ணவை சந்தித்த மன்னார் ஆயர் ராயப்பு யோசப் எடுத்துரைத்துள்ளார்.

தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்துகிறார்கள் என்பதை பலரும் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏன் ஆயுதம் ஏந்துகின்றனர் என்பதை எவரும் சற்றும் சிந்தித்ததில்லை. உதாரணமாக வன்னிச் சிறார்களை எடுத்துக்கொண்டால் பிறந்ததிலிருந்தே இதுவரை அமைதியாக வாழ அவர்களுக்கு வழி கிடைத்ததா? எத்தனை தடவைகள் நாம் அரசிடம் இவர்களது அவல நிலையினை எடுத்துரைத்தபோதிலும் பலனேதும் ஏற்படவில்லை.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஈழத் தமிழர்களின் நிலை குறித்து தென்னாபிரிக்க தமிழர்கள் கொதிப்பு

*– தென்னாபிரிக்க தூதுவர்*

ஈழத் தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை குறித்து தென்னாபிரிக்காவில் வாழும் தமிழ் மக்கள் கொதிப்புக் கொண்டுள்ளனர். அவர்களின் முழு விருப்பமும் ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்று கிடைக்க வேண்டுமென்பதாகும்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கிளேமோர் தாக்குதலில் பொலிஸ் வாகனம் சேதம்

கோண்டாவில் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி நண்பகல் வேளையில் இரண்டு கிளேமோர் கண்ணிவெடித் தாக்கு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில்
ஆச்சீஸ்
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள



**Archie'S** Tel: 0181-2053652
205, Edgware Road, Colindale-Nw 9.